பக்கங்கள்:32 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 26 ஞாயிற்றுக்கிழமை 12.12.2021 கதிர் 37

### இது ரகசியம் அல்ல!

ரெலோ ஏற்பாட்டில் தமிழ்க் கட்சித் தலைவர்களின் கூட்டம் இன்று கொழும்பில். நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் வைத்து இதற்கான அழைப்பு சம்பந்தனுக்கு வழங்கப்பட்டது. ரெலோத் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும், புளொட் தலைவர் பக்கம்02 »

## தமிழ்க் கட்சித் தலைவர்கள் இன்று கொழும்பில் கூட்டம்

### ரெலோ முன்முயற்சியில் நடக்கின்றது

தமிழ் பேசும் சமூகத்தின் அரசியல் உரிமைகளுக்காகத் தமிழ் பேசும் கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் முக்கிய கூட்டம் இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ ☞23

## இலங்கை ராணுவ அதிகாரிகள் இருவருக்கு அமெரிக்கா தடை!

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் மேலும் இரண்டு இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்றுமுன்தினம் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான தடைகளை அமெரிக்க வெளியுறவுத்துறை மேலும் விரிவுபடுத்தியுள்ளது.

அமெரிக்காவின் விரிவுபடுத்தப்பட்ட தடைப்பட்டியலில் கொழும்பில் 2008/2009 ☞23

# 13ஐக் கட்டிப் பிடிப்போரை ஏற்றுக்கொள்ளவே முடியாது

## அடித்துக் கூறுகின்றார் சுமந்திரன்



(கலையமுதன்)

யாழ்ப்பாணம், டிசம்பர் 12

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் நாங்கள் செல்வதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கும் பொழுது, 13ஐ அமுல்படுத்த ஒன்றுகூடுகிறோம் என்று சில கட்சிகள் சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாதென தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். ☞23

## 22 பேர் சாவு

நாட்டில் மேலும் 22 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 595 ஆக அதிகரித்துள்ளது.

## யாழில் சாணக்கியர்களின் கருத்துப் பகிர்வு

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம், டிசெ. 12

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடா ளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந் திரன், இரா.சாணக்கியன் ஆகியோர் தமது ஆதரவாளர்களுடன் பங்கேற்ற கலந்துரையாடல் நேற்று யாழ்ப்பாணத் தில் நடைபெற்றது.

நேற்று மாலை 3 மணியளவில் சுன்னாகத்திலுள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் 'தமிழர் தம் அபிலாஷைகளில் சர்வதேச நாடுகளின் கரிசனை தொடர்பாக சாணக்கியர்களின் கருத்துப் பகிர்வு' என்ற தலைப்பில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன் ஆகியோர் சமகால அரசியல் கள நிலைவரம் தொடர்பில் கருத்துத் தெரிவித்தனர்.

## பால்மாவுக்கு மீண்டும் தட்டுப்பாடு

நாட்டின் சில பாகங்களில் மீண்டும் பால்மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சில பகுதிகளின் பெரும்பாலான வர்த்தக நிலையங்களில் ☞23

## பொரளையில் பட்டப்பகலில் கொள்ளை

பொரளை நகரில் உள்ள நகையகம் ஒன்றில் நேற்று பிற்பகல் கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

முகத்தை முழுமையாக மறைக்கும் வகையிலான முகக்கவசம் அணிந்து மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த ☞23

## மீண்டும் மின்சாரத் தடை

நாட்டின் சில இடங்களில் மீண்டும் மின்சார விநியோகத் தடை அமுலாகவுள்ளது.

நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்தில் உள்ள ஒரு மின்பிறப்பாக்கி பழுதடைந்த நிலையில், அது தேசிய மின் கட்டமைப்பில் இருந்து நீக்கப்பட்டுள்ளது.

இதனால் எதிர்வரும் ☞23

## நாளை முதல் பூஸ்டர் தடுப்பூசி

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நாளை தொடக்கம் எதிர்வரும் 22ஆம் திகதி வரை 30 வயதுக்கு மேற்பட்ட முதல் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டவர்களுக்கு மூன்றாம் கட்ட பைசர் பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது. ☞23

## 8,200 கோழிகள் தீயில் கருகிப் பலி

கம்பஹா, கொட்டதெனிய – வராகல பகுதியிலுள்ள கோழிப் பண்ணையில் ஏற்பட்ட தீப்பரவலில் 8 ஆயிரத்து 200 கோழிகள் பலியாகின.

நேற்று முற்பகல் இந்தத் தீப்பரவல் ஏற்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீர்கொழும்பு மற்றும் கம்பஹா தீயணைப்புப் பிரிவினரால், குறித்த தீப்பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

தீப்பரவலுக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை. சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

சிவ சிவ
திருச்சிற்றம்பலம்
தென்னாடு
மார்கழிப் பெருவிழா - 2021
தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமும், சைவ மாணவர் சபையும் இணைந்து நடாத்தும் மார்கழிப் பெருவிழா இம்முறை சிலை நல்லோரை மார்கழித் திங்கள் 10ம் நாள் சனிக்கிழமை மற்றும் 11ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (டிசம்பர் 25 மற்றும் 26) திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடாத்த திருவருள் கைகூடியுள்ளது.
காலம் - மார்கழித் திங்கள் 10ம் நாள் 11ம் நாள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை (டிசெம்பர் 25 மற்றும் 26)
இடம் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - சபாலிங்கம் அரங்கம்
தீநுண்மி பெருந்தொற்றுப் பரவல் ஒழுங்குகளால் குறிப்பிட்ட இருக்கைகள் மட்டுமே உள்ளமையால் பங்குபற்ற விரும்பும் அடியவர்கள் தென்னாடு மடத்தில் முன்பதிவு செய்து கொள்ளுங்கள். முன்பதிவு செய்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.
தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 021 221 2739 075 653 3111

**இனி இது...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

த.சித்தார்த்தனும் நேரில் வழங்கினர். இருவரும் சேர்ந்து வழங்கியமையால் அவர்களை கௌரவிக்கின்றமைக்காகவாவது கட்டாயம் சம்பந்தன் கூட்டத்துக்குப் போவார் என்று நினைக்கிறேன்.

ஆனாலும் நேற்றுக் காலை வரை, இன்று கூட்டம் நடைபெறும் இடமும் நேரமும் சம்பந்தனுக்கு உறுதிப்படுத்தப்படவில்லை என்பதை என்னால் அறிந்து கொள்ள முடிந்தது. அதிலும் ஏதேனும் சூக்குமம் பொதிந்திருக்குமோ என்னவோ...?

இந்த அழைப்புக்களைப் பெற்றுக் கொண்ட சமயம் சம்பந்தனும், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனும், சம்பந்தப்பட்ட தரப்பிடம் ஒரே கேள்வியை எழுப்பினர்.

"இந்தக் கூட்டத்துக்கு சுமந்திரன் அழைக்கப்படவில்லையா?" – என்பது தான் கேள்வி.

"கட்சித் தலைவர்களுக்கு மட்டும்தான் அழைப்பு. ஏனையோருக்கு இல்லை" – என்பது பதில்.

கேட்ட இரண்டு வயோதிபர்களுக்கும் விடயம் விளங்கியிருக்குமோ என்னவோ..! சுமந்திரனை வெட்டி, அவர் இல்லாமல் தமிழரின் பலமான அரசியல் கட்டமைப்பு ஒன்றைத் தாங்கள் கட்டியெழுப்புவது தான் இந்தக் கூட்டங்களின் நோக்கம் என்பதை இந்த இரண்டு கிழட்டு அரசியல் வாதிகளும் புரிந்து கொள்ளவில்லை, அதனால்தான் இப்படி விளங்காமல் கேள்வி கேட்கின்றார்கள் என்று ஏற்பாட்டாளர்கள் யோசித்திருப்பார்கள்.

ஆனால் எனக்கு என்னவோ இரண்டு மூத்த அரசியல்வாதிகளும் விடயம் புரிந்து கொண்டுதான் மனத்துக்குள் அதை எண்ணியபடி இப்படிக் கேட்டிருப்பார்கள் என்று தோன்றுகின்றது.

இந்தக் கூட்டத்துக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருக்கின்றதா என்பதை அறிய விரும்பிய கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன், அது குறித்து மாவையிடம் கேட்டுச் சொல்லுங்கள் என்று சுமந்திரனைப் பணித்திருக்கின்றார்.

நேற்று மாலை மாவை சேனாதிராசாவின் மகனின் திருமண வரவேற்பு நிகழ்வு. முழுத் தமிழ் அரசியல்வாதிகளும் திரண்டிருந்தனர். சந்தோஷமாகவும், சிறப்பாகவும் திருமணமும், வரவேற்பும் நடந்தேறின. மாவை சேனாதிராசா – ரவிராஜ் குடும்பங்களின் சிறப்பு மெச்சப்பட்டது. மிக்க மகிழ்ச்சி.

இந்தத் திருமண வரவேற்பில் கலந்து கொள்ளச் சென்ற சுமந்திரன், தலைவர் சம்பந்தன் அறிந்து தெரிவிக்கும்படி கூறிய விடயத்தை மாவையிடம் கேட்டார்.

நேற்று மாலை 5 மணி வரை – சுமந்திரன் அக்கேள்வியை கேட்கும் வரை – அக்கூட்டம் குறித்து மாவை சேனாதிராசா அறிந்தேயிருக்கவில்லை. அவருக்கு அதுவரை அழைப்பும் கொடுக்கப்படவில்லை.

ரெலோ இப்போது கூட்டும் கூட்டத்தின் முன் ஆயத்தக் கூட்டம் யாழ்ப்பாணம் திண்ணை ஹோட்டலில் நடந்த போது அதில் தமிழரசுத் தலைவர் மாவை கலந்து கொள்ளவில்லை.

அதற்கு முன்னரும் பின்னரும் மெய்நிகர் முறையில் நடந்த தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் இவ்விடயம் விரிவாக ஆராயப்பட்டிருந்தது.

மேற்படி அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் ஒன்று திரட்டும் கூட்டத்தை இலங்கைத் தமிழரசே முன்னெடுக்க வேண்டும் என்ற கருத்து அந்த அரசியல் குழுக் கூட்டத்தில் பலமாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்தக் கருத்தை நேற்று மாலை தமது மகனின் திருமண வரவேற்பு நிகழ்ச்சிகளுக்கு இடையே தம்முடன் உரையாடிய சுமந்திரனுக்கு சுட்டிக்காட்டினார் மாவை.

"இந்தக் கூட்டத்தை நாங்கள்தானே கூட்டுவோம் எனத் தீர்மானித்திருந்தோம். அவர்கள் கூட்டும் கூட்டத்தில் பங்குபற்றுவதில்லை என்றுதானே பேசிக் கொண்டோம்...?" – என்று பழைய விடயங்களை சுமந்திரனிடம் கூறி, தமக்குத் தாமேயும் நினைப்பூட்டிக் கொண்டார் மாவை.

எனினும், நேற்று சுமந்திரன் தரப்பு திருமண வரவேற்பு நிகழ்வில் இருந்து புறப்பட்ட போது புளொட் தலைவர் சித்தார்த்தன் அங்கு வந்து இறங்கினார்.

இன்றைய கூட்டத்துக்கான அழைப்பு கொழும்பிலிருந்து ரெலோவினால் சித்தர் மூலம் நேற்றிரவு மாவையிடம் ஒப்படைக்கப்பட்டதா, சித்தருடன் பேசி விட்டு, விடி காலை அவருடன் சேர்ந்து கொழும்புக்குப் பயணித்து, இன்றைய கூட்டத்தில் மாவை கலந்து கொள்வாரா என்பவற்றையெல்லாம் இன்றுதான் பார்க்க வேண்டும்.

இதற்கிடையில், நேற்றிரவு யாழ்ப்பாணத்தில் நின்ற புளொட் தலைவர் சித்தர் இன்று கொழும்புக் கூட்டத்தில் பங்குபற்ற மாட்டார் என்றும், அவரின் பிரதிநிதியே பங்குபற்றுவார் என்றும் செய்தி வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

எல்லாத் தலைவர்களும் இன்றைய கொழும்புக் கூட்டத்துக்கு வருவார்கள், பங்கு பற்றுவார்கள் என்று நாம் நேற்று மாலை செய்தி வெளியிட்டிருந்தாலும், கடைசி நேரப் பின்வாங்கல்களுக்கும் தாராளமாக இடமிருப்பதாகவே தெரிகின்றது.

இன்று விடிந்தால் நிலைமை ஓரளவுக்குத் தெளிவாகும்.

★ ★ ★

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் மருத்துவர் ப.சத்தியலிங்கம், கட்சியின் நிறைவேற்றதிகாரி. கட்சியின் மத்திய குழுவின் தீர்மானத்தைச் செயற்படுத்த வேண்டிய உயர் அலுவலர்.

ஆனால், கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவின் 'கிளார்க்' போல பணி புரிகின்றார் என்று நேற்று குறிப்பிட்டிருந்தேன். உதாரணத்துக்கு ஒன்று.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் வல்வை நகர சபைக்குத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவர் கருணானந்தராஜா (இப்போது காலமாகி விட்டார்). உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களில் மற்றிருவர் சிவபாத சுந்தரம் மற்றும் சதீஷ். இந்த மூவரும் கடந்த பொதுத் தேர்தலின் போது கூட்டமைப்புக்கு எதிராக மேடையேறி அரசியல் பிரசாரம் செய்தவர்கள். அதனால் அந்த மூவரையும் கட்சியிலிருந்து வெளியேற்றும் முடிவை கட்சியின் மத்திய குழு எடுத்தது. அதன்படி கட்சியின் பொதுச் செயலர் மருத்துவர் சத்தியலிங்கம் நடவடிக்கை எடுக்கப் பணிக்கப்பட்டார்.

சம்பந்தப்பட்டோருக்கு இதுபற்றி அறிவித்து, கட்சியின் முடிவைத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருக்கும் அறிவித்தார் கட்சியின் பொதுச் செயலாளர்.

அதன்படி மூவரையும் நகர சபை உறுப்பினர் பதவியில் இருந்து விலக்க தெரிவத்தாட்சி அதிகாரி நடவடிக்கை எடுத்தார்.

இதற்கிடையில், அந்த மூவரில் இருவர் சார்பில் மாவை சேனாதிராசாவிடம், கூட்டமைப்பில் இல்லாத தரப்புகள் அணுகின. மாவை கட்சிச் செயலாளருக்கு அழைப்பு எடுத்தார்.

அவ்வளவுதான். தாம் மேற்படி மூவரில் இருவருக்கு எதிராக அனுப்பிய ஒழுக்காற்று நடவடிக்கைக் கடிதத்தை கைவாங்குகிறார் எனத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவித்தார் சத்தியலிங்கம்.

விடயத்தைக் கேள்விப்பட்ட கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களும் வேறு பிரமுகர்களும் பொதுச் செயலாளர் மீது பாய்ந்தனர். மத்திய குழுவின் முடிவை நீங்கள் எப்படி விலக்க முடியும் என அவர்கள் வைதனர். அவ்வளவுதான். தாம் கைவாங்கிய கடிதத்தை மீண்டும் கைவாங்குகின்றார் என்று தெரிவித்தாட்சி அலுவலருக்கு அறிவித்தார் சத்தியலிங்கம்.

அத்துடன் விடயம் முடியவில்லை. மீண்டும் அதே தரப்பினர் மாவை சேனாதிராசாவுக்கு அழுத்தம் கொடுக்க, அவர் தம்பாட்டுக்கு கட்சிப் பொதுச் செயலாளர் மீது அழுத்தம் கொடுத்தார். கட்சிப் பொதுச் செயலாளர்தான் அவரின் 'கிளார்க்' ஆயிற்றே...!

தாம் முதலில் வழங்கிய கடிதத்தை கைவாங்கிய மருத்துவர் சத்தியலிங்கம், அப்படிக் கைவாங்கிய கடிதத்தை திரும்பக் கைவாங்கியிருந்தார் அல்லவா? மாவையின் மீள் அழுத்தத்தை அடுத்து அந்தக் கடிதத்தையும் திரும்பக் கைவாங்கினார் அவர்.

என்ன வாசிக்கத் தலையைக் சுற்றுறதா? சுருக்கமாக மீளக் குறிப்பிடுகிறேன்.

முதலில் மூன்று பேரை விலக்கிக் கடிதம். பின்னர் அதில் இரண்டு பேரின் ஒழுக்காற்று நடவடிக்கையை விலக்கிக் கடிதம். அதன் பின்னர் அந்தக் கடிதத்தை விலக்கி ஒழுக்காற்று நடவடிக்கை செயற்படுவதாகக் கடிதம். திரும்பவும் ஒழுக்காற்று நடவடிக்கை விலக்குவதாகக் கடிதம்.

– இதுதான் நடந்தது. இதற்கு மேலும் உங்களுக்கு விளங்காவிட்டால் நான் ஒன்றும் செய்ய முடியாது. இப்படித் தனது கடிதங்களைக் கொடுப்பதும் மீளப் பெறுவதுமான 'கிளார்க்' வேலையைத் தான் தமிழரசுப் பொதுச் செயலாளர் செய்து கொண்டிருக்கின்றார்.

இப்போது மூன்றாவது நபர் சதீஷ் சம்பந்தப்பட்ட விவகாரம். அவருக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை விலக்கப்படுவதாக இதுவரை தமிழரசுப் பொதுச் செயலாளர் கடிதம் கொடுக்காததால் அவரைப் பதவி விலக்கும் முன்னறிவித்தலை தெரிவத்தாட்சி அலுவலர் வழங்கினார். இரண்டு வாரத்தில் அவர் பதவி விலகுவது பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வரும் என்று நிலைமை.

கூட்டமைப்பில் இல்லாத தரப்புகள் மீண்டும் மாவையிடம் ஓடின. மாவையிடமிருந்து மருத்துவர் சத்தியலிங்கத்துக்கு – மாவையின் 'கிளார்க்குக்கு' – உத்தரவு பறந்தது. சதீஷுக்கு எதிரன ஒழுக்காற்று நடவடிக்கையை விலக்கும் கடிதத்தை அனுப்பி வைத்திருக்கின்றார் சத்தியலிங்கம்.

கட்சிக் கட்டுப்பாட்டை மீறுவோருக்கு விளக்கம் கேட்டு கட்சிப் பொதுச் செயலாளர் எழுத்தில் கடிதங்களை அனுப்புவார். அத்தகையோரிடம் தலைவர் மாவை சேனாதிராசா தொடர்பு கொண்டு நீங்கள் விளக்கம் கொடுக்கத் தேவையில்லை என்பார். அத்தோடு விடயம் முடிந்து விடும்.

தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் என்ற பெயரை வைத்துக் கொண்டு இப்படி கிளார்க் வேலை பார்ப்பது கட்சிக்கும் இழுக்கு, பதவிக்கும் இழுக்கு.

மாகாண சுகாதார அமைச்சராக மருத்துவர் சத்தியலிங்கம் பெரிய விஸ்வரூபத் தோற்றம் காட்டியவர். ஆளுமை மிக்கவர். பணத்துக்கு விலை போகாதவர். ஊழல் செய்யாதவர். சளைக்காத சேவையாளர்.– இப்படிப் பல் திறமை வாய்ந்தவர். தமிழரசில் அடுத்த தலைமுறையின் நம்பிக்கை நட்சத்திரம். வன்னிக் காவலான உருவாக வேண்டியவர், மாவையின் 'எடுபிடி'யாகித் தம்மை சிறுமைப்படுத்திக் கொள்கின்றார் என்பது தான் என் ஆதங்கம். அவர் புரிந்து கொண்டாராயின் தமிழரசும் தப்பும். அவ்வளவுதான்.

– மின்னல் –

# வல்லைப் பாலத்தடியில் விபத்து; சாரதி படுகாயம்

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணத்தில் வீதி புனரமைப்புப் பணிகளில் ஈடுபடும் நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தான கப் ரக வாகனம் வல்லைப் பாலத்தில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

வல்லைப் பாலத்தில் நேற்று இடம் பெற்ற குறித்த விபத்தில், சாரதி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட் டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்



தமிழ்ச்சுடர், ஞான ஏந்தல், அறநெறிச்சுடர், கலாபூஷணம், பண்டிதை

திருமதி வைகுந்தம் கணேசபிள்ளை

(அதிபர் -அறநெறிப்பாடசாலை, அமைப்பாளர் - திருநெறிய தமிழ் மறைக் கழகம், இலக்கியத்துறை பொறுப்பாளார் - இணுவில் பொது நூலகம்)

அவர்களுக்கு அண்மையில் "யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ்த் துறையின் இரண்டாவது அனைத்துலக தமிழியல் ஆய்வு மாநாட்டில் கௌரவம் பெறும் புலமையாளர்கள் - 2021" வரிசையில் தமிழ் இலக்கிய பணிக்கு அவர் ஆற்றிய சேவையை கௌரவிக்கும் முகமாக சிறப்பு கௌரவம் வழங்கப் பட்டது. அந்த வகையில் இவர் 32 இற்கு மேற்பட்ட நாட்டிய நாடகங்களை இயற்றியுள்ளார் இவற்றில் மாகாண தேசிய விருது 10 இற்கு மேற்பட்டவை பெற்றுள்ளன. இவரினால் 25 இற்கு அதிகமான நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் "ஆசிரியர் மேன்மை விருதும்" வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அவரது சமய, தமிழ் இலக்கிய பணிகள் பரராஜசேகரன் அருளால் மேலும் சிறக்க எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர் :- திருநெறிய தமிழ் மறைக்கழகத்தினர், ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் அறநெறிப்பாடசாலை, இணுவில் பொது நூலகம் சனசமூக நிலையத்தினர், இணுவில் வாழ் மக்கள்.

# 30 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கு வடக்கில் 13 ஆம் திகதி முதல் பூஸ்டர்



## வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவிப்பு

வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் எதிர் வரும் திங்கட்கிழமை முதல் 30 வயதுக்கு மேற் பட்டவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

அத்தோடு, 18 வயதிற்கு மேற்பட்ட பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் தொழிலாளர்கள் மற்றும் நோய்பரவும் ஆபத்துள்ள மக்கள் தொகுதியினருக்கும் (தொழிற்சாலைகள் மற்றும் பணியிடங்களில் பணிபுரிவோர், சுகாதாரத் துறை சாராத முன்னிலை ஊழியர்கள்) மேலதிகமாக பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவித்த அவர் -

மேற்குறிப்பிட்டவர்கள் இரண்டாவது தடுப்பூசியைப் பெற்று ஆகக்குறைந்தது மூன்று மாத இடைவெளியின் பின்னர் இந்தத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளலாம் என சுட்டிக்காட்டியுள்ளார்.

இரண்டுதடவைகள்தடுப்பூசியைப்பெற்றுக்கொண்டவர்களில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்கள் அவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்ட நாளிலிருந்து 06 மாத கால இடைவெளியின் பின்னர் இந்தத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தத் தடுப்பூசிகள் வழங்கப்படும் நிலையங்கள் தொடர்பாக அந்தந்த பிரதேசங்களுக்குரிய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மூலம் மக்களுக்கு அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பொருளாதார ரீதியில் பின்னிற்கும் மாணவர்களுக்கு ஆஸ்திரேலியா உறவுகளின் நிதிப் பங்களிப்பில் உதவி





வவுனியா, டிசெ. 12

பொருளாதார ரீதியில் பின்னிற்கும் மாணவர்களை ஊக்கப்படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் ஆஸ்திரேலியா உறவுகளின் நிதிப் பங்களிப்பில் வவுனியா மாவட்டத்தில் ஓமந்தை பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று மாணவர்களுக்கு புளியங்குளம் தெற்கில் பழையவாடியில் வசிக்கும் ஒரு மாணவிக்கும் மொத்தமாக நான்கு மாணவர்களுக்கு சைக்கிள்கள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் வழங்கி வைக்கப்பட்டன.

மேற்படி செயற்றிட்டத்தில் ஓமந்தை உப தபாலதிபர், மற்றும் புளியங்குளம் தெற்கு அபிவிருத்தி உத்தியோகத்தர், புளியங்குளம் செயற்பாட்டாளர் அகிலேஸ், தவபாலன் ஆகியோர் கலந்து கொண்டு சைக்கிள்களை வழங்கி வைத்தனர்.







யாழ்ப்பாண கல்லூரி விவசாய நிறுவனத்தில் 4/12/2021 அன்று மார்கழி மாதத்துடன் கல்வி ஆண்டை முடித்து 6 மாத கால (NVQ 5) அல்லது 1 வருடகால (NVQ 6) தொழில் முறைப் பயிற்சிக்காக செல்லவிருக்கும் மாணவர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு வெளியே NVQ 5&6 இடம் பெற்றது. NVQ தரம் 5&6 புதிய வகுப்புக்கள் ஜனவரியில் ஆரம்பிக்கப்படும்.

டிசெம்பர் 15 ஆம் திகதி NVQ தரம் 6 ஆரம்பிக்கப்பட உள்ளது எனவே NVQ level 5 சான்றிதழ் வைத்திருக்கும் மாணவர்கள் மாத்திரமே NVQ தரம் 6 இற்கு நேரடியாக விண்ணப்பிக்கலாம் என்பதையும் அதிபர் தெரிவித்திருந்தார்.

Personal English Classes
K.Ganesh (BA.Pera)
Grade 10, GCE O/L
Literature 2022, 2023
Grade 7 - GCE O/L, A/L,
பட்டதாரிகள், தொழில்புரிவோர்
Spoken Grammar
கற்கமுடியும்.
077 766 8725
நீராவியடி, யாழ்நகர்.

காணி தேவை
யாழ்.நகர்ப் பகுதியில் வியாபார நோக்கத்திற்குரியதான ( Commercial Purpose Land )
3-4 பரப்பளவுடைய காணி தேவை.
தொடர்பு:- 076 978 9784

BRRENS
Reborn
Signature
Fashion Planet
எங்களிடம் பெண்களுக்கான அனைத்து ஆடைகளும், பிரத்யேகமான திருமணம், பூப்பனித நீராட்டு விழா மற்றும் சுப நிகழ்வுகளுக்கு சாறி பிளவுஸ் ஆரிவேக்ஸ் சிறந்த முறையில், குறித்த தவணையில் செய்து தரப்படும்.
பிறென்ஸ் பஷன் பிளானட்



சிவன் கோவில் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
Fb.Brrens Fashion Planet
Email.brensfashionplanet@gmail.com
ஆண்கள், பெண்களுக்கான அனைத்து ஆடைகள்
075 527 9110
077 332 1937
021 2221 2777

இறைச்சிக் கோழி விற்பனை
புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இன்றைய அரங்கேற்றுகை

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோவின்) முன்முயற்சியில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் இன்று கொழும்பில் கூடுகின்றார்கள்.

பெரும்பாலும் அழைக்கப்பட்ட தலைவர்கள் எல்லோரும் இன்றைய கூட்டத்துக்கு சமுகம் தர இசைந்திருக்கின்றார்கள் என்ற செய்தி சில தரப்புகளில் இருந்து வெளியானமை நல்ல சகுனமே.

என்ன நோக்கத்துக்காக இந்தக் கூட்டம் கூடுகின்றது, எத்தகைய பொது நிலைப்பாட்டை எடுப்பதற்கு அத்தலைவர்கள் இணங்குவார்கள் என்பவை நேரத்துடன் ஹேஸ்யம் கூற முடியாத விடயங்கள்.

ஆனாலும், உலகின் கண்களின் முன்னால் தமிழ்ப் பேசும் மக்களின் தலைவர்கள் எல்லோரும் ஒன்றுபட்டு நிற்கின்றார்கள் என்ற தோற்றப்பாடு தமிழர் தரப்புக்கு வலிமை தரக் கூடிய ஒன்று. அந்த வகையில் இது வரவேற்கத்தக்க – பாராட்டத்தக்க – அரசியல் முயற்சிதான்.

ஆனாலும், இதில் இரண்டு விடயங்கள் உள்ளன.

தமிழ்ப் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு – இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு – தீர்வு காணும் விடயத்தில் குறைந்த பட்ச வேலைத்திட்டம் ஒன்றுக்கு இணங்கும் உடன்பாடு, இன்று கூட்டத்துக்கு வரும் கட்சிகளின் தலைவர்களிடையே ஏற்படும் என்பதற்கான நம்பிக்கை ஏதும் இப்போதைக்கு இல்லை. அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் – பின்னணியில் அடித்தளக் கட்டுமான முயற்சிகள் – எவற்றையும் ஆரம்பிக்கக் கூட இல்லாமல் – வெறும் ஆரவாரக் கூட்டமாக இன்றைய சந்திப்பு நடந்து ஒப்பேறுவதில் பயனேதும் கிட்டும் என்று நம்புவதற்கு இடமில்லை.

கட்சித் தலைவர்கள் என்ற பெயரில் அழைப்புக்கு நியாயம் கற்பிக்கப்பட்டாலும், அழைப்புகள் நியாயமாக வழங்கப்படவில்லை என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய விவகாரமாக இருக்கின்றது.

பல கட்சிகள் பெயருக்கே இயங்குகின்றன. கட்சிக்கும் செல்வாக்கு இல்லை, தலைவர்களுக்கும் செல்வாக்கில்லை. அவர்களும் அழைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

சில கட்சிகளுக்குச் செல்வாக்குண்டு, தலைவர்களுக்கு இல்லை. உள்கட்சிக் கூட்டங்களைக் கூட்டினால் வாங்கிக் கட்டும் நிலையில் இருக்கும் இத்தலைவர்கள், கடைசி நேர அறிவித்தலைக் காரணம் காட்டி, கட்சியின் உள்மட்டத்தில் ஆராயமல் இன்றைய கூட்டத்துக்கு வரக் கூடும், உள்கட்சிக் கூட்டங்களைக் கூட்டியிருந்தால் இன்றைய கூட்டத்துக்குச் செல்ல அனுமதி கிடைத்திருக்குமோ தெரியாது.

தமிழர் அரசியல் பரப்பில் இன்று உள்ளூரிலும், உள்நாட்டிலும், சர்வதேசப் பரப்பிலும் ஆளுமை செலுத்துவோர் இன்றைய கூட்டத்துக்கு அழைக்கப்படவில்லை. கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு என்ற பெயரில் ஏற்பாட்டாளர்களை நடத்தும் இந்தத் திருவிழாவை நோக்கும்போது Hamlet without the Prince (of Denmark) என்ற ஆங்கில அடியே நினைவுக்கு வருகின்றது.

இன்றைய கூட்டத்தில் பங்குபற்றும் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தனும், தமிழ் மக்கள் கூட்டணித் தலைவர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனும்தான் இன்னார் அழைக்கப்படவில்லையா என்ற கேள்வியை எழுப்பினர் என்று தகவல்.

போதாக்குறைக்கு தமிழ்ப் பேசும் மக்கள் என்ற பெயரில் முஸ்லிம் தலைவரான ஹக்கீமை அழைத்த ஏற்பாட்டாளர்கள் ரிஷாத் பதியுதீனுக்கு அழைப்புக் கொடுத்தார்களா என்பது தெரியவில்லை.

அந்த வகையில், டென்மார்க் இளவரசன் என்ற பாத்திரமே இல்லாமல் 'ஹம்லட்' அரங்காற்றுகை நிகழ்ந்த மாதிரி இன்றைய திருவிழா நடந்தேறாமல் இருந்தால் சரி.

# பொருளாதார நெருக்கடியை சமாளிக்க அரசாங்கத்துக்கு கைகொடுக்கத் தயார்

## சஜித் உத்தரவாதம்



பொருளாதார நெருக்கடியை சமாளிக்க எதிர்க்கட்சிகள் அரசாங்கத்துக்கு கை கொடுக்கத் தயாராக இருக்கின்றன என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர், தனியார் பிரஜைகளால் வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் வெளிநாட்டு நாணயங்கள் இலங்கை மத்திய வங்கியால் பலவந்தமாக மாற்றப்படுகின்றன எனத் தெரிவித்தார். இது தனிப்பட்ட சொத்துக்களைக் கைப்பற்றும் முயற்சி எனவும் அவர் குற்றம் சுமத்தினார்.

இவ்வாறான நடவடிக்கைகளின் இறுதி முடிவுகள் தொடர்பாக அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர், ஏற்றுமதிகள் வெளிநாடுகளில் அலுவலகங்களைத் திறப்பதுடன், தமது இலாபம் ஈட்டும் முயற்சிகளை வேறு இடங்களுக்கு நகர்த்துவதாகவும் இது இலங்கையின் வெளிநாட்டு வருமானம் படிப்படியாகக் குறைவதற்கு வழி வகுக்கும் எனவும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் பிரதமரை பேசுமாறு கோரிய அவர், பின்னர் நாட்டை மீட்டெடுப்பதற்கான வழிமுறைகளையும் தாங்கள் ஆதரிப்போம் எனத் தெரிவித்தார்.

மேலும், உரத்துறை அமைச்சரும் விவசாய அமைச்சரும் நெருக்கடியை சமாளிக்க முடியாமல் இராணுவத் தளபதியிடம் உர நெருக்கடியை கையளிப்பதற்கான நடவடிக்கை விவேகமற்ற முடிவு எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கை இராணுவ அதிகாரிகள் இருவர் அமெரிக்காவிற்குள் நுழைய அதிரடித் தடை!



மனித உரிமை மீறல்களுக்காக மேலும் இரண்டு இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது.

மேலும் போர்க்குற்றங்கள் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான தடைகளை வெளியுறவுத்துறை மேலும் விரிவுபடுத்தியுள்ளது.

'டிரின்கோ 11' காணாமல்போன சம்பவங்களில் தொடர்புடைய இலங்கை கடற்படை புலனாய்வு அதிகாரி சந்தன ஹெட்டியாராச்சி மற்றும் 8 தமிழர்களைக் கொலை செய்த சம்பவத்தில் தொடர்புடைய சுனில் ரத்நாயக்க என்ற சிப்பாய் ஆகியோருக்கு இப்போது அமெரிக்காவுக்குள் நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களது குடும்பத்தினரும் அமெரிக்காவிற்குள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது.

போர்க்குற்றங்களில் ஈடுபட்டதற்காக அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்ட இரண்டாவது மற்றும் மூன்றாவது இலங்கைப் படையினர் இவர்கள் ஆவர்.

2020 ஆம் ஆண்டில், இலங்கை இராணுவத்தளபதி சவேந்திர சில்வா அமெரிக்காவிற்குள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டது, 'அவரது கட்டளைப் பொறுப்பின் மூலம், மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபட்டமை பற்றிய நம்பகமான தகவல்கள் காரணமாக. எங்கள் வெளியுறவுக் கொள்கையின் மையத்தில் மனித உரிமைகளை வைப்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.

மேலும் மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் எங்கு நடந்தாலும், அவற்றின் மீது கவனத்தை ஈர்க்கவும், பொறுப்புக்கூறலை மேம்படுத்தவும் பொருத்தமான கருவிகள் மற்றும் அதிகாரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் இந்த உறுதிப்பாட்டை நாங்கள் மீண்டும் உறுதிப்படுத்துகிறோம். - என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொழும்பில் 2008/2009 காலப்பகுதியில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் முக்கிய சந்தேக நபராக குறிப்பிடப்படும், சிறிலங்கா கடற்படையின் முன்னாள் புலனாய்வு அதிகாரியான நேவி சம்பத் என அழைக்கப்படும், லெப்.கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெற்றியாராச்சி கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# தாய், மகள் வீட்டுக்குள் தீயிட்டுக் கொலை பொலிஸாரிடம் சிக்கிய இலங்கை அகதிகள்

தமிழகத்தின் இராமேஸ்வரம் – மண்டபம் பகுதியில் தாய் மற்றும் மகள் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இரண்டு இலங்கை அகதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ரயில்வே வைத்தியசாலையில் துப்புரவுப் பணியாளராக கடமையாற்றிய 58 வயதான பெண், அவரது 34 வயதான மகளின் உடல்கள் கருகிய நிலையில் கடந்த வியாழக்கிழமை மண்டபத்திலுள்ள வீட்டிலிருந்து மீட்கப்பட்டன.

உயிரிழந்தவர்களின் வீட்டின் கட்டடப் பணிகளில் ஈடுபட்டு வந்த இலங்கை அகதிகள் மூவர் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் கள் எனப் பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

மண்டபம் முகாமில் வசித்து வரும் புதுக்கோட்டை அகதிகள் முகாம் சசிகுமார் (வயது–35), கரூர் மாவட்டம் குளித்தலை அகதிகள் முகாம் ராஜ்குமார் சம்பூர்ணலிங்கம் (வயது–30) ஆகியோரை மண்டபம் பொலிஸார் கைது செய்துள்ளமையுடன், இவர்களிடமிருந்து தங்க வளையல் 4, செயின் 2, தோடு 2 ஆகியவற்றை கைப்பற்றியுள்ளனர்.

டிசெம்பர் 6 ஆம் திகதி வீட்டிற்குள் நுழைந்த குழுவினர் தாயையும், மகளையும் தாக்கிக் கொலை செய்து உடல்களை தீயிட்டுக் கொளுத்திவிட்டு பணம் மற்றும் நகைகளை கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# எழில் கதிர்





## இறந்த செல்களை நீக்கும் திராட்சை பழச்சாறு

திராட்சை பழச்சாறு இறந்த செல்களை நீக்கும் திறன் கொண்டது. இரத்த ஓட்டத்தை சீராக்கும் திறன் கொண்டதால், சருமத்திற்கு ஈரப்பதத்தை அளித்து வறட்சியிலிருந்து காக்கிறது.

திராட்சை சாற்றை முகத்திலும் கழுத்திலும் தடவி 20 நிமிடங்களுக்கு பிறகு முகத்தை கழுவினால் சருமம் ஈரப்பதத்துடன் காணப்படும். இதனை தினமும் செய்து வந்தால் சரும வறட்சியை தடுக்கலாம்.

பாதாம் பருப்பில் உள்ள சத்துக்கள் குழந்தை பிறப்பதில் ஏற்படும் குறைபாட்டினை நீக்கும். தவிர பெண்களின் லிபிடோ சக்தியை ஊக்குவிக்கிறது. சோயா பீன்ஸ்சில் உள்ள சத்துக்கள் பெண்களீன் ஈஸ்ட்ரோஜன் ஹார்மோன் சுரப்பை அதிகரிக்கிறது.

சோயாபீன்ஸ் உயர்தர புரதம் அடங்கியது. இது மெனோபாஸ் காலத்தில் பெண்களுக்கு ஏற்படும் மன அழுத்தம் போன்றவைகளை குறைக்கிறது.

தாய்ப்பால் சுரக்காத பெண்கள் வீட்டிலேயே எளிதான மருத்துவ முறைகளை மேற்கொள்ளலாம். அதிமதுரம் பொடியை சிறிதளவு சர்க்கரை கலந்து 2 முறை பாலுடன் குடித்து வந்தால் தாய்ப்பால் பெருகும்.

குழந்தை பெற்ற பெண்களுக்கு வெள்ளை பூண்டை நல்லெண்ணெயில் வதக்கி அதனுடன் கருப்பட்டியுடன் கலந்து சாப்பிடக் கொடுத்தால் தாய்ப்பால் அதிகம் சுரக்கும்.

பச்சைப் பயிறு மாவுடன், தேன் மற்றும் பன்னீர் சேர்த்து கலந்து முகத்தில் போட்டு, அரை மணி நேரம் வைத்து கழுவினால் முகம் பளிச்சிடும்.

பெண்களின் வயிற்று சதை குறைய - சின்ன வெங்காயத்தை பசுநெய்யில் வதக்கி நன்கு மெழுகு போல் அரைத்து அதனுடன் பனங்கற்கண்டு சேர்த்து காலை - மாலை என தினமும் இருவேளை ஒரு தேக்கரண்டி அளவு சாப்பிட்டு வந்தால் அடிவயிறு சதை குறைந்து உடல் அழகாகும்.

காதில் கம்மல் போடும் இடத்தில் புண் இருந்தால் கடுக்காய், மஞ்சள் அரைத்து பூசி வர விரைவில் புண் ஆறி விடும்தயிரை தலைக்குத் தேய்த்து ஊறிய பின் சீயக்காய் தூள் போட்டுக் குளித்தால் முடி உதிர்வது நிற்கும்.



பப்பாளிக்காயைக் கூட்டு செய்து சாப்பிட்டால் பால் கொடுக்கும் தாய்மார்களுக்குப் பால் அதிகமாக சுரக்கும்.

இரவில் செம்பருத்திப் பூக்களைத் தலையில் வைத்துக் கொண்டு படுத்து காலையில் எடுப்பதால் மூளைக்கும் கண்களுக்கும் குளிர்ச்சி உண்டாகும். பேன் பொடுகு அகலும்.

மஞ்சளையும் வேப்பிலையையும் அரைத்துப் பூசி வந்தால் கரப்பான் புண்கள் விரைவில் ஆறி விடும்.

கருஞ்சீரகத்தை நீரில் ஊற வைத்து அந்நீரால் வாய் கொப்பளித்தால் பல்வலி நீங்கி விடும்.



## சருமத்தின் நிறத்தை அதிகப்படுத்த உதவும் பூசணிக்காய்

பூசணியில் உள்ள என்சைம் மற்றும் அல்பா ஹைட்ரொக்சி அமிலம் போன்றவை, இறந்த செல்களை நீக்கி சருமப் பொலிவை மேம்படுத்தும் தன்மை கொண்டவை. இதில் உள்ள விற்றமின் ஏ மற்றும் சி ஆகியவை, சுருக்கங்கள் வராமல் தடுத்து சருமத்தை மிருதுவாக்கும்.

பூசணியில் உள்ள சத்துக்கள் 'கொலாஜென்' உற்பத்தியை அதிகரிக்கும் திறன் கொண்டவை. இதன் மூலம் சருமம் இளமையாக இருக்கும்.

தோல் நீக்கிய பூசணி - 1 துண்டு
அப்பிள் சிடர் வினிகர் - அரை தேக்கரண்டி
தேன் - 1 தேக்கரண்டி
ஒரு முட்டையின் வெள்ளைக் கரு

ஆகியவற்றை எடுத்துக்கொள்ளவும். சிறிய பாத்திரத்தில் விதை நீக்கப்பட்ட பூசணியைப் போட்டு நன்றாக மசித்துக்கொள்ளவும். அதில் மேலே குறிப்பிட்ட பொருள்களை ஒன்றன் பின் ஒன்றாக சேர்த்து, கலந்துகொள்ளவும். இந்தக் கலவையை 10 நிமிடங்கள் மூடி வைக்கவும்.

முகத்தை வெதுவெதுப்பான நீரில் கழுவி துடைக்கவும். பின்னர் சிறிதளவு பூசணிக் கலவையை முகம், கழுத்து, கை மற்றும் கால்களில் பூசி மென்மையாக மசாஜ் செய்யவும். 15 நிமிடங்கள் கழித்து, பருத்தித் துணியை வெந்நீரில் நனைத்து பூசணிக் கலவையைத் துடைத்து எடுக்கவும்.

சில வினாடிகள் கழித்து, மீண்டும் மீதம் உள்ள பூசணிக் கலவையை முகத்தில் தடவி 20 நிமிடங்கள் கழித்து, குளிர்ந்த நீரால் கழுவவும். இதன் மூலம் முகம் மற்றும் கை, கால்களில் உள்ள இறந்த செல்கள் நீங்கி, சருமம் மிளிரும்.

## தலைமுடி உதிர்வை கட்டுப்படுத்தும் முட்டை



தலைமுடி உதிர்வினைக் கட்டுக்குள் கொண்டு வர நினைப்போர் நிச்சயம் இந்த முட்டை முடி மசாஜ்ஜினை பயன்படுத்தலாம். முட்டையில் அதிக அளவில் புரதம் உள்ளது.

முட்டை - 1
பால் - கால் கப்
விளக்கெண்ணெய் - 3 தேக்கரண்டி

முட்டையினை உடைத்து பாலுடன் சேர்த்து நுரை பொங்க அடித்துக் கொள்ளவும். அடுத்து அதனுடன் விளக்கெண்ணெய் சேர்த்து பிரிட்ஜில் வைத்து குளிர விட்டு மீண்டும் மிக்சியில் போட்டு அடிக்கவும். இதேபோல் 3 முறை செய்தால் முட்டை ஹேர்பேக் தயார்.

இந்த முட்டை ஹேர்பேக்கினை தலைமுடியில் தேய்த்து, 30 நிமிடங்கள் கைகளால் வேர் நுனி, வேர்க் கால்கள் என பூசி நீரில் அலசினால் தலைமுடி உறுதியாகும். முடி கொட்டும் பிரச்சினை காணாமல் போகும்.

## சுருக்கங்கள் அற்ற கண்களை பெற எளிதான அழகு குறிப்பு



தயிர் ஒரு தேக்கரண்டி அதனுடன் தேன் சம அளவு மற்றும் சில துளிகள் ரோஸ் வாட்டர் ஆகியவற்றை நன்றாக கலந்து அந்தக் கலவையை கண்களுக்கு கீழ் பயன்படுத்துங்கள். பின் 20 - 25 நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரைக் கொண்டு கழுவுங்கள்.

வெள்ளரிக்காயின் சாறு ,ஒரு துண்டு பப்பாளி மற்றும் சிறிதளவு தேனை எடுத்துக் கொள்ளுங்கள். இரண்டையும் ஒரு பிளெண்டரில் பசையாக வரும் வரை கலக்கிக் கொள்ளவும். பசையை உங்களின் கண்களுக்குக் கீழே பூசுங்கள். பின் 25 நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரில் கழுவி விடவும்.

ஒரு கிண்ணத்தில் 1 கரண்டி வாழைப்பழம் மற்றும் அவகோடோ பழத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதனை நன்றாக பிசைந்து விட்டு, அந்தக் கலவையை உங்கள் கண்ணின் கீழ் பகுதியில் தடவுங்கள். பின் சிறிது நேரம் கழித்து அதனை கழுவி விடுங்கள். சிறந்த முடிவுகளைப் பெற தொடர்ந்து தினமும் இதனை செய்யுங்கள்.

ஒரு பாத்திரத்தில் 1 தேக்கரண்டி மஞ்சள் தூள் மற்றும் 1 தேக்கரண்டி மோர் சேர்த்து கலக்குங்கள். பிறகு கண்களுக்குக் கீழ் மற்றும் முகத்தில் சுருக்கம் உள்ள பகுதிகளில் கவனமாக தடவுங்கள். 15 நிமிடங்களுக்குப் பின்னர் ஈரமான கொற்றன் துணியால் அதனை துடைத்து எடுத்து விடுங்கள் போதும்.

## வீங்கிய கண்களுக்கு குளிர்ந்த தேநீர் பைகள்



தினமும் கிறீன் டீ குடித்துவிட்டு, பயன்படுத்திய தேநீர் பைகளை எறிந்து விடுகிறீர்களா? அடுத்த முறை சேமித்து வைக்கவும். உங்கள் உடலில் இருந்து நச்சுகளை வெளியேற்றும், பச்சை தேயிலை பைகள் உங்கள் சருமத்திற்கு அதிசயங்களைச் செய்கின்றன.

இந்த இயற்கையான முக அழகு குறிப்பை பயன்படுத்துவதால், கண்களைச் சுற்றியுள்ள வீக்கத்தை உடனடியாகக் குறைத்து, அவை பிரகாசமாக மாறும். இதற்கு உங்கள் கண் இமைகளில் 5 முதல் 15 நிமிடங்கள் தேநீர் பைகளை வைத்து ஓய்வெடுக்கவும்.

காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir



# விருந்துக்கதிர்

விருந்துக்கதிர்

# கறுப்பு உளுந்தின் நன்மைகள்



நாம் அன்றாடம் சாப்பிடும் உணவில் குழம்பு, கூட்டு போன்றவற்றுக்கு பல வகையான பருப்புகளை பயன்படுத்துகின்றோம்.

அவற்றில் உடலுக்கு பல நன்மைகளைத் தரும் பருப்பு வகையாக உளுந்து இருக்கிறது.

அந்த உளுந்தில் வெள்ளை உளுந்து, கறுப்பு உளுந்து என இருவகை இருக்கின்றன. இதில் கறுப்பு உளுந்து சாப்பிடுவதால் உடலுக்கு ஏற்படும் நன்மைகள் என்ன என்பதை இங்கே தெரிந்து கொள்ளலாம்.

கறுப்பு உளுந்து பயன்கள் செரிமான திறன், கறுப்பு உளுந்தில் நார்ச்சத்து அதிகம் உள்ளது. கறுப்பு உளுந்தை அதிகம் சாப்பிடுபவர்களுக்கு அந்த உளுந்தில் இருக்கும் முழுமையான சத்து ஜீரண உறுப்புகளால் கிரகிக்கப்பட்டு, செரிமான உறுப்புகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது. மலம் கட்டிக் கொள்ளாமல் இலகுவாக வெளியேறவும் கறுப்பு உளுந்து வழி வகை செய்கிறது.

கறுப்பு உளுந்தில் இரும்புச்சத்து அதிகம் உள்ளது. கறுப்பு உளுந்தை கொண்டு செய்யப்படும் உணவுகளை குழந்தைகளுக்கு அடிக்கடி உண்ணக் கொடுப்பதால் இரத்த சோகை நோய் விரைவில் தீரும்.

நமக்கு வயது ஏற, ஏற நமது உடலில் உள்ள எலும்புகளும், மூட்டுப் பகுதியிலும் வலிமை குன்றி உடல் இயக்கத்தை குறைத்து விடும் ஆபத்து உள்ளது. கறுப்பு உளுந்தில் கல்சியம், பொஸ்பரஸ், பொற்றாசியம் இரும்புச் சத்துக்கள் அதிகம் உள்ளன.

கறுப்பு உளுந்து கொண்டு செய்யப்பட்ட உணவுகளை சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அடிக்கடி சாப்பிட்டு வந்தால் உடலில் எலும்புகள், மூட்டுகளின் வலிமை அதிகரிக்கும். ஆர்த்திரிடிஸ், ஆஸ்டியோபோரோசிஸ் போன்ற எலும்பு சம்பந்தமான நோய்கள் ஏற்படுவதையும் தடுக்கும். நீரிழிவு நோய் ஏற்பட்டவர்கள் நார்ச்சத்து நிறைந் துள்ள உணவுகளை சாப்பிட வேண்டும். கறுப்பு உளுந்தில் நார்ச்சத்து அதிகம் உள்ளது. இந்த நார்ச்சத்து நாம் சாப்பிடும் எந்த வகையான உணவுகளிலும் இருக்கும் சத்துக்களை சரி செய்து, உடலின் சர்க்கரை அளவை மிதமான அளவில் வைக்க உதவுகிறது.

சரும பிரச்சினைகள் நமது பண்டைய மருத்துவ முறையான ஆயுர்வேதத்தில் சரும சம்பந்தமான வியாதிகள், பிரச்சினைகளைப் போக்க கறுப்பு உளுந்து கொண்டு செய்யப்பட்ட உணவுகள் அதிகம் பரிந்துரைக்கப்படுகின்றன. தோலில் ஏற்படும் தழும்புகள், ஆதீத சூரிய ஒளியால் தோல் கறுத்துப் போதல் உள்ளிட்ட பல பிரச்சனைகளை கறுப்பு உளுந்தை அடிக்கடி சாப்பி டுவதன் மூலம் தீர்கிறது.

காயங்கள், புண்கள் எதிர்பாராத விதமாக அடிபடுதல், விபத்து போன்றவற்றில் உடலில் காயங்கள், புண்கள் போன்றவை ஏற்படுகின்றன. சில சமயங்களில், உள்காயங்களும் உண்டாகிவிடுகின்றன. இத்த கைய பிரச்சினையால் அவதிப்படுபவர்கள் கறுப்பு உளுந்து பயன்படுத்தி செய்யப்பட்ட உணவுகளை தொடர்ந்து சாப்பிடுவதன் மூலம் இதில் இருக்கும் சத்துக்கள் உடலில் அடிபட்ட இடத்தில் பிராண வாயு அதிகம் கிரகிக்க செய்து புண்களையும், காயங்களையும் வேகமாக ஆற்றுகிறது.

நமது இதயம் நன்றாக இருக்க நமது உணவில் கல்சியம், பொற்றாசியம், நார்ச்சத்து அதிகம் இருப்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும். இந்த சத்துக்கள் அனைத்தும் நிறைந்த கறுப்பு உளுந்து கொண்டு செய்த உண வுகளை சாப்பிடுவதால் நமது இருதயத்திற்கு செல்லும் இரத்த நாளங்கள் மற்றும் இதயத்தின் ஆரோக்கியத்தை உறுதி செய்து, இதயம் சம்பந்தமான நோய்கள் ஏற்படாமல் காக்கிறது. இன்று பெரும்பாலானோருக்கு மன அழுத்தம் மிகுந்த ஒரு வாழ்க்கை முறையே இருக்கிறது.

இதனால் மூளை மற்றும் உடலில் இருக்கும் நரம்புகளில் அழுத்தம் ஏற்பட்டு நரம் புத் தளர்ச்சி, தூக்கமின்மை போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. கறுப்பு உளுந்து கொண்டு செய்த உணவுகளை அடிக்கடி சாப்பிடுவதால் நரம்பு மண்டலத்தை ஆசுவாசப் படுத்தி நரம்புத் தளர்ச்சி, தூக்கமின்மை மற்றும் மன அழுத்தங்கள் போன்றவற்றை நீக்குகிறது.

பெரியவர்களை விட குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி சற்று குறைவாகவே இருக்கும். இதன் காரணமாக குழந்தைகள் அடிக்கடி ஏதாவது ஒரு நோய் தாக்குதலுக்கு உள்ளாகின்றனர். கறுப்பு உளுந்தில் நோய் எதிர்ப்பு ஆற்றலை அதிகரிக்கும் சத்துக்கள் நிறைந்துள்ள ஒரு உணவாக இருக்கிறது. எனவே இந்த உளுந்து கொண்டு செய்யப்பட்ட உணவை குழந்தைகளை அடிக்கடி சாப்பிட செய்வதன் மூலம் அவர்களின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது.

உடல் சக்தி இளம் வயதினரும் முதல் நடுத்தர வயதினர் வரை அதிகம் பேருக்கு உடல் மற்றும் மனம் எளிதில் சோர்ந்து விடுகிறது. இதற்கு உணவில் சரியான சத்துக்கள் இல்லாதமை ஒரு காரணமாகும் உளுந்தில் உடலுக்கும் மனதிற்கும் உற்சாகம் தரக்கூடிய அத்தியாவசிய சத்துக்கள் அதிகம் உள்ளன.

எனவே இந்த கறுப்பு உளுந்து அதிகம் சாப்பிடுபவர்களுக்கு உடல் உற்சாகம் அடைந்து, சக்தி அதிகரித்து நீண்ட நேரம் செயலாற்றக் கூடிய ஆற்றல் கிடைக்கும்.

## கறுப்பு உளுந்து லட்டு செய்வது எப்படி?



கறுப்பு உளுந்து லட்டு உடலுக்கும் எலும்புக்கும் வலுவினை உண்டாக்கும் சத்தான உணவு ஆகும். இதனை சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை உண்ணலாம்.

இரும்புச் சத்து, கல்சியம் சத்து உள்ளிட்ட உடல் வளர்ச்சிக்கு அவசியமான சத்துக்களை இது உள்ளடக்கியுள்ளது. எனவே வளரும் குழந்தைகளுக்கு இதனைக் கட்டாயம் செய்து கொடுக்க வேண்டும்.

உளுந்தும், கருப்பட்டியும் சேர்த்து செய்யப்படுவதால் இது பெண்களின் கருப்பையை வலுவடையச் செய்கிறது. ஆதலால் எல்லா வயதில் இருக்கும் பெண்களும் இதனை அடிக்கடி உண்ணலாம்.

இனி எளிய முறையில் சுவையான கறுப்பு உளுந்து லட்டு செய்யும் முறை பற்றிப் பார்க்கலாம்.

**தேவையான பொருள்கள்**

| | |
|---|---|
| கறுப்பு உளுந்து | - 1 கப் |
| பொரிகடலை | - 1 கப் |
| கருப்பட்டி | - 1 கப் (நன்கு தூளாக்கியது) |
| நெய் | - கப் |
| ஏலக்காய் தூள் | - 1/2 கரண்டி |
| முந்திரிப் பருப்பு | - 10 |

**செய்முறை**

உளுந்தம் பருப்பை சுத்தம் செய்து வெறும் வாணலியில் போட்டு நன்கு வாசனை வரும் வரை வறுத்து ஆற விடவும். லேசாக வறுத்தால் உளுந்து வறுபடாது. அதிக நேரம் வறுத்தால் தீய்ந்து விடும். ஆதலால் கவனமாக வாசனை வரும் வரை வறுக்கவும்.

உளுந்தினை வறுக்கும் போது பொரிகடலை வெறும் வாணலியில் போட்டு முறு முறுவென வரும் வரை வறுத்து ஆற விடவும். அதாவது பொரிகடலையின் நிறம் லேசாக மாற ஆரம்பித்ததும் வாணலியிலிருந்து எடுத்து விடவும்.

பொரிகடலையை வறுக்கும் போது கருப்பட்டியை நன்கு தூளாக நொருக்கி கொள்ளவும். ஆறிய உளுத்தம் பயறை மிக்ஸியில் நன்கு பொடியாக்கிக் கொள்ளவும்.

அதே போல் ஆறிய பொரிகடலையை நன்கு தூளாக்கிக் கொள்ளவும். தூளாக்கிய பொரிகடலை, உளுந்து, பயறு கலவை வாயகன்ற பாத்திரத்தில் அரைத்த பொருள்களைப் போட்டு ஏலக்காய் தூளைச் சேர்க்கவும்.

அதனுடன் தூளாக்கிய கருப்பட்டியைச் சேர்த்து நன்கு கலந்து கொள்ளவும். ஏலக்காய்த் தூள், கருப்பட்டி சேர்த்ததும் பின்னர் கலந்த பொருள்களை மிக்ஸியில் சேர்த்து நன்கு அரைத்துக் கொள்ளவும்.

அரைத்த பின்பு வாணலியை அடுப்பில் வைத்து நெய் சேர்த்து உருகியதும் அதில் முந்திரிப் பருப்பு சேர்த்து வெந்ததும் மாவுக் கலவையில் கொட்டி கரண்டியால் ஒருசேர கிளறி விடவும்.

நெய், முந்திரி சேர்த்ததும் மாவிலிருந்து சிறிதளவை எடுத்து உருண்டைகளாக அழுத்திப் பிடிக்கவும்.

இவ்வாறு எல்லா மாவினையும் லட்டுகளாகப் பிடிக்கவும்.

சுவையான கறு ப்பு உளுந்து லட்டு தயார்.

இதனை ஒரு மாதம் வரை வைத்திருந்து உண்ணலாம்.

**குறிப்பு**

விருப்பமுள்ளவர்கள் கருப்பட்டிக்குப் பதிலாக வெல்லம் அல்லது நாட்டுச் சர்க்கரை சேர்த்து லட்டு தயார் செய்யலாம்.

விருப்பமுள்ளவர்கள் நெய்யின் அளவினை பங்கிற்குப் பதிலாக 1/2 பங்காகக் குறைத்தும் லட்டு தயார் செய்யலாம்.



# மருத்துவக் கதிர்



# ஆதலினால் விரதமிருப்பீர்!

என்.சிறீரஞ்சன்

ஒருவருடைய வயதென்பது அவர் பிறந்தநாளில் இருந்து இற்றைவரையான காலப்பகுதியைக் கருதுகிறது. இதனை விட ஒருவருக்கு வேறு ஏதாவது வயது இருக்கலாமா?

சிலரது தோற்றத்தைப் பார்க்கும் போது அவர்கள் தமது நிஜ வயதிலும் பார்க்க கூடுதலான வயதானவர்கள் போல் தோன்றுகிறார்கள். வேறு சிலர் தமது நிஜ வயதிலும் பார்க்க குறைவான வயதானவர்கள் போல் தோன்றுகிறார்கள். இந்நிலையில் உண்மையான வயதென்பது எது? முதலில் குறிப்பிடப்பட்ட கணக்கிடப்பட்ட வயதா அல்லது தோற்றத்தைக் கொண்டு மதிக்கும் வயதா?

ஆரோக்கியம் மற்றும் வாழ்க்கைக் காலம் என்று நோக்கும் போது ஒருவரது வயதானது மேற்சொல்லப்பட்ட இரண்டுமே இல்லை. அவரது உடலின் வயதே உண்மையான வயதென்றும் அதனை சில வழிகளில் கணிப்பிட்டுக் கொள்ள முடியம் என்று சில அறிஞர்கள் வாதிடுகிறார்கள்.

மேற்சொல்லப்பட்ட வெவ்வேறு வயதுகளில் மிக முக்கியமானது எது? ஒருவரது கல்வி, தொழில், திருமணம், இழைப்பாறல் போன்ற சட்டரீதியான தேவைகட்கு முதலாவது வகை வயது முக்கியம். மற்றவர்களால் கவரப்படல் போன்ற சமூகத் தேவைகளிற்கு இரண்டாவது வகை வயது முக்கியம். ஆரோக்கியம் மற்றும் வாழ்க்கைக் காலம் தொடர்பில் மூன்றாவது வகை வயது முக்கியத்துவம் பெறுகிறது.

முதலாவது வகை வயது தொடர்பில் நாம் ஒன்றும் செய்வதற்கில்லை. வாழ்க்கையில் ஒருவருக்கு காலத்திற்கு காலம் எது நடக்கிறதோ இல்லையோ வயது தன்பாட்டில் போய்க் கொண்டே இருக்கும். இரண்டாவது வகை வயது தொடர்பில் செல்வாக்குச் செலுத்தி குறைந்த வயதுடையவராகத் தோற்றமளிப்பதற்கு மக்கள் அதீத பிரயத்தனத்தை மிகப்பெரும் பொருள் செலவில் செய்கின்றனர். மூன்றாவது வகை வயதொன்று இருப்பதையே பெருமளவிற்கு அறியாதவர்களாக நாம் இருக்கிறோம்.

பலமற்ற காலை ஊன்றியபடி, கண்ணை மூடிக்கொண்டு ஒற்றைக்காலில் ஒருவரால் எவ்வளவு நேரம் நிற்க முடிகிறது, மேலிருந்து செங்குத்தாகக் கீழ் நோக்கி விழும் அடிமட்டம் ஒன்றை எந்தளவில் ஒருவரால் பிடித்து நிறுத்த முடிகிறது போன்ற சில செயற்பாடுகள் மூலம் மேலே குறிப்பிட்ட மூன்றாவது வகை வயதை கணித்துக் கொள்ளலாம் என்கின்றனர் ஆய்வறிவாளர்கள்.

முப்பது செக்கன்களிற்கு மேல் மேற்சொன்னவாறு ஒற்றைக் காலில் நிற்க முடிதல், 5 அங்குல மட்டத்திற்குள் அடிமட்டத்தை பிடித்து நிறுத்த முடிதல் என்பவை அவரது உண்மையான வயது எத்தகையதாக இருப்பினும் அவரது உடலின் வயது 20களில் இருப்பதைக் குறிக்கும் என்கின்றனர் இந்த அறிஞர்கள்.

'முப்பது செக்கன்கள் நிற்பது என்ன அவ்வளவு பெரிய விடயம் என்னால் முப்பது நிமிடங்கள் நிற்க முடியும்' என்று உங்களில் சிலபேர் நினைக்கிறீர்கள். கண்ணை மூடிக்கொண்டு பலமற்ற காலை ஊன்றியபடி நின்று பாருங்கள் உண்மை தெரியும்.

உடல் நிலை தடுமாறாமல் நிற்க கூடிய ஆற்றல் (Balance), மற்றும் விரைவு எதிரியக்கம் (Reaction time) என்பவை வயது அதிகரிக்கும் போது குறைவடைந்து செல்லும். இவை இரண்டையும் முறையே பரிசோதிக்கும் வழிகளே மேற்சொல்லப்பட்டவை ஆகும்.

ஒருவரது உடலின் வயதில் பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவற்றில் முக்கியமானது அவரது மரபுக் கீற்று (gene). அதில் நாம் ஒன்றும் செய்வதற்கில்லை. இரண்டாவது நாம் உட்கொள்ளும் உணவின்அளவு என்று சொல்லப்படுகிறது. அதாவது நாம் உண்ணும் உணவின் அளவைக் குறைத்தால் குறிப்பாக விரதமிருந்தால் இன்னும் குறித்துரைத்துச் சொல்வதாயின் உபவாசம் இருந்தால் எமது உடலின் வயதைக் குறைவாகப் பேணலாம். அதனால் நோயின் நீண்டகாலம் உயிர் வாழலாம் என்கின்றனர் இந்த ஆய்வறிவாளர்கள்.

1930களில் அமெரிக்காவில் ஏற்பட்ட மிக மோசமான வறட்சி காரணமாக உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. இதனால் நாடு பாரிய மந்தம் (Great depression) ஒன்றை எதிர்நோக்கியிருந்தது. உண்ண உணவின்றி பெரும் தொகையான மக்கள் பட்டினியால் வாடினர். ஆனால் இக்காலப் பகுதியில் வாழ்ந்த மக்களின் ஆயுள்காலம் ஆறு வருடங்களாக அதிகரித்திருந்ததாம்.



அமெரிக்க வொஷிங்டன் பல்கலைக்கழகப் பேராசிரியர் லூய்கி பொன்ரானா 'உண்ணும் உணவின் அளவைக் கட்டுப்படுத்துதலும் மனித ஆயுள்கால அதிகரிப்பும்' என்ற ஆராச்சியில் பத்து வருடத்திற்கு மேல் ஈடுபட்டுள்ளார். இதன்படி உட்கொள்ளும் கலோரிகளின் அளவை கணிசமானளவு குறைத்து உண்பவர்களின் ஆயுள்காலம் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பை காட்டி நிற்கிறது என்கிறார்.

டாக்டர் கிறிஸ்ரா வறடி சிக்காக்கோவில் வசிப்பவர். இவர் தனது ஆய்வில் ஒரு தொகை நபர்களை ஈடுபடுத்தி ஒன்று விட்டு ஒருநாள் விரதமிருக்கச் செய்தார். இவர்கள் விரதநாள்களில் 600 கலோரிக்கு உட்பட்ட உணவை மட்டும் மதிய போசனமாக உட்கொண்டனர். மற்றைய நாள்களில் அவர்கள் விரும்பியதை விரும் பிய அளவு சாப்பிட்டனர். இந்த ஆய்வுக்குட்படுத்தியவர்களின் கொலஸ்ரோல் அளவுகளில் மிக முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது.

அமெரிக்கப் பேராசிரியர் மார்க் மாற்சன் வயதடைந்து செல்லும் மூளை பற்றிய



ஆராச்சியில் ஈடுபட்டிருப்பவர். இவரது ஆய்வின் பிரகாராம் விரதமிருப்பதனால் அல்செய்மர் வியாதி, ஞாபக மறதி போன்ற மூளை தொடர்பான வியாதிகளால் பீடிக்கப்படும் காலத்தைப் பல ஆண்டுகளிற்குத் தள்ளிப் போடலாம் என்று கண்டுள்ளார்.

அமெரிக்க லொஸ் ஏன் ஜெல்ஸில் வசிக்கும் பேராசிரியர் வோல்டர் லொங்கோ 'வயோதிபமடைதல்' என்பது தொடர் பில் ஆய்வு செய்யும் உலகின் முன்னணி ஆராச்சியாளராவார். எலிகளை வைத்து இவர் மேற்கொண்ட ஆராச்சியில் அதிகம் சாப்பிட்டு கொழுத்து வளர்ந்திருந்த எலியிலும் பார்க்க குறைவாக உண்டு சிறிய உருவம் கொண்ட எலி 40 வீதம் கூடுதலான காலம் வசிக்கும் என்பதைக் கண்டுள்ளார்.

ஈக்குவேடர் நாட்டு கிராமமொன்றில் வாழும் மக்களில் சிலர் 'லறோன் நோய்க் குறி' என்றதொன்றால் பாதிக்கபட்டுள்ளனர். இதனால் இவர்களது உடல் வளர்ச்சி மிகக் குறைவாகக் காணப்படுகிறது. இவர்களது சராசரி உயரம் கிட்டத்தட்ட மூன்றரை அடியாக மட்டுமே உள்ளது. இவர்கள் மிகவும் மோசமான உணவுப் பழக்கத்தினையும் வாழ்க்கை முறையையும் கொண்டிருக்கிறபோதும் இவர்களிற்கு சலரோகம், புற்றுநோய் ஆகிய வியாதிகள் வருவதே இல்லை என்பதை பேராசிரியர் லோங்கோ கண்டறிந்து அது தொடர்பில் ஆராச்சி செய்துள்ளார். உடல் வளர்ச்சியைத் தூண்டும் IGF1 எனப்படும் ஹோர்மோன் மிகவும் குறைவாகவே இவர்களது உடலில் சுரக்கப்படுகிறது என்பதைக் கண்டறிந்துள்ளார். உடலில் காணப்படும் செல்களைப் பிரித்து புதிய செல்களை உருவாக்கி IGF1 உடலை வளரச் செய்கிறது. IGF1 குறைவாக இருக்கும் போது அது புதிய செல்களை உருவாக்குவதில்லை பதிலாக செல்களைப் பழுதுபார்த்து அவற்றில் உள்ள குறைகளை நீக்கி அவற்றை சரிசெய்கிறது. இதன் விளைவு ஆரோக்கியமான உடல், நோயற்ற வாழ்க்கை, நீண்ட ஆயுள்.

இந்த IGF1 குறைவாகச் சுரப்பதனால்தான் மேலே குறிப்பிட்ட ஈக்குவேடர் நாட்டு கிராம மக்கள் ஒருபக்கத்தில் உரிய வளர்ச்சியை அடையாமல் குள்ளமாகவும் மறுபக்கத்தில் சலரோகம், புற்றுநோய் போன்றவற்றின் தாக்கத்திற்கு உள்ளாகாமலும் நீண்ட காலம் வாழ்கின்றனர்.

இந்த IGF1 எமது உடலில் சுரக்கப்படுகிறது. இது சுரக்கும் அளவைத் தூண்டுவது நாம் உட்கொள்ளும் புரதச் சத்தாகும். புரதத்தை எடுக்கும் அளவு குறையும் போது IGF1 குறையும். ஆனால் புரதத்தை ஒரேயடியாகக் குறைத்தலும் கூடாது. இந்த வகையில் IGF1 இனைக் குறைப்பதற்கு இலகுவானதும் பாதுகாப்பானதுமான இன்னுமொரு வழி விரதமிருத்தலாகும் என்கிறார் பேராசிரியர் வோல்டர் லொங்கோ. இவரின் ஆராச்சி தொடர்பில் அவரையும் இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஆய்வறிவாளர்களையும் பேட்டி கண்டு 'Eat,Fast and Live longer' என்ற விவரணப் படத்தைத் தயாரித்து பி.பி.சி தொலைக் காட்சியில் ஒளிபரப்பியவர் திரு. மைக்கல் மோஸ்லி என்பவராவார். இவர் நான்கு இரவுகளைக் கொண்ட மூன்று நாள்கள் தொடர்ச்சியாக விரதமிருந்தார். நாளொன்றிற்கு வெறுமனே 50 கலோரிகள் கொண்ட சூப்பை மட்டுமே உட்கொண்டு விரதமிருந்தார். தனது விரதத்தைத் தொடங்க முன்னரும் விரதத்தை முடிக்க முன் னர் நான்காவது நாள் காலையிலும் அவர் தனது IGF1, இரத்தத்தில் உள்ள சீனியின் அளவு போன்ற பலவற்றைப் பரிசோதித்துக் கொண்டார். விரதமுடிவின் போது வந்த சோதனை முடிவுகள் அவர் முதலில் எடுத்து வந்த முடிவுகளோடு ஒப்பிடும் போது மிகவும் முன்னேற்றகரமான முடிவுகளாக இருந்தன. குறிப்பாக அவரின்IGF1இன் அளவு பாதியாகக் குறைந்திருந்தது.

மூன்று நாள்கள் விரதமிருந்து இவ்வளவு முன்னேற்றகரமான நிலைமைக்கு உடலைக் கொண்டுவர முடியுமாயின் ஆறு நாள்கள் கந்த சஷ்டி விரதமிருக்கும் நம்மவர்கள் எத்தகைய நன்மைகளை அடைய முடியும் என்பதை எவரும் இதன் மூலம் இலகுவாக ஊகித்தறிந்து கொள்ளலாம்.

காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir





# சிறுவர் கதிர்

## குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்

# முட்டாள் சிங்கமும் புத்திசாலி முயலும்



அடர்ந்த காட்டில் ஒரு கர்வம் கொண்ட சிங்கம் வாழ்ந்து வந்தது. நான் தான் இந்தக் காட்டுக்கு ராஜா என்ற கர்வத்துடன் அந்தச் சிங்கம் காட்டில் வாழ்ந்த அனைத்து மிருகங்களையும் வேட்டையாடியது.

மற்ற சிங்கங்கள் உணவுக்காக வேட்டையாடும். ஆனால் இந்த சிங்கம் பொழுதுபோக்கிற்காக வேட்டையாடியது. இதனால் காட்டில் வாழ்ந்த மற்ற மிருகங்கள் சிங்கத்தின் மீது கோபம் கொண்டன.

ஒவ்வொருநாளும் சிங்கம் பல மிருகங்களை வேட்டையாடியது. இதனை கண்ட மற்றைய மிருகங்கள் மிக்க பயத்துடன் வாழ்ந்து வந்தன.

சிங்கம் இப்படி பல மிருகங்களை ஒவ்வொருநாளும் கொல்வதால் தாம் வெகு சீக்கிரமே இறந்துவிடுவோம் என எண்ணி அவை எல்லாம் ஒன்று கூடி ஆலோசனை செய்தது.

சிங்கத்தை எதிர்த்து அவையால் போராட முடியாது என்பது அவைகளுக்குத் நன்கு தெரியும். அதனால் அவை சிங்கத்திற்கு இரையாக தினம் ஒரு மிருகமாக போவதற்கு தீர்மானித்தன.

அடுத்தநாள் குரங்கு ஒன்று அந்த கர்வம் கொண்ட சிங்கத்தை சந்திக்க அதன் குகைக்கு சென்றது.

இதைக்கண்ட சிங்கம் முகுந்த கோபத்துடன் உறுமியது. குரங்கிற்கு பயம் வந்துவிட்டது. சிங்கம் குரங்கைப் பார்த்து, உனக்கு என்ன துணிச்சல் இருந்தால் என் குகைக்கு வந்துருப்பாய்? என்றது. அதற்கு குரங்கு, எல்லா மிருகங்களும் தினம் ஒருவராக உங்கள் குகைக்கு இரையாக வருகின்றோம் எனத் தெரிவித்தன. அதனால் சிங்கராசா இரை தேடி அலையத் தேவையில்லை.

ஏன் இந்த முடிவு? என்றது சிங்கம்.

தினம் தினம் எந்த மிருகம் உங்களால் வேட்டையாடப்படும் என்ற பயத்துடன் வாழ்வதை விட, தினம் ஒருவராக உங்கள் குகைக்கு இரையாக வந் தால் மற்ற மிருகங்கள் பயமின்றி சிறிது காலம் வாழலாம் என்றது.

அத்துடன் நீங்கள் பல மிருகங்களை ஒரு நாளில் கொன்றால் நாங்கள் எல்லோரும் சீக்கிரமே இறந்து விடுவோம். பின்பு உங்களுக்கு உணவு கிடையாமல் நீங்களும் சீக்கிரமே இறந்து விடுவீர்கள் என்றது.

இதனைக் கேட்ட சிங்கராசாவுக்கு மகிழ்ச்சி பொங்கியது. மேலும் குரங்கிடம் தவறாமல் தினமும் காலையில் ஒரு மிருகம் கண்டிப்பாக வரவேண்டும். இல்லையென்றல் அனைவரையும் வேட்டையாடி விடுவேன் என்றது சிங்கம்.

அன்றிலிருந்து தினம் ஒவ்வொரு மிருகம் சிங்கத்திற்கு இரையாகச் சென்றது.

ஒருநாள் ஒரு முயலின் முறை வந்தது. முயல் சிங்கத்தின் குகைக்கு சிறிது தாமதமாகச் சென்றது.

அதனால் சிங்கம் மிகுந்த கோபத்துடன் இருந்தது.

சிங்கம் முயலைப் பார்த்து நீ ஏன் தாமதமாகினாய் என கர்ச்சித்தது.

அதனைக் கேட்ட முயல் நடுக்கத்துடன் சிங்கராசா நான் வரும் வழியில் வேறொரு பெரிய சிங்கம் என்னை வேட்டையாட முயற்சி செய்தது. நான் பதுங்கி இருந்துவிட்டு இப்பதான் வாறேன் என்றது.

என்னைவிட பெரிய சிங்கம் இந்தக் காட்டில் இருக்கிறதா? என்று இறுமாப்புடன் கேட்டது.

அதற்கு சிங்கராசா வாருங்கள் காட்டுகின்றேன், என்று சிங்கத்தை அழைத்துச் சென்று ஒரு கிணற்றைக் காட்டி இதற்குள்தான் அந்த பெரிய சிங்கம் இருந்தது என்று கூறியது முயல்.

அதனை நம்பிய சிங்கம் கிணற்றை எட்டிப் பார்த்தது. அப்போது சிங்கத்தின் நிழல் (விம்பம்) வேறொரு சிங்கம் கிணற்றினுள் இருப்பது போல் தெரிந் தது. சிங்கம் அதைப் பார்த்து கர்ச்சித்தது.

விம்பமும் கர்ச்சித்தது. சிங்கத்திற்க்கு ஆத்திரம் பொங்கியது. இதோபார் உனக்கு ஒரு முடிவு கட்டுகிறேன் என கூறிக்கொண்டு கிணற்றினுள் பாய்ந் தது. சிங்கம் கிணற்று நீரில் மூழ்கி மாண்டது.

முயல் துள்ளிக் குதித்து வெற்றியை மற்ற மிருகங்களிடம் சென்று கூறியது. காட்டில் கொண்டாட்டம் தொடங்கியது.

முயலின் சமயோசித முயற்சியால் மற்றைய மிருகங்களும் காப்பாற்றப்பட்டன.




சின்ன சின்ன கடிகாரம்
சிறப்பு மிக்க கடிகாரம்
என்றும் எங்கும் நேரத்தை
எடுத்துக்காட்டும் கடிகாரம்
அண்ணன் தம்பி போல் இங்கே
அழகு முட்கள் இரண்டு உண்டு
ஒன்றன் பின்னே ஒன்றாக
ஓடிச்சுற்றி மணி காட்டும்
சின்ன சின்ன கடிகாரம்
சிறப்பு மிக்க கடிகாரம்

## காற்றில் ஆடும் ரோஜாப் பூ



சிவப்பு வண்ண ரோஜாப் பூ
சிந்தை கவர்ந்த ரோஜாப் பூ
எனக்குப் பிடித்த நிறத்தினிலே
எழிலாய் சிரிக்கும் ரோஜாப் பூ

விரும்பி நட்டேன் செடியாக
வேண்டும் பசளையும் நானிட்டேன்
அரும்பி அதுவும் முளைத்தெழுந்து
அழகாய் பூத்துச் சிரிக்குதுபார்

காற்றிலாடி கவிசொல்லும்
கமகம நறுமணம் அதுவீசும்
பார்த்துப் பார்த்து அதைரசித்து
பரவசம் கொள்ளுது என்மனசு

அக்கா நீயும் ஓடிவா - அதன்
அழகை ரசிக்க நீயும்வா
தப்பாய் அதனை நீகிள்ளி
தலையிலே சூட எண்ணாதே

- ஷெல்லிதாசன் -

# பட்டம் விடுவோம்

குழு விளையாட்டுகளில் ஒன்று பட்டம் விடுதல். சாதாரண நூலால் மட்டுமே பட்டம் விட வேண்டும். ஆபத்தான நூலைப் பயன் படுத்தக்கூடாது,அது சட்டப்படி குற்றம்.

**என்னென்ன தேவை?**

சதுர வடிவ காகிதம்,
2 மெல்லிய குச்சிகள், பசை,
2 அடி நீளமும் 2 அங்குல அகலமும் கொண்ட காகிதம்,
நூல்



**எப்படிச் செய்வது?**

காகிதத்தின் எதிரெதிர் முனைகளைத் தொடும்படி ஒரு குச்சியைப் பசையால் ஒட்டுங்கள். இன்னொரு குச்சியை அரை வட்டமாக வளைத்து, மற்ற இருமுனைகளைத் தொடும்படி ஒட்டுங்கள். பசை காய்ந்து, குச்சிகள் நன்றாக ஒட்டிக்கொண்ட பிறகு, இரு குச்சிகளும் சந்திக்கும் இடத்தில் நூலைக் கட்டுங்கள். வில் போன்று வளைக்கப்பட்ட பட்டத்தின் கீழ்ப் பகுதியில் 2 அடி தாளை ஒட்டுங்கள். இது தான் பட்டத்தின் வால்.

இப்போ மைதானத்துக்குச் சென்று பட்டத்தைக் காற்று வீசும் திசையை நோக்கி மேலே வீசுங்கள். கையால் சுண்டி சுண்டி, கொஞ்சம் கொஞ்சமாகப் பட்டத்தை மேலே உயர்த்திப் பறக்க விடுங்கள். உடன் விளையாடுபவர்களின் பட்டத்துடனோ, மரக்கிளைகளிலோ பட்டம் சிக்கி விடாமல் கவனமாக விளையாடுங்கள். எவருடைய பட்டம் அதிக உயரத்திலும் அதிக நேரமும் பறக்கிறதோ அவரே வெற்றி பெற்றவர்.




# நெல் பயிர்ச்செய்கை

நெல் வர்க்கங்கள் மூன்று இனங்களைச் சேர்ந்தது, அவை யாவன பாரம்பரிய நெல் பயிர்ச்செய்கை, இனம் சகாட்டு இனம் செய்கை பண்ணப்படும் இனங்களுடன் காட்டு இனங்கள் கலக்கும் போது களை நெல் உருவாகும்.

செய்கை பண்ணப்படும் வர்க்கத்துடன் வேறு வர்க்கங்கள் கலந்து கலப்பு நெல்லாகக் காணப்படலாம். கலப்பு நெல்லில் ஏற்படுகின்ற பாதிப்பு அந்தப் போகத்திற்கு மாத்திரமே ஆகும். ஆனால் களை நெல்லினால் ஏற்படும் பாதிப்பு தொடர்ச்சியாக நீண்டகாலத்திற்கு தொடரும்.

களை நெல்லானது இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் மிக விரைவாகப் பரவிக் காணப்படுவதுடன் 1,000 இற்கு மேற்பட்ட உயிரியல் வேறுபாடுடைய களை நெல் இனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவை வெவ்வேறு பெயர்களினால் அழைக்கப்படுகின்றன அவையாவன கலப்பு நெல்களை நெல்பச்ச நெல்நண்டு நெல், பன்றிச் சம்பா, குலங் நெல்.

இது ஒரு ஆக்கிரமிப்புக் களையல்ல. நெற்செய்கை ஆரம்பித்த காலத்தில் இருந்து காணப்பட்ட போதிலும் பொருத்தமான பயிர்ச் செய்கை நடவடிக்கைகளினால் கட்டுப்படுத்தப்பட்டது. அதாவது நாற்று நடுகை செய்தல், நீர்ப்பாசனம் கலப்பு நெல்லைக் கண்டவுடன் அகற்றுதல் போன்ற செயற்பாடுகளால் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தப்பட்டது.

அம்பாறை, மாத்தறை, கண்டி, புத்தளம், பொலன்னறுவை, அனுராதபுரம், கிளிநொச்சி, மன்னார் ஆகிய பிரதேசங்களில் பரந்தளவில் காணப்படுகின்றது.

*** களை நெல்லின் இயல்புகள்**

1. உயரமாக வளரும்.
2. உதிரும் தன்மை அதிகம்
3. ஐந்து வருடங்களிற்கு உறங்கு நிலையில் காணப்படும்.
4. கணுவிடை நீளம் அதிகம்.
5. கணுக்களில் வேர் காணப்படும்.
6. தண்டு மென்சிவப்பு அல்லது ஊதா நிறமாகக் காணப்படும்.

களை நெல் சூழல் மாற்றத்தை சகித்து வளர்வதுடன் நோய் பீடைக்கு எதிர்ப்புத்தன்மை, நீண்ட விதை உறங்கு காலம், அதிக போட்டியிடும் தன்மை என்பன காணப்படுவதால் அவை செய்கை பண்ணப்படும் நெல்லை வளரவிடாது தடுக்கின்றன. மேலும் களைநெல்லை களைநாசினி கொண்டு கட்டுப்படுத்த முடியாது. எனவே களை நெல்லை அடையாளம் கண்டு கைகளால் பிடுங்கி அழித்தல் வேண்டும்.

*** களை நெல்லை அடையாளம் காணல்**

**நாற்றுப் பருவத்தில்**

1. பெரும்பாலும் நாற்றின் அடிப்பகுதி சிவப்பு அல்லது ஊதா நிறமாகக் காணப்படும்.
2. நாற்றின் அடிப்பகுதி மெல்லிய வட்ட வடிவானது.
3. நாற்றின் வளர்ச்சி விரைவாக நடைபெறும். பயிரின் ஆரம்ப உயரம் குறைவாகவும் 10 – 12 நாள்களின் பின் விரைவாகவும் வளர்ச்சி அடையும்.
4. இலைகளின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படும்.

*** வளர்ச்சி அவத்தையில்**

1. இலையின் மேற்பரப்பு சொரசொரப்பானது.
2. மேற்பரப்பில் மயிர்கள் காணப்படும்.



3. மென் பச்சை நிறமானது.
4. நீண்ட சோணை காணப்படும்.
5. தண்டின் அடிப்பகுதி சிவப்பு நிறமானது.

*** பூக்கும் போது**

1. பயிர் செய்யப்படும் நெற்பேதத்தை விட விரைவாகப் பூக்கும்.
2. கதிரில் பூத்தல் சீராக நடைபெறுவதில்லை.
3. முதிர்ந்த மணிகள் கதிரில் இருந்து விரைவாக உதிரும்.
4. பெரும்பாலனவற்றின் விதை மேற்கூறில் கொழுக்கி காணப்படும்.
5. கொழுக்கியின் நீளம் 1 – 12 cm வரை காணப்படும்.


*** முதிர்ந்த நிலையில்**

1. களை நெல்மணி பயிர் நெல்மணியை விட சொரசொரப்பானது.
2. களை நெல்லின் மணியானது தெளிவான கோடுகளைக் கொண்டிருக்கும்.
3. இலைகள் விரைவாக முதிர்ச்சி அடைந்தும் சரிந்தும் காணப்படும்.
4. முதிந்த இலைகள் இறந்து காணப்படும்.
5. கதிரில் உள்ள பெரும்பாலான மணிகள் நிரம்பிக் காணப்படும்.

களை நெல்லானது நெற்செய்கையை நீண்ட காலத்திற்கு பாதிக்கிறது. ஒவ்வொரு போகத்திற்கும் பாதிப்பு 10 – 100 வரை வேறுபடும். மேலும் பயிர் செய்யும் நெற்பேதத்துடன் அயன் மகரந்தச் சேர்க்கை அடைந்து புதிய களை நெற்களை உருவாக்கும். களை நெல்லானது பயிர் செய் நெல்லினை விட உயரமாக வளர்வதால் நோய் பீடைக் கட்டுப்பாடுகள் சிரமமாகும். அத்துடன் நிலத்தில் விழுந்த மணிகளின் உறங்குகாலம் 3 - 5 வருடங்களாகும். இதனால் இடைக்கிடை முளைக்கிறது.

நெற் செய்கையின் ஆரம்பத்திலேயே களை நெல்லை அடையாளம் கண்டு பொருத்தமான களைக்கட்டுப்பாட்டு முறைகளைக் கடைப்பிடித்து வெற்றிகரமாக இவற்றைக் கட்டுப்படுத்த முடியும். இல்லையேல் நெற்செய்கைக்கு பாரிய சேதத்தை விளைவிப்பதுடன் நெற் செய்கை பண்ண முடியாத நிலை ஏற்படும். எனவே களை நெல்லைக் கட்டுப்படுத்தல் அவசியமாகிறது.

# விவசாயம் என்றால் என்ன?



அதிகரித்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப மக்களின் தேவைகளும் அதிகரித்து வருகின்றன. இதனை நிவர்த்தி செய்வதற்கு விவசாயத்தில் தொழில்நுட்ப இயந்திரங்கள் மூலம் உற்பத்திகள் அதிகப்படுத்தப்படுகின்றன.

உழவுத் தொழில் அல்லது விவசாயம் என்பது உணவு மற்றும் பிற பயன்பாடுகளுக்காக சிலவகைப் பயிர்களை உற்பத்தி செய்வதையும், கால்நடை வளர்ப்பையும் குறிப்பதாகும். விவசாயம் ஒரு முக்கிய முதனிலைத் தொழில் ஆகும்.

இத்தொழிலில் மனிதன் இயற்கையிலிருந்து கிடைக்கும் பொருள்களைச் சேகரித்துப் பயன்படுத்திக் கொள்வதோடு நிறுத்திக் கொள்ளாமல் அந்த இயற்கையோடு ஒன்றிணைந்து பணியாற்றுகின்றார்கள்.

விவசாயி சேற்றில் கால்களை வைத்தால் தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும் என்பது உண்மையான வரிகள் ஆகும். இதன் மூலம் விவசாயத்தின் முக்கியத்துவம் புலப்படுத்தப்படுகின்றது.

மனித குலத்தை வாழ வைக்க விவசாயம் முக்கியமானதாகும். மனித உயிர் வாழ்க்கைக்கும் விவசாயம் இன்றியமையாததாகும்.

உடலுக்கு தீங்கற்ற உணவு உற்பத்திகளை மேற்கொள்வதற்கு விவசாயம் அவசியமாகும். ஒரு நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த விவசாயம் இன்றியமையாதது.

விவசாயத்தில் நவீன தொழில்நுட்ப முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அது மட்டுமல்லாது விவசாயம் மேற்கொள்ளும் முறை கூட தொழில்நுட்ப வளர்ச்சியினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

பயிர்களுக்கு சரி விகித அளவில் சத்துக்கள் வழங்குவதற்கும் தொழில்நுட்பம் உதவுகின்றது. விதைகளை நாட்டவும் 4 அறுவடை செய்யவும் மனிதவலு தேவைப்படுவதில்லை. இயந்திரங்கள் மூலம் விரைவாக வேலைகளைச் செய்து முடிக்கலாம்.

காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir




# ரோஜா செடி வளர்ப்பு

இது Rosaceae என்னும் தாவர குடும்பத்தை சேர்ந்தது ஆகும். வெப்பநிலை : 15 – 250C, நல்லவடிகால் அமைப்பு இருத்தல் வேண்டும். இன்றைய கால கட்டத்தில் பொருளாதாரத்தில் பெரும் பங்கு வகிக்கும் ஏற்றுமதித் துறையில் மலர் செய்கை முக்கிய பங்கு வகிக்கிறது. இவற்றுள் அதிகம் விரும்பும் மலராக ரோஜா காணப்படுகிறது. மனம் மயக்கும் வாசனைகளையும் வண்ணங்களையும் உடைய ரோஜா செடிகளை விரும்பாதவர்கள் எவருமில்லை எனக் கூறலாம். இருப்பினும் சரியான பராமரிப்பு முறை ஒழுங்கின்மையால் ரோஜா செய்கை சிரமமான ஒன்றாக உள்ளது.



### நடுகை

45 செ.மீ நீள, அகல, ஆழம் உள்ள குழிகளை தயார்படுத்தல். மேல் மண்: கூட்டெரு 1:1 என்னும் விகிதத்தில் கலந்துஅதனுள் ரோஜா செடியை வேர் சிதையாதவாறு மென்மையாக நடவும். ரோஜா செடிகளுக்கு சூரிய வெளிச்சம் அவசியம். ஒரு நாளுக்கு 6 மணித்தியாலங்களாவது சூரிய ஒளி பட வேண்டும். அதிக ஈரப்பதன் உள்ள இடத்தில் ரோஜா செய்கை செய்யக் கூடாது.



ஒவொரு செடிகளுக்குமான இடைவெளிகளாக 30செ.மீ x 40 செ.மீ, 45செ.மீ x 45செ.மீ , 60செ.மீ x 60 செ.மீ (இனம் மற்றும் கிளை விடும் இயல்புக்கு ஏற்ப இடைவெளி மாறும்)

### நீர்ப்பாசனம்

செடிகளுக்கு தகுந்தாற் போல் தினமும் அல்லது இரண்டு நாள்களுக்கு ஒரு தடவை நீர்பாசனம் செய்தல் வேண்டும்.

### நன்றாக பூப்பதற்கு சில ஆலோசனைகள்

வாழைப் பழத் தோலை 3 – 4 நாள்களுக்கு நீரில் ஊற விட்ட பின் அந்த நீரினை செடிகளுக்கு தெளிக்கலாம்

வீசப்படும் தேயிலைக் கழிவு , வெங்காய தோல், முட்டை கோது என்பன



வற்றை உரமாக பயன்படுத்தலாம்.

### பீடைகளை கட்டுப்படுத்தல்

ரோஜா செடிகள் பூச்சிகளின் பாதிப்புக்கு உட்படாமல் இருக்க இயற்கை பூச்சிக்கொல்லி மருந்துகளை தெளிப்பதாயின் வேப்ப பிண்ணாக்கை தண்ணீரில் கலந்து செடிகளின் மீதோ அல்லது செடியின் வேர் பகுதியிலோ தெளித்து விடவும். இந்த முறையை வாரத்துக்கு ஒருமுறை செய்யலாம். இவ்வாறு செய்வதனால், ரோஜா செடிகளை எந்த பீடைகளும் தாக்காது. செடிகள் நல்ல ஆரோக்கியமாக வளரும்.

### கத்தரித்தல்

தரமான பூக்களை பெறுவதற்கும் கிளைகளின் ஆரோக்கியத்தையும் உயரத்தையும் பேணுவதற்கும் செடியினை காப்பாத்து செய்தல் வேண்டும்.

### இறந்த தண்டுகளை நீக்குதல்

மேல் நோக்கி செல்லும் கிளைகளை வைத்துக் கொண்டு குறுகிய கிளைகளையும் நோய் உள்ள கிளைகளிலும் வெட்டுதல்.

மெலிந்த மற்றும் பலவீனமான வளர்ச்சி உள்ள கிளைகளை அகற்றவும்

இனப்பெருக்கம் செய்யும் முறைகள் இதனை 4 முறைகளில் இனப்பெருக்கம் செய்யலாம்.

01. விதைகள் மூலம் (Seeds)
02. வெட்டுத் துண்டங்கள் மூலம் (Cutting)
03. பதி வைத்தல் மூலம் (Layering)
04. ஒட்டுதல் மூலம் (Budding and grafting)

இருப்பினும் பெரும்பாலும் வெட்டுத் துண்டங்கள் மூலம் உற்பத்தி செய்யும் முறையே பயன்படுத்தப்படுகிறது.

தாவரத் துண்டம் ஒன்றை நடுகை செய்வதற்கு தெரிவு செய்யும் போது ஒரு சில விடயங்களை கருத்தில் கொள்ள வேண்டும்.

- துண்டம் 15 – 25 ஆக இருத்தல் வேண்டும்.
- 3 – 4 அரும்புகள் இருத்தல் வேண்டும்.
- பூத்து ஓய்ந்த பகுதியை தெரிவு செய்தல்.



### அறுவடை

அறுவடை செய்தல் ரோஜா வகைகள் மற்றும் சந்தை தேவைகளைப் பொறுத்தது. புதிய மலர் மற்றும் நல்ல வடிவம், அளவு உள்ள மலர்களாக இருத்தல் வேண்டும். காலையில் அறுவடை செய்தல் வேண்டும்

அறுவடைக்குப் பிறகு பாதுகாப்பாக தண்ணீரில் வைக்க வேண்டும்.

ஆக்கம்:- சு. அனுஜன்,
NVQ6 மாணவன்,
யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார்மடம்.

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir




Sunday the 12th of December 2021

We welcome students' articles in word for publication
-Editor-
kalaikkathiredu@gmail.com

## COVID Vaccination Card to be made Mandatory




COVID vaccination card to be made mandatory to visit public places The COVID vaccination card will soon be made mandatory for people to visit public places, the President's Media Division said on 10th. The decision was taken at a meeting of the Special Committee on COVID-19 Control, chaired by President Gotabaya Rajapaksa.

The president directed the committee members to complete the administration of the COVID-19 booster dose within the next two weeks in a bid to curb the spread of the virus in the festive season. All fully-vaccinated persons, who have completed three months since receiving their second shot, are eligible to receive the booster dose.

## Kanni Wignaraja to visit SL on 13 Dec



Top United Nations official Kanni Wignaraja will arrive in her home country Sri Lanka on 13 December on a five-day official visit. She is the UN assistant secretary-general, UNDP assistant administrator and director of the UNDP Regional Bureau for Asia and the Pacific. Wignaraja is visiting Sri Lanka with the aim of better understanding country priorities and exploring new avenues of support from UNDP to Sri Lanka.

Particular focus will be on follow up to the recently concluded UN Climate Change Conference, post-COVID-19 socio-economic recovery in the region, and leveraging of more development financing to the country.

During her visit, she will meet high-level government officials and other partners, and have a firsthand look at some of UNDP supported work on the ground.

## 12-15 to receive Pfizer jab




Those aged between 12 and 15 years are to be administered the first dose of the Pfizer-BioNTech COVID-19 vaccine. The decision was taken on 10th during a meeting of the Special Committee on COVID-19 Control, chaired by President Gotabaya Rajapaksa. Vaccination dates are to be decided in consultation with the Department of Examinations.

## *CBSL initiates regulatory action against errant money changers*



CBSL initiates regulatory action against errant money changers The Central Bank of Sri Lanka says it is conducting a series of spot examinations at authorized money changers, thereby strengthening the monitoring and supervision of these institutions. These examinations are in response to complaints that certain authorized money changers are engaged in activities which are not in compliance with the directions issued under the provisions of the Foreign Exchange Act No. 12 of 2017 (FEA).

Spot examinations conducted during November and December 2021 has indicated that four authorized money changers have not complied with the Directions issued to them under the provisions of FEA. Accordingly, after the Minister of Finance being informed, notices have been issued to them to comply with the relevant directions within a specified time period.

The four are:

New Natasha (Pvt) Ltd at No. 12, Super Market Complex, Wennappuwa George Michael Holdings (Pvt) Ltd at No. 157, Chilaw Road, Wennappuwa Royal Money Exchange (Pvt) Ltd at No. 55, Galle Road, Colombo 06 Prasanna Money Exchange (Pvt) Ltd at No. 57, Galle Road, Colombo 06

In the event the errant authorized money changers fail to rectify the issues communicated through the notices, the CBSL says it will be compelled to suspend and to revoke the permits issued to them. It informs the public that authorized money changers have no authority to transact foreign exchange at rates higher than those offered by the banks to them.

## *Budget 2022 passed*



The Third Reading of the Appropriation Bill 2022 was passed with a majority of 93 votes on Friday (10). The voting took place at 6:05 p.m. A total of 157 voted in favour to 64 against.

Minister of Finance Basil Rajapaksa presented the Second Reading of the Appropriation Bill (Budget Speech) for the year 2022 on 12 November. The Second Reading Debate of the Appropriation Bill continued for seven days from 13 November. This Bill was passed with a majority of 93 votes. 153 were cast in favour to 60 against.

The Committee Stage Debate on the Bill commenced on 23 November and continued for 16 days until Friday (10). Speaker Mahinda Yapa Abeywardena endorsed the Bill on the same day (10).

Third reading of 2022 Budget passed with 93-vote majority At the vote, 157 members voted for the budget, while 64 opposed. Accordingly, the third reading of the 2022 Appropriation Bill was passed with a 93-vote majority.

## *Japan keen on attracting skilled workers from SL*

New Japanese ambassador in Colombo Mizukoshi Hideaki says his government is interested in attracting skilled workers from Sri Lanka. The two countries have signed two MoUs in recent years on both low-skilled and specified-skilled worker recruitment to Japan. According to the Foreign Ministry, under the Specified Skilled Worker Recruitment Program (SSWRP), 14 job fields have been allowed to recruit employees from Sri Lanka.

When ambassador Hideaki met with him, prime minister Mahinda Rajapaksa reiterated that there is a growing interest among Sri Lankans to both learn the Japanese language as well as to seek employment opportunities in Japan. The ambassador said he would like to focus on investment promotion during his tenure.

Currently, there are approximately 75 enterprises with Japanese investments operating in Sri Lanka. During the past 15 years, they have cumulatively invested about USD 382 million, providing more than 12,000 employment opportunities.



**Pronoun Word Bank: mine, yours, his, hers, ours, their**

**Choose the right possessive pronoun and fill in the blanks.**

1) I have a new book. It is ____________

2) She has a new cat. It is ____________

3) They have new pillows. It is ____________

4) We have new shoes. They are ____________

5) He has a new car. It is ____________

6) You have a new toy. It is ____________

7) The book belongs to her. It is ____________

8) The coat belongs to me. It is ____________

9) The chair belongs to Mary. It is ____________

## TAJ MAHAL

**Read the following passage, then answer the questions below:**

The Taj Mahal is in Agra,India.It is about 200 kilometers north of Delhi,the capital.It is one of the most famous buildings in the world.It was built by Shah Jahan,one of the great Moghul emperors,in memory of his beautiful wife,Mumtaz Mahal,who died in 1631 AD.Shah Jahan loved his wife very much but she died when she was giving birth to her first child.The emperor was heart-broken and he decided to build a tomb foir her so that people would always remember her name.

The building work began in 1631 and was finished 20 years later.More than 20,000 workers and craftsmen helped to build the Taj Mahal which is made of white marble.It is surrounded by beautiful gardens.

**Questions: A. Mark these sentences TRUE or FALSE :**

1. The Taj Mahal was built by Shah Jahan. { }
2. India is the capital of Delhi. { }
3. Mumtaz Mahal died in the year 1361. { }
4. 20 thousand workers and craftsmen helped to build the Taj Mahal. { }
5. The Taj Mahal is one of the most famous buildings in the world. { }

**B. Answer the following questions:**

6. Why did the emperor build the Taj Mahal?
................................................................................
7. How did the emperor feel after the death of his wife?
................................................................................
8. What is the Taj Mahal madfe of?
................................................................................
9. When was the Taj Mahal built?
................................................................................
10. What do you know about the Taj Mahal?
................................................................................

**READING**

**Read the messages and mark if the statements are T (true) or F (false) as in the example.**

**Nadia:** Andy, I don't think I'll be able to play on Saturday night — sorry.

**Andy:** What??! Why not, Nadia? We need you. It's an important night and we can't get another trumpet player before then. And no one in the band can learn to play the trumpet in three days!

**Nadia:** I'm in bed with a cold and a temperature. I cannot play the trumpet right now.

**Andy:** Well it's only Wednesday. Surely you will be better on Saturday?

**Nadia:** Perhaps, but I can't practise at the moment, obviously. My throat hurts too much. So I've decided to stay in bed.

**Andy:** Well, are you doing anything about your cold? Are you taking any medicine? Perhaps your doctor can give you an injection.

**Nadia:** Hey Andy, I'm ill here! I don't enjoy having a temperature, you know. I can't stand lying here and doing nothing!

**Andy:** OK, sorry — but you have to play on Saturday. Some people from a recording company are coming. They're looking for new jazz bands like us. It's our big chance!

**Nadia:** What? Really?

**Andy:** Yes, really. If they think we're good enough, they might offer us a record deal!

**Nadia:** OK, I promise to try. I'll do everything I can to get better. I hate being ill and I don't want to let you down. I'm going to get better! Let's chat again tomorrow.

**Andy:** OK. Thanks a lot. Get well soon, OK? I mean it! [33]

*(247 words)*

| | T | F | |
|---|---|---|---|
| 0 | ☒ | ☐ | Nadia is the trumpet player in a band. |
| 1 | ☐ | ☐ | There are two days before the band plays. |
| 2 | ☐ | ☐ | Nadia has got a sore throat. |
| 3 | ☐ | ☐ | Nadia thinks Andy is being very understanding. |
| 4 | ☐ | ☐ | Nadia doesn't want to take any medicine. |
| 5 | ☐ | ☐ | A recording company wants new jazz bands. |
| 6 | ☐ | ☐ | Nadia doesn't want to play on Saturday. |

## Grade 6 Reading Comprehension

THE TALE OF PETER RABBIT
BY BEATRIX POTTER

Read the story below.

Once upon a time there were four little Rabbits, and their names were: Flopsy, Mopsy, Cotton-tail, and Peter. They lived with their Mother underneath the root of a very big fir-tree. 'Now my dears' said Mrs. Rabbit 'you may go into the fields, but don't go into Mr. McGregor's garden. Flopsy, Mopsy, and Cotton-tail, who were good little bunnies, went down the lane to gather blackberries, but Peter, who was naughty, ran to Mr. McGregor's garden! First he ate some lettuces and some French beans, and then whom should he meet, but Mr. McGregor! He jumped up and ran after Peter, and calling out, 'Stop!' Peter lost his shoes among the cabbages and potatoes. Peter sat down to rest; after a time he began to wander about. He began to cry. Then he tried to find the gate! Peter never stopped running till he got home to the big fir-tree. Peter was not very well during the evening. His mother put him to bed, and made some tea; and gave a dose of it to Peter!



Answer each question.

1. What were the names of four little Rabbits?
_______________________
2. Who was the naughty little Rabbit?
_______________________
3. What did Peter eat at Mr. McGregor's garden?
_______________________
4. What did Mr. McGregor do when he saw the Peter?
_______________________
5. Did Peter reach his home?
_______________________

## *Mini Reading Activities*

I'm always busy. Everyday, I clean my two bathrooms, vaccuume the living room and the stairs, mop up he kitchen floor and dust the furniture. I have a big family. I cook all the he meals, do the washing up and I usually do at least one wash a day. I have a hobby - I do a lot of gardening. I enjoy reading stories to the kids in the evenings and I always bathe them . I hope my wife likes the work I do. I'm a good husband.

**Say True or False**

| | | |
|---|---|---|
| 1. He is never busy. | T | F |
| 2. He has three bathrooms. | T | F |
| 3.He mops the kitchen floor. | T | F |
| 4 His wife does the cooking. | T | F |
| 5. He reads the kids stories. | T | F |
| 6. He vaccuume say the living room. | T | F |

Lindy works in a bakers shop. She arrives at 7 a.m to receive the deliveries.The deliveries are: fresh loaves, cakes ,tarts and bread buns. She checks them off and then she sets them out on display.By 7.10 the first customers are there. Lindy serves them with a cheery smile and a 'what can I get you today darling! ' .She calls everyone 'darling' .

**Answer these questions.**

1. Where does Lindy work?
_______________________
2. What time does she arrive at work?
_______________________
3. What is her first job?
_______________________
4. How long before the first customer arrives?
_______________________
5. What does she call everyone?
_______________________

## A Mixed Bag of Grammar Exercises

**Cross out the wrong word in these sentences and and write the correct word in the brackets given. No 1 is done for you.**

1. My dad learned me how to ride a horse. [taught ]
2. Meena sang good at the birthday party. [ ]
3. Nayani wouldn't give me none of her toys. [ ]
4. There are a lot of mountains in France. [ ]
5. David ran home as quick as possible. [ ]
6. A man and his son was waiting for the bus. [ ]
7. Your mobile phone is different to mine . [ ]
8. The watchman rung the bell every hour. [ ]
9. The best of the two teams won the match. [ ]
10. There are two vacant in the district office. [ ]

Answers . 1.learned - taught 6. was - were
7. to - from 2. good. - well
8. rung - rang 3. none - any
9. best - better 4. a lot of. - many.
10. vacant - vacancy 5. quick. - quickly

# Taliban Confirm Secondary School Ban

Teenage schoolgirls in Afghanistan have told of their growing desperation as they continue to be excluded from school more than three months after the Taliban takeover. "Not being able to study feels like a death penalty," says 15-year-old Meena. She says that she and her friends feel lost and confused since the closure of their school in north-eastern Badakhshan province. "We have nothing to do apart from housework… we are just frozen in one place," says Laila, 16, whose school in Takhar province shut the day the Taliban seized power in August. Interviews with students and headteachers in 13 provinces show girls' frustration at still being barred from secondary school, despite assurances from the Taliban that they would be able to resume their studies "as soon as possible".

Teachers, nearly all of whom had not been paid since June, said the situation was affecting girls' wellbeing, with one blaming the closures for the underage marriage of three of her students. One headteacher from Kabul, who stays in touch with her students said: "The students are really upset, they're suffering mentally. I try to give them hope but it's hard because they are exposed to so much sadness and disappointment." Teachers also reported a worrying drop in attendance among girls in primary schools, who have been allowed to return. They said that increased poverty and security concerns meant families were reluctant to send younger girls to school.

Deputy Education Minister Abdul Hakim Hemat confirmed that girls would not be allowed to attend secondary school until a new education policy was approved in the new year. Despite this, some girls' schools are reported to have re-opened after negotiating with local Taliban officials.

In the northern city of Mazar-i-Sharif in Balkh province, one head teacher told us that there were no problems and girls were attending school as normal. But another student in the same city told that a group of armed Taliban fighters had been approaching schoolgirls on the streets, telling them to make sure their hair and mouths were not visible. As a result around a third of her class had stopped coming to school.

"We have our life in our hands when we leave home. People don't smile. The situation is not calm. We are shivering with fear," she said. The Taliban government ordered boys to return to



secondary school in September, but made no mention of girls.

Headteachers in three different provinces told  Girls had been turning up at the school gates every day asking when they would be allowed to return, one said. "When I see my clothes, books, scarf and my shoes, all new just sitting in my cupboard without being used, I get very upset. I never wanted to sit at home," Laila says. Meena wants to be a surgeon, but doubts whether she'll be allowed to continue her studies.

# Vaccines should work against Omicron

Lab tests in South Africa suggest Omicron could evade the Pfizer jab. Existing vaccines should still protect people who contract the Omicron variant from severe Covid cases, a World Health Organization (WHO) official says. Researchers say there was a "very large drop" in how well the vaccine's antibodies neutralised the new strain. But the WHO's Dr Mike Ryan said there was no sign Omicron would be better at evading vaccines than other variants.

"We have highly effective vaccines that have proved effective against all the variants so far, in terms of severe disease and hospitalisation, and there's no reason to expect that it wouldn't be so" for Omicron, Dr Ryan, told. He said initial data suggested Omicron did not make people sicker than the Delta and other strains. "If anything, the direction is towards less severity," he said. Is omicron milder despite dodging



immunity? Do vaccines work against Omicron? The new South African study - which has not yet been peer-reviewed - found the Pfizer/ BioNTech vaccine may result in up to 40 times fewer neutralising antibodies against Omicron than against the original Covid strain.

But Omicron's ability to escape vaccine antibodies is "incomplete", said Prof Alex Sigal, a virologist at the Africa Health Research Institute, who led the research. He said the results, based on blood tests from 12 people, were "better than I expected of Omicron". Prof Sigal said vaccination, combined with previous infection, could still neutralise against the variant. That suggests boosters may bring a significant benefit.

Scientists believe previous infection, followed by vaccination or a booster, is likely to increase the neutralisation level and will probably protect people against severe disease. More data on how well the Pfizer jab works against Omicron is expected to be released in the coming days. There is no significant data yet on how the other jabs hold up against the new variant.

# *Canada, U.K. and Australia join U.S. in Diplomatic Boycott*

Canada, U.K. and Australia join U.S. in diplomatic boycott of Beijing Olympics "I'm doing it because it's in Australia's national interest," Prime Minister Scott Morrison said, citing human rights abuses. "It's the right thing to do." Canada will join the United States, the United Kingdom and Australia diplomatic boycott of the Beijing Winter Olympics over human rights concerns, Prime Minister Justin Trudeau said Wednesday.

The announcement came after the White House, the Australian government and the UK government confirmed diplomatic boycotts of the Winter Games in February to protest Chinese human rights abuses. China has vowed to react with "firm countermeasures."

Trudeau said his government has been in talks with allies about it in recent months. "We are extremely concerned by the repeated human rights violations by the Chinese government," Trudeau said. "They should not be surprised we will not be sending any diplomatic representation."

The diplomatic moves by Canada, the U.S., Britain and Australia do not affect their athletes' ability to compete in the games. Rights groups have pushed for a full boycott of the games, accusing China of rights abuses against ethnic minorities. The U.S. and Australian decisions fall short of those calls but come at an exceptionally turbulent time for international relations




and have been met with a barrage of criticism from China.

The White House confirmed Monday that it was staging a diplomatic boycott of the upcoming games and Australia followed suit Wednesday, with Prime Minister Scott Morrison saying it was "in Australia's national interest."

China, the U.S. and Canada essentially completed a high-stakes prisoner swap earlier this year but the reputation of the Chinese government has been severely tarnished in Canada. "Concerns around arbitrary detention are real and shared by many countries around the world," Trudeau said.

# drug that worsens blood pressure

*- by Denise Mann*

Many people with high blood pressure may take a drug that worsens it, says study Nearly 1 in 5 people with hypertension may be unintentionally taking a drug for another condition that causes their blood pressure to climb even higher, a new study suggests.

Left untreated or undertreated, high blood pressure will increase your risk for heart attack, stroke, kidney disease and vision problems by damaging blood vessels. Lifestyle changes such as weight loss, restricting salt intake, and/or medication can help move your blood pressure numbers back into the normal range. But asking your doctor whether any drugs you are taking for other conditions might be pushing those numbers up is worth the effort, the researchers said.

"The risk of [drugs] raising blood pressure may be simply overlooked, particularly for patients using these additional medications for many years," said study author Dr. Timothy Anderson. He is a clinician investigator and an assistant professor of medicine at Harvard Medical School in Boston.

There are effective therapeutic alternatives



to medications that may raise blood pressure or strategies to minimize risk, such as having patients monitor their home blood pressures when starting a new medication that may raise blood pressure," Anderson said.

For the study, they looked at the use of the drugs known to raise blood pressure, including antidepressants, prescription-strength non-steroidal anti-inflammatory drugs (NSAIDs), steroids, hormonal medications, decongestants and weight-loss pills among people with high blood pressure.

The study found that 18.5% of adults with high blood pressure reported taking a medication that increased their blood pressure, and those who did were more likely to have uncontrolled high blood pressure if they weren't also on blood pressure-lowering medications.

And people who were on blood pressure drugs were more likely to need higher doses to control their blood pressure if they also took drugs for other conditions that raise blood pressure, the study showed.

"It is always wise to ask your doctor about possible interactions between new medicines [including over-the-counter medicines] and existing conditions and treatments," he said. "This is particularly true for patients who see multiple doctors who may not always be up to date on their medication lists."

Sometimes alternatives are available, Anderson said. For example, acetaminophen doesn't raise blood pressure, but NSAIDs do. Both of these drugs can treat pain and reduce fever.

There are ways to prevent these scenarios. "Always bring the most updated medication list to each doctor's visit," Goyfman recommended.

If your blood pressure is elevated, contact your doctor to find out what to do next.

# Fun Things to Do on Christmas Day

***- By Emma Singer***

The presents have been torn open, the Nutella pancakes have been devoured and you've FaceTimed every family member who's not at your house, but when you look at your watch, it's only 9 a.m. Yep, there's something about this particular holiday that can make you feel like you've lived a whole life by noon, so it's no surprise that you might find yourself searching for some fresh ideas for things to do on Christmas Day. Good news: We've got you covered with a round-up full of festive, entertaining ways to pass the hours—from hosting a movie night full of your favorite Christmas movies, to passing the time with some Christmas-themed arts and crafts. Whether you're spending the holidays with your entire extended family or it's just you and your boo, these winter activities will have you feeling jolly all day long.



### 1. TOUR THE CHRISTMAS LIGHTS

Once all the leaves have fallen from the trees and winter sets in, the landscape can look a little drab—especially in the absence of fresh-fallen snow. That's precisely why the appearance of ornate and enchanting Christmas light displays is a sight for sore eyes. Savor the holiday magic as long as possible by making a point to tour your illuminated neighborhood (or one nearby) on Christmas Day. If it's too frosty to take a tour on foot, you can always pile the family in the car for a drive-thru Christmas lights event. (Note: Hot chocolate and Christmas cookies are optional, but highly recommended.)

### 2. WATCH A CHRISTMAS MOVIE



From black-and-white classics that will leave you misty-eyed under the mistletoe (It's a Wonderful Life, anyone?) to slapstick holiday favorites that will make the whole family jolly, there are no shortage of excellent Christmas movies for any crowd to enjoy. Gather your buddies or snuggle up solo for a Christmas Day viewing experience that promises plenty of holiday vibes, and pairs well with a hot beverage to boot. Not sure which film to choose? Consult our list of Christmas classics and you're guaranteed to find a feel-good film for audiences of all ages.

### 3. CHECK OUT A BALLET PERFORMANCE OF 'THE NUTCRACKER'

Tchaikovsky's 'The Nutcracker' might have started off as a flop, but this gorgeous classical ballet has evolved into one of the most widely-recognized features of the Christmas season. The music alone is worthy of your Christmas playlist, but nothing beats the experience of hearing it performed as it was intended (i.e., brought to life with ballet). The graceful and gravity-defying movements of professional dancers provide a holiday feast for the eyes—so if you can score some tickets to a live performance, we highly recommend it.



### 4. CLEAN UP AND DONATE

What better way to get into the holiday spirit on Christmas Day than by giving back? But if you're suddenly inspired to volunteer, keep in mind that most nonprofits get inundated around the holidays and actually need help at other points in the year. Instead, make room for your new loot by working your best Marie Kondo magic and then donating gently used items to organizations that need it like the Salvation Army, Dress for Success, Goodwill and Soles4Souls. Not only will it feel great to free up some space in the closet, but scientific research shows that kindness makes people happier.

### 5. MAKE IT A THEMED FAMILY GAME NIGHT

Not up for a major outing on Christmas Day? We don't blame you...after all, the fire is so inviting. In fact, the holiday season is a perfect occasion to cozy up and relax—and if you find yourself searching for something more to do, simply make it a game night. To keep things appropriately festive, we suggest you stick to holiday-themed games. Good news: This can be done even if your game closet isn't already stocked with campy holiday options—just check out our roundup of family-friendly (and a few grown-up) Christmas games, many of which come in free printable form, and let the play begin.





# Varma Kalai

Varma Kalai (Tamil: varmakkalai, Malayalam and Sanskrit: marma-vidya, Sinhala: maru kalā, Telugu: marma-vidya kaḷa) is an Indian traditional art of vital points. It originated in present-day kanyakumari, Tamil Nadu. It combines massage, alternative medicine, traditional yoga and martial arts in which the body's pressure points (varmam) are manipulated to heal or cause harm. The healing application called Vaidhiya Murai is part of Siddha medicine (siddha vaidyam).

Its combat application is known as Adimurai (it includes a component called Varma Adi, meaning "pressure-point striking") can be done either empty-handed or with a blunt weapon such as a stick or staff. Varma Kalai is usually taught in the advanced stage of Adimurai, Kalaripayattu, and Silambam in Kerala and Tamil Nadu respectively; strikes are targeted at the nerves, veins, tendons, soft tissues or ligaments, organs and bone joints.

Folklore traces varma kalai to the god Shiva who is said to have taught it to his son Murugan. While disguised as an old man, Murugan passed the knowledge of 108 Varmams to the sage Agastya[4] who then recorded it and disseminated the skill among his students. Nadars tribe claims varma kalai was given to them by Agastya . Siddha medicine is also attributed to Agastya. With numerous other scattered references to Varmam in Vedic and epic sources, it is certain that Tamil Nadu's early fighters knew and practiced attacking and defending vital points.

Knowledge of the body's vital points in India included not only humans but also elephants. Known as nila, learning these points on an elephant's body was and remains necessary for mahouts. Prodding particular nila with a stick elicits various responses such as bringing the animal under control or making them kneel. Warriors would learn to attack certain nila on opposing war-elephants during battle, which could either kill or frighten the animals. The national museums of Sri Lanka have documented at least 86 nila and their functions.

# கல்விக்கதிர்



## மலையகத்தின் கல்வி அபிவிருத்திக்காக ஒன்றிணைவோம்

இரா.சிவலிங்கம்



மலையக மக்கள் இலங்கைக்கு வருகைத் தந்து 200 வருடங்களுக்கு மேலாகின்றன. மலையகச் சமூகத்திற்கு கிடைக்கப்பெற்ற கல்விவாய்ப்புக்கள் கூட இலங்கை சுதந்திரமடைந்து 30 வருடங்களுக்கு பின்னரே கிடைத்தது. இவ்வாறு கிடைத்த கல்வியின் வாய்ப்புக்களை மலையகம் முழுமையாக பயன்படுத்திக் கொண்டதா? என்பதை பின்நோக்கிப் பார்த்தால் இன்னும் பூரணமாக பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதை அறியலாம். இம்மக்கள் ஒரு காலத்தில் மூன்றாவது தேசிய இனமாக இருந்திருக்கின்றார்கள். என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களுக்கு பல சந்தர்ப்பங்களில் கல்வி வாய்ப்புக்கள் புறக்கணிக்கப்பட்ட நிலையிலும் கூட இன்று ஓரளவு கல்வி நிலைகள் மாறிக்கொண்டு வருகின்றன. (தரம் 5 புலமைப் பரீட்சைப் பெறுபேறுகள், க.பொ.த. சாதாரணத் தரப் பெறுபேறுகள், க.பொ.த. உயர்தரப் பெறுபேறுகள்) இந்த சந்தர்ப்பத்திலாவது மலையகத்தின் கல்வி அபிவிருத்திக்காக ஒரு கல்விப் புரட்சியை உருவாக்க வேண்டியது காலத்தின் தேவையும், கட்டாயமும் ஆகும்.

இப்புரட்சியை ஆரம்பிப்பது யார்? எங்கிருந்து தொடங்குவது, யார் யாரை இணைத்துக் கொள்வது இது யாருடைய பொறுப்பு என பல்வேறு கேள்விகள் எம் மத்தியில் இருந்தாலும் கூட மலையகத்தில் ஒரு கல்விப் புரட்சியை அல்லது மறுமலர்ச்சியை உடனடியாக உருவாக்க வேண்டும் என்பது மட்டும் தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளது.

இன்று இலங்கையில் வாழும் ஏனைய சமூகங்களோடு ஒப்பிடும் போது மலையக மக்கள் பொதுக் கல்வி, உயர்கல்வி, பல்கலைக் கழக கல்வி, சுகாதாரம், சௌக்கியம், அரசாங்கத் தொழில் வாய்ப்புக்கள், சுய தொழில் வாய்ப்புக்கள், சிறுவர் போசணை, வீடமைப்பு, சமூக நலன்கள், நிலவுரிமை, போக்குவரத்து, தொழில் பயிற்சிகள், சிறுவர் உரிமைகள், சிறுவர் பராமரிப்பு, தாய் சேய் நலன், சம்பள உயர்வு, சமூக உரிமைகள், கலை கலாசார பண்பாட்டு விழுமியங்கள், அரசியல் உரிமைகள், சமூக பொருளாதார காரணிகள், வாழ்க்கைத் தரம், விளையாட்டு போன்ற பல விடயங்களிலும் தேசிய மட்டத்தை விட பின்தங்கிய நிலையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கான காரணங்கள் எவை என தேடிப்பார்க்கும் போது ஒரு விடயம் தெளிவாக தெரிகின்றது. குறிப்பாக ஒரு சமூகத்தின் கல்வி வளர்ச்சி பின் தங்கிய நிலையில் இருக்கும் போது மேற்கூறிய அனைத்துப் பிரச்சினைகளும் ஒரு நச்சு வட்டத்தைப் போன்று தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த 21 ஆம் நூற்றாண்டில் உலகமானது மிக வேகமாக முன்னேறிக் கொண்டு இருக்கும் நிலையில், இலங்கையில் வாழும் ஏனைய சமூகங்களும் உலக மாற்றத்திற்கு ஏற்ப தங்களைத் தயார்படுத்திக் கொண்டு இருக் கின்றார்கள். எனவே மலையக சமூகமும் ஏனை சமூ கங்களோடு போட்டிப் போட்டு வாழ்வதற்கு தங்களை தயார்படுத்திக் கொள்ளவேண்டும். அத்துடன் உலக மாற்றத்திற்கு ஏற்ப தங்களை முன்னேற்றிக் கொண்டு வாழ்கின்ற ஒரு வாழ்வியல் கலாசாரத்தை உருவாக்க முயற்சிக்க வேண்டும். தங்கி வாழ்கின்ற கலாசாரத்தை முற்றாக விடுவதற்கு முயல வேண்டும். இனியும் நாம் அரசாங்கத்திடம் அதிகமான சலுகைகளைத் தொடர்ந்து எதிர்பார்க்க முடியாது. அரசாங்கத்தின் கொள்கை மாற்றங்கள் தொடர்ந்து சிறுபான்மையினருக்குச் சாதகமாக அமையாத போது பாரிய நெருக்கடிகளை எதிர்காலத்தில் சந்திக்க நேரிடலாம்.

மலையகத்தின் வரலாறு 200 வருடங்களை கடந்த போதும் இன்று வரையும் மலையகத்திற்கென ஒரு கல்வி அபிவிருத்திக் குழு முறையாக உருவாக்கப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சில கட்சிகளின் முயற்சியால் தேர்தல் காலங்களில் சில புத்திஜீவிகளை அழைத்து சில கலந்துரையாடலை நடாத்தி சில விடயங்கள் முன்னெடுக்கப்பட்ட போதும் தேர்தலின் பின்னர் அவை கைவிடப்பட்டு தொடங்கப்பட்ட நிலையிலேயே பல அமைப்புக்களும், சங்கங்களும், கழகங்களும் இருப்பது வரலாற்று உண்மையாகும்.

மலையகச் சமூகத்தைச் சேர்ந்த புத்தி ஜீவிகளான, வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், இலங்கை நிருவாகச் சேவை தரம் I,II,III உத்தியோகத்தர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், அதிபர்கள், தொழில் தருநர்கள், மற்றும் அரசதுறை உத்தியோகஸ்தர்கள், சமூகத்தை வழிநடத்தக் கூடிய சமூகத் தலைவர்கள் போன்றவர்களை மலையகச் சமூகம் இன விகிதாசாரத்திற்கு ஏற்ப உருவாக்கியுள்ளதா? என்பதை பார்க்கும் போது இன்னும் நாம் குறைவான மட்டத்திலேயே இருக்கின்றோம் என்பது மட்டும் உண்மை.

இனிமேலும் தாமதிக்காது மலையக அரசியல் கட்சிகள், தமக்கு கிடைக்கின்ற நிதியில் ஒரு குறிப்பிட்ட தொகையை கட்சி பேதம், ஜாதி, மதம், பிரதேசம் போன்ற பேதங்களை பார்க்காது மலையகத்தின் கல்வி வளர்ச்சிக்காக ஒதுக்க வேண்டும். இதற்காக மலையக புத்திஜீவிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்வித் துறையினர், சட்டத்துறையினர், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், தொழிலாளர்கள், வியாபாரத் துறையினர், தொழில் தருநர்கள், நிருவாகச் சேவை உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், விளையாட்டுத் துறையினர், கலைஞர்கள், நலன் விரும்பிகள், சமூக ஆர்வலர்கள், அரச சார்பற்ற அமைப்பினர், சமூக சேவையாளர்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், மலையகத்தின் முன்னோடிகள், கல்வித்துறை ஆர்வலர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், பாடசாலைகளின் பழைய மாணவர்கள், மலையகத்தைச் சார்ந்த வெளிநாட்டில் வேலை செய்கின்



றவர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், சமூக சேவை மன்றத்தினர், மேலும் மலையக சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்காக உதவி செய்த உதவி செய்கின்ற ஏனைய அனைத்து சமூகத்தினரையும் ஒன்றிணைத்து மலையகக் கல்வி அபிவிருத்திக் குழுவை உருவாக்க வேண்டும்.

இதன் மூலமாக ஒரு புதிய வேலைத்திட்டத்தை ஏற்படுத்தி மலையகத்தில் ஒரு கல்வி மறுமலர்ச்சியை (புரட்சியை) ஏற்படுத்த வேண்டும். 2015ஆம் ஆண்டை மலையகத்தின் கல்வி ஆண்டாக பிரகடனப்படுத்தி ஒரு வேலைத்திட்டத்தை அனைவரும் சேர்ந்து முன்னெடுக்க வேண்டும்.

மலையகத்திற்கு இருக்கின்ற ஒரே ஒரு முதலீடு கல்வி நிலையை உணர்ந்து கொண்டு அரசாங்கத்தால் ஒதுக்கப் படும் நிதியினை மலையக கட்சிகள் முறையாகவும், பொருத்தமானதாவும் செலவு செய்ய வேண்டும். அத்து டன் மலையக மக்களுக்கான மிக அவசியமான வேலைத்திட்டங்களை முன் கூட்டியே திட்டமிட்டு செயற்படுத்த முயற்சிக்க வேண்டும்.

மலையகத்தில் கல்வித் துறைக்கான ஒரு பொது தகவல் வளநிலையம் இதுவரை உருவாக்கப்பட வில்லை. உதாரணமாக மலையகத்தைச் சேர்ந்த எத்தனை மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் இருக்கின்றார்கள் என்பதற்கு கூட சரியானத் தகவல்கள் இல்லை. இதே போல் பாட ரீதியான ஆசிரியர்களின் விவரங்கள், பாடங்களுக்கு பற்றாக்குறையான ஆசிரியர்களின் விவரங்கள், இடைவிலகிய மாணவர்கள், பாடசாலைக்குச் செல்லாத மாணவர்கள், தொழில் அற்றவர்கள், வெளிநாட்டில் வேலை செய்கின்றவர்களின் விபரங்கள், மலையக பாடசாலைகளின் தனிப்பட்ட வளர்ச்சிக்கான பதிவுகள், உயர்கல்வி பெற்றவர்களின் தகவல்கள் போன்ற எந்த விடயங்களுக்கும் முறையான பதிவுகள் இல்லை. என்பது குறிப்பிடத்தக்கது. இதனை தேடுவதற்கான முயற்சிகளும் இன்னும் பூரணமாக முன்னெடுக்கவில்லை.

ஆனால் இலங்கையில் ஏனைய சமூகங்களில் இவ் விடயங்களில் கூடிய கவனம் செலுத்தப்பட்டு வருகின்றன. என்பதை நாம் உணர வேண்டும்.

மலையக மக்களின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கென அரசாங்கத்தால் ஒதுக்கப்படும் பல மில்லியன் ரூபா முறையான திட்டங்கள் வகுக்கப்படாததால் மீண்டும் திறைசேரிக்கு செல்கின்ற துர்ப்பாக்கிய நிலை தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. இந்த விடயங்களுக்கு அரசாங்கத்தையோ, மக்களையோ குறை சொல்ல முடியாது. இதன் முழுப் பொறுப்பையும் சம்பந்தப்பட்டவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இன்று எம் மத்தியில் பிரதேச சபை, மாகாண சபை, நாடாளுமன்ற அமைச்சர்கள், நாடாளுமன்ற பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் இன்னும் போதியளவு தேசியப் பாடசாலைகள், மலையகத்திற்கான பொது நூலகம், மலையகத்திற்கான பல்கலைக்கழகம் உருவாக்கப்படவில்லை என்பதும் இங்கு சுட்டிக்காட்டப் பட வேண்டிய தேவையுள்ளது.

மேற்கூறியவர்களின் பதவிகளைப் பயன்படுத்தி கல்விசார் வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும்.

மலையகம் சார்ந்த பாடசாலைகளுக்குத் தேவையான அபிவிருத்திசார் விடயங்களை தூர நோக்கத்தோடு மறைந்த அமைச்சர் சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்களால் முன்னெடுக்கப்பட்டது யாவரும் அறிந்த உண்மையாகும். இன்றைய மலையக கல்வி வளச்சிக்கு வித்திட்டவர் அவரே ஆகும். தொடர்ந்து அவரின் கனவை நனவாக்க வேண்டியது ஒவ்வொருவரதும் கடமை யாகும். மலையகப் பிரதேச பாடசாலையின் மனித பௌதிக வளங்களை பொருத்தமானவர்களை நியமித்து அவர்களின் ஊடாக ஆய்வு செய்த பின்னர் அதற்கேற்ப தங்களுடைய வேலைத்திட்டங்களை குறிப்பிட்ட வருடத் தில் முன்னெடுக்க வேண்டும். சகல மலையக குழுக்களும் (கட்சிகளும்) கல்வி அபிவிருத்திக்குப் போட்டிப் போட்டுக் கொண்டு வேலைத்திட்டங்களைச் செய்வதற்கு முன்வர வேண்டும். குறிப்பாக தங்களுடைய கட்சியின் செல்வாக்கு எந்தப் பிரதேசத்தில் அதிகமாக இருக்கின்றதோ, அந்த பிரதேச பாடசாலைகளையாவது அபிவிருத்தி செய்தாலே மலையகப் பாடசாலைகள் ஓரளவு வளர்ச்சிப் பெற்று விடும். .

மலையகத்தில் கல்வியில் ஒரு புரட்சியை ஏற்படுத்த வேண்டுமானால் அனைவரும் ஒன்று சேர வேண்டும். ( ஓய்வு பெற்ற மலையகப் பேராசிரியர்களின் வழிகாட்டல் ஆலோசனைகளைப் பெற்று முன்னோடி வேலைத் திட்டங்களை முன்னெடுக்கலாம்)

எமது சமூகத்தின் விடியலுக்காக கல்வியை ஒரு முதலீடாகக் கொண்டு செயல்பட வேண்டும். மலையக கல்வி அபிவிருத்திக்கு ஒவ்வொரு கட்சியும் தகுதியான பிரதிநிதிகளையும், இணைப்பானவர்களையும், ஆலோசகர்க ளையும் தெரிவு செய்து அதன் மூலமாக தரவுகளும் தகவல்களும் பெறப்பட்டு கல்வி நடவடிக்கைகளை முன் னெடுக்க வேண்டும். குறிப்பாக மாணவர்களின் பெறு பேற்று அடைவுகள் (தரம் 5, 11, 13) பற்றி கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

இனி வரும் காலங்களில் குறைந்த வெட்டுப் புள்ளியை தேசிய பரீட்சைகளில் எதிர்ப்பார்க்க கூடாது. உதாரணமாக ஸ்ரீ பாத தேசியக் கல்வியற் கல்லூரிக்கு கூட எதிர்வரும் காலங்களில் பட்டதாரிகள் மட்டுமே உள்வாங்கப்படுவார்கள் என்ற நிலைப்பாடுகள் அரசாங்கத்தால் கொண்டு வரப்படலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது எமது சமூக மாணவர்கள் பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

எனவே ஒரு சமூகத்தின் விடியலுக்கு கல்வி முக்கியம். ஒரு சமூகமானது கற்ற சமூகமாக மாறுகின்ற போதே அச் சமூகம் உருவாகியதற்கு அர்த்தமுடையதாக இருக்கும். அத்துடன் ஒரு சமூகத்திற்கு இருக்கின்ற பழிச் சொல்லில் இருந்தும் விடுபட முடியும். பின்தங்கிய ஒரு சமூகத்தின் சமூக இடம்பெயர்வுக்கு கல்விதான் அடித்தளம் அதனை உருவாக்குவதற்கு மலையகம் சார்ந்த அனைவரும் ஒன்று பட்டு உழைக்க வேண்டும். எனவே கல்வி யில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு பல உடனடி நடவடிக்கைகளை எம்மவர்கள் மேற்கொள்ள வேண்டியது முக்கியமாகும்.



# கலைக் கதிர்

## எட்டாத நிலவுக்கே எத்தனை ஏச்சுக்கள்





அவளும் ஒரு அழகிய நிலவுதான்
எல்லா கண்களும் முதல் காணும்
கறுப்புப் படலங்கள் போல்
இவள் என்னதான் ஒளி வீசினாலும்
கண்கள் கறுப்புப் படலங்களைத்தான்
காணத்துடித்துக் கொண்டிருக்கின்றதோ என்னவோ
அவளுக்கு தெரிந்தெல்லாமே
மென்மை ஒளியும் மின்னும் அழகும்தான்
மேகங்கள் ஓடும்போது
மறைந்தும், தெரிந்தும்,
ஒளிந்தும் வாழும்
அவள் ஒரே நிலையில் தான் இருக்கின்றாள்
என்பது யாரும் உரைப்போவது இல்லை
இயற்கை நியதியில்
பூகோள விதிகளுக்கு ஒத்து ஓடிக்கொண்டு
புதுமை புரிய,அவள் முழுமை காட்ட
மாற்றங்களின் வழித்தடத்தில் பிறைகளாகின்றாள்
வில்லாகி விட்டமாகி
வெளிப்படும் வடிவில் வேறானால் என்ன
வெளிச்சம் தர மறுப்பதில்லை
அந்த வெண்நிலவு
சொன்னாலும் சொல்லாது விடினும்
பார்ப்பவர்களுக்கு
தேய்நிலவவள் பலர் விமர்சனத்தில்
தித்திப்பாகிறாள்
அவளுக்கு மட்டுமே தெரியும்
எண்ணி ஐந்து மூன்று நாளில் முழுமையாவாள்
தான் பூரணியாய் பூரணமாவாள் என்று
புரிவார்க்கு புரியும் புதிர்
தெரிவார்க்கு தெரியும் விடை
நகைப்பவர் நகைக்கட்டும்
நதி இலக்கில் ஓடுவதை
இயற்கையும் இறைவனும்
இடைநிறுத்தப் போவதில்லை

## சண்முகம் அருளானந்தம் கேணிப்பித்தன்

கேணிப்பித்தன் என்ற புனைப்பெயருடைய எழுத்தாளர் ச. அருளானந்தம் திருகோணமலையிலே ஆலங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆளுமை மிக்க நாடறிந்த எழுத் தாளர்களுள் ஒருவர். இவர் ஆங்கில ஆசிரியராக, அதிபராக, வவுனியா கோட்டக் கல்வி மற்றும் மாவட்டக் கல்வி அதிபராக, கல்வி அமைச்சின் மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பா ளராக வும், ஓய்வு பெற்ற பின் பல அரச சார்பற்ற நிறுவனங் களில் வளவாளராகவும், பயிற்றுவிப்பாளராகவும் கடமை யாற்றி, ஒபர் நிறுவனத்தின் அனர்த்த முகாமைத்துவம், கல்வி ஆலோச கராகவும் கடமையாற்றியவர்.

பதின்நான்கு வயது தொடக்கம் ஐம்பது வருடங்களாக இலக்கியத்துறையில் பயணித்த இவரது முதற்படைப்பாக 'இராவணன் கண்ணீர் ' எனும் சிறுகதை 1964 இல் சுதந்தி ரன் பத்திரிகையிலும், 'ஏனிந்தப் பிறவி' எனும் கவிதை சிந்தா மணிப் பத்திரிகையிலும் வெளிவந்தது. இலக்கியத்துறை யில் அதிக ஈடுபாடு கொண்டுள்ள இவர் சிறுவர் இலக்கியம், கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை, விமர்சனம் என பல் வேறுபட்ட துறைகளிலும் எழுதிவந்துள்ளார். அவற்றுள் இன்பக் கனிகள், உல்லாசப் பயணம், கனவு மெய்பட வேண்டும், அனர்த்த முகாமைத்துவம் ஓர் அனுபவ அணுகு முறை , கேணிப்பித்தன் கவிதைகள் என நூற்றிற்கும் மேற்பட்ட நூல்களை தனது எழுத்துத் திறமையால் படைத்த இவரது நூல்களுள் பதினைந்து நூல்கள் மாகாணப் பரிசும், ஆறு நூல்கள் சாஹித்ய விருதும் பெற்று திருமலை யின் புகழ் பெற்ற கவிஞராகத் திகழ்ந்து கொண்டிருக்கிறார். சுதந்திரன், தினகரன், வீரகேசரி, சிந்தாமணி , தினமுரசு, தினக்கதிர், ஈழுமணி போன்ற பத்திரிகைகளிலும் வெற்றிமணி, குமரன் எனும் பல சஞ்சிகைகளிலும் எழுதி வந்துள்ளார்.



இவருடைய இலக்கியங்கள் மக்கள் வாழ்க்கையைச் சித்திரிப்பதாயும், சமுதாய மேம்பாட்டிற்கு வழி வகுப்பதாகவும் படைக்கப்பட்டுள்ளன. மேலும் மாணவர்கள் கல்வியில் முன்னேற வேண்டும் என்ற நோக்கத்துடன் வவுனியாவில் பல கிராமங்களிலும் பாடசாலைகளை உருவாக்குவதில் அரும் பணியாற்றியுள்ளார். இவரைப் போலவே இவரது மகனும் திருகோணமலை சித்திரக் கலையில் தேர்ச்சி பெற்ற கலைஞ ராக வலம் வந்தவர்.

கேணிப்பித்தன் பல்வேறு துறைகளில் விருதுகளைப் பெற்றவர். 1990 கௌரவ ஆளுநர் விருது, 2004 கலாபூஷணம் அரச விருது, மதுக்கினிய பாட்டு (சிறுவர் பாடல்) அகில இலங்கை சாகித்திய விருது, கிழக்கு மாகாண சாகித்திய விருது , வவுனியா நண்பர்கள் இலக்கிய வட்டம் அளித்த சிறுவர் இலக்கிய விருது, கிழக்கு மாகாண சாகித்திய ஆளுநர் விருதுப் போன்ற விருது களையும், சின்ன தேவதைகள் (சிறுவர் கதை) இலங்கை நூலக ஆவணவாக்கற் சேவைகள் சபையில் பரிசு போன்ற பல பரிசுகளையும் பெற்றவர்.

க. மங்களேஸ்வரி

## பற்றற்ற நிலை

என் மேசையில்
கிடக்கும் தம்மபதத்தில்
ஒரு புத்தனாய்
குந்தியிருக்கிறதோர் நுளம்பு

சற்றைக்கு முன்னர்
அருந்திய
பத்து மில்லிலீட்டர் குருதி
தற்காலிக
பற்றற்ற நிலை

நிர்ச்சலமான அதன்
விழிகளில்
பெருங்கனவென
வளர்கின்றது
அரசமரம்

நான் ஒரு சீடனாய்
அமர்கின்றேன்
நுளம்பின் கனவில்

கவிதை பிரதியொன்றில்
நீங்கள் இந்த காட்சியை
படிக்கையில்
நான் நுளம்பினை
அடித்துவிடுகிறேன்

சிந்திய குருதி
கனவினையும்
நனவினையும்
இணைக்கும்
ஒரு கோட்டினை
வரைகிறது

நான்
மத்தியில் இருக்கிறேன்
புத்தனும்
நுளம்பும்
இருகரைகளில்

புத்தனையும்
நுளம்பினையும்
கனவிலும்
நனவிலும்
இடம்மாற்றி
புனைவதனூடு
நகர்கிறது
பிரதியின் அரசியல்

தி.லலிதகோபன்

## நிசப்தங்களின் மொழிபெயர்ப்புக்கள்



என் மௌனங்களுக்குள்
கனவுப் பிறப்புக்கள்
தினமும் நிகழ்ந்தாலும்
அது கானலில்
கண்ட காட்சிகளாக
கல்லறைகளுக்குள்
அடங்கிக் கிடக்கும்
வெற்றிடத்தைப் போல
உறங்கியே கிடக்கிறது..

சிறு கீறலாக
புன்னகைக்க
கற்றுக் கொள்ளும்
நொடிகளிலும்
மனதின் சிறைக்
கூடுகள்
கடிவாளமிடுகிறது....

எண்ணங்களின்
சுவாச பரப்புக்கள்
பெருமூச்செறியும்
வேளைகளில்
தொலைந்துபோன
வசந்தகாலங்களின்
வாசம் நாசிவரை
வீசிச் செல்கின்றது...

ஆயிரம் வண்ணங்கள்
பூசித் திரிந்த
வாலிபத்து
பசுமை விரிப்புக்கள்
கறுப்பு வெள்ளையாகி
கண்மூடித் துயில்கிறது...

கனக. தீபகாந்தன்

# நானும் சொல்கிறேனே...!

## சென்றவாரத் தலைப்பு
## என்னை ஊக்கப்படுத்தியவை!

02


### தேர்வு செய்யப்பட்டவர்களின் விவரங்கள்

**இந்தவாரம் சிறப்புப்பதிவாகத் தேர்வாகி காலைக்கதிர் வார இதழ் வழங்கும் ரூபா.500 பரிசினைப் பெறுகிறது!**

நானொரு விசேட தேவையுடைய பெண். என்னால் இலகுவாக பல இடங்களுக்கும் செல்வது இயலாத காரியம். நடமாட்டம் குறைந்த என்னை, வெளி உலகம் எப்படியிருக்கும் என்பதை உணர வைத்ததோடு, எனக்குள் நம்பிக்கையைக் கட்டியெழுப்பியவை நான் வாசித்த புத்தகங்களே! அவை இல்லாதிருந்தால் என் வாழ்வு என்னவாகியிருக்குமென்பது தெரியாது.

இன்று கணினி மென்பொருளாளராக என்னால் பணி செய்ய முடிகிறதென்றால், அதற்கான தன்னம்பிக்கையை விதைத்தவை, என்னை ஊக்கப்படுத்தியவை புத்தகங்கள்தான்.

**பிரமிளா நடராஜா**
**- நீர்கொழும்பு.**



என் வீட்டின் சூழ்நிலைதான் என்னை ஊக்கப்படுத்திய முதல் காரணி. தந்தையை இழந்த குடும்பத்தில் தாயின் தனித்த போராட்டமே என்னை மட்டுமல்ல என் அண்ணா, தங்கை என எங்கள் மூவரையுமே கடுமையாகப் போராட வைத்தது.

உறவுகளை எதிர்பார்க்க முடியாத நிலையில் நண்பர்களே என்னைத் தாங்கிப்பிடித்த தூண்கள். அம்மாவின் ஆசைப்படி மூவரும் இன்று சிறப்பான கல்வி நிலையை எட்டியிருப்பது அந்த ஊக்குவிப்புகளினாலேயே!

**ப. ஐங்கரன்,**
**கனடா**
**(தெல்லிப்பழை)**

நான் கல்வி கற்ற விக்டோரியாக் கல்லூரிதான் என்னுடைய வாழ்க்கையில் முழுக்க முழுக்க ஊக்கம் கொடுத்தது என்பதைக் கூறுவதில் பெருமையடைகிறேன்.

படிப்பு மட்டுமில்லாது கலை, விளையாட்டு என்று ஆசிரியர்கள் ஊக்கம் தந்திருக்காவிட்டால், இன்று நான் எப்படியிருந்திருப்பேனோ தெரியாது.

**த.பார்த்திபன்,**
**வட்டுக்கோட்டை**

காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir

## நானும் சொல்கிறேனே.....!

- காலைக்கதிர் வார இதழின் நானும் சொல்கிறேனே என்னும் இந்தப் பகுதியில் நாங்கள் தரும் விடயத் தலைப்பினூடாக உங்களது அனுபவங்களையும் எண்ணங்களையும் பகிர்ந்து கொள்ளலாம்.
- சுருக்கமாகவும் சுவையாகவும் எழுதப்படும் விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதோடு சிறப்புப் பரிசுகளுமுண்டு!



இந்த வாரத்துக்கான தலைப்பு
## யாருக்கும் பொறுப்பில்லை!

உங்கள் எழுத்துக்களை எதிர்வரும் 15.12.2021 புதன்கிழமைக்கு முன்னர் பின்வரும் ஏதாவது ஒரு வழிமுறையினூடாக எமக்கு அனுப்பி வைக்கவும்

நானும் சொல்கிறேனே.....!
காலைக்கதிர் வாரஇதழ்
Address - No.551 A, Kasthuriyar Road, Jaffna
மின்னஞ்சல் - kalaikkathirweekly@gmail.com
Whatsapp & Viber - 076 443 8622
சமூகவலைத்தளங்கள் - kalaikkathir (காலைக்கதிர்)

# ஏன் இந்த மௌனமடி.....

## குறும்(பு)க்கதை

**லீ**

தொப்........

மனோகரிக்கு பாம்புச் செவி, சமையலறைக்குள்ளிருந்து இரவுச் சமையல் செய்துகொண்டிருந்தவள் காதில் அந்தச் சத்தம் கேட்டுவிட்டது, உடனடியாக அலேட்டானாள் அவள். ‘இச்சேருங்கோப்பா…நான் கூப்பிடிறது கேக்கல்லையே’ கணவன் சுந்தரேசனை உரத்து அவள் கூப்பிட்டாள். சுந்தரேசன் ரி.விக்கு முன்னால் தொடர் நாடகமொன்றில் புதைந்து போய் கிடந்தான்.

‘இந்த மனுசனுக்கு நாடகம் பாத்தால் அதுக்குள்ளையே தொலைஞ்சு போகும்’ என்றவளாய் ‘நான் கூப்பிட்டது கேக்கல்லையே..வேலிக்கரைத் தென்னை மரத்திலையிருந்து தேங்கா விழுந்ததப்பா. இந்தத் தேங்காய் விலையிலை உங்களுக்கென்ன அக்கறை. மூண்டு நேரமும் சமைச்சுப் கொட்டிற எனக்கல்லோ தெரியும் அதின்ரை அருமை’ என்றவள் இச்சேருங்கோப்பா எழும்பிப் போய் அதை பாத்து எடுத்துக் கொண்டு வாங்கோப்பா’ என உரத்துக் கத்த ‘இந்த மனிசிக்கு நான் நாடகம் பாக்கேக்கை குழப்பாட்டி வேலை ஓடாதே’ என புறுபுறுத்தபடி சுந்தரேசன் எழுந்து வெளியே போய் எல்லை வேலிக் கரையில் விழுந்த தேங்காயை ரோச்லைட் அடிச்சுத் தேடினான். தேங்காய் விழுந்து தானிருந்தது. ஆனாலது செல்லாச்சி மாமியின்ரை காணி முற்றத்தில் விழுந்து கிடந்தது. சுந்தரேசன் போன நேரத்தில் அவனது மாமி விரைந்து ஓடிவந்து அந்தத் தேங்காயை எடுத்துக் கொண்டு மறைந்ததைக் கண்டான். ஏதும் செய்வதறியாத சுந்தரேசேன், திரும்பி வந்து ‘தேங்காய் எங்கடை வீட்டுப் பக்கம் விழேல்லையப்பா செல்லாச்சி மாமியின்ரை வீட்டு முத்தத்திலை விழுந்திருக்கு அதை மாமி எடுத்துக்கொணடு போறா. அவவிட்டை நான் கதைச்சா பிரச்சனையெண்டு பேசாமல் வந்திட்டனப்பா’ என மனோகரியிடம் முறையிட்டான்.

வேலி எல்லையில் நிற்கும் அந்த தென்னை மரத்தால் அடிக்கடி மனோகரிக்கும் சுந்தரேசனின் மாமிக்கும் எப்பொழுதும் சண்டைதான். சுந்தரேசன் தனது சொந்த மாமியின் மகளைக் கட்டாமல் மனோகரியை காதலித்து கலியாணம் கட்டியதால் உண்டானது பகை.

சுந்தரேசனின் பாட்டனின் பெயரில் ஒரே காணியாக இருந்த காணி பாகப் பிரிவினை செய்யப்பட்டு சுந்தரேசனின் தகப்பனாருக்கும், அவரது சகோதரியான செல்லாச்சிக்கும் சமமாகப் பிரிக்கப்பட்டது. அப்படிப் பிரிக்கப்பட்டபோது சுந்தரேசனின் தந்தையின் எல்லை வேலிக்கு இரண்டடி உள்ளே உள்ள தென்னை மரம் அவர்களுக்கு உரித்தானது. மா, பலா என பல மரங்களையுடைய அந்தக் காணியில் ஒரேயொரு தென்னை மரந்தான். அதுவும் தற்போது தந்தையின் ஒரேயொரு வாரிசான சுந்தரேசனுக்கே கிடைத்துவிட்டதால் செல்லாச்சி மாமிக்கு பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அந்த மரத்திலிருந்து அடிக்கடி தேங்காய் விழும்போதெல்லாம் அக்கப்போர் நடக்கும். தங்கடை எல்லை வேலிக்கு உள்ளே உள்ள தென்னை மரத் தேங்காய் ஒண்டிரண்டு செல்லாச்சி மாமியின் காணிக்குள் விழுந்தால் போதும், ஒரு சண்டை மூளுவதை எதிர்பார்க்கலாம். சுந்தரேசனுக்கோ இது ஒரு பெரிய தலையிடி. அடிக்கடி இப்படி சண்டை மூட்டிவிடும் தென்னை மரத்தை வெட்டும்படி மனோகரி அடிக்கடி நச்சரித்தாலும், அவனுக்கு ஒரு மரத்தை வெட்டி வீழ்த்துவதில் எந்தவித உடன்பாடும் கிடையாது.

மனிதரைப்போல பாகுபாடுகாட்டி பயன்கொடுக்க மரங்களுக்குத் தெரியாததால் பல இடங்களில் மரங்கள் பல தறித்தெறியப்படுவதும் கோடு வழக்கென சிலர் அலைவதும் சகசமான விடயமாகும். இவர்களது எல்லை வேலித் தென்னையும் அப்படியொரு பிரச்சினைக்குரிய மரமாகப்போனது.

தனது வீட்டு மரத்துத் தேங்காய் தனக்கே உரித்து. தற்செயலாய் அது பக்கத்து வீட்டிலை விழுந்தால் அதை உடனடியாக தன்னிடம் ஒப்படைக்க வேண்டுமென்பது மனோகரியின் பிடிவாதம். ஆனால் செல்லாச்சி மாமி அதற்கெல்லாம் மசியத் தயாரில்லை. தனது தகப்பனார் நட்டுவளர்த்த தென்னை தனக்கும் சொந்தந்தானென்பது மாமியின் மாறாத விடாப்பிடி.

வழக்கம்போல அன்று மாலை வெளி முற்றத்திலிருந்து சுந்தரேசனும் மனைவி மனோகரியும் கதைத்துக் கொண்டிருந்தனர். திடீரென ஒரு சத்தம். ஆமாம் எல்லைவேலித் தென்னை மரத்திலிருந்து விழுந்த தேங்காயின் ஒலிதான் அது. சத்தத்தைக் கேட்ட மனோகரி உஷாரடைந்தவளாய் அதை கையகப்படுத்த விரைந்தாள். ஆனாலும் அது செல்லாச்சி மாமியின் முற்றத்தில் விழுந்திருந்ததைக் கண்டு சினமுற்றவளாய் ‘எங்கடை மரத்துத் தேங்காய் அது. அதை உடனடியா எங்கடை வளவுக்கை போடச் சொல்லுங்கோ..அப்பிடிப் போடாட்டி இண்டைக்கு வீண் பிரச்சனை வருமெண்டு உங்கடை மாமிட்டை சொல்லுங்கோ ’ என சுந்தரேசனைப் பார்த்து கொந்தளித்தாள் மனோகரி. தேங்காய் விழுந்த சத்தத்தைக் கேட்ட செல்லாச்சிமாமி இதையெல்லாம் சட்டை பண்ணாமல் அதனை எடுத்துக்கொணடு போக அவ்விடத்துக்கு வந்தாள். அதனைக் கண்டதும் ‘ரோசங்கெட்ட சனங்கள். நாங்கள் எத்தினை தடவை



ஷெல்லிதாசன்

சொல்லியும் உணர்ச்சியே இல்லாத மூதேவியள். ஒரு தேங்காய் வாங்க வக்கில்லாதது போல எங்கட மரத்துத் தேங்காய் எப்ப தங்கடை வளவுக்கை விழுமெண்டு நித்திரை கொள்ளாமல் காத்திருக்குதுகள்.’ என மனோகரி பலமாக கத்திக்கொண்டிருக்க அவள் கத்துவதை கேளாததுபோல விழுந்து கிடந்த தேங்காயை எடுத்துக்கொண்டு வீட்டுக்குள் சென்றாள். இதைப் பார்த்ததும் மனோகரிக்கு ரத்தம் கொதிப்படைந்தது. ‘பிச்சைக்காற நாயள், பார் நாங்கள் இவ்வளவு பேசியும்

> **’ரோசங்கெட்ட சனங்கள். நாங்கள் எத்தினைதடவைசொல்லியும்உணர்ச்சியே இல்லாத மூதேவியள்.
> ஒரு தேங்காய் வாங்க
> வக்கில்லாதது போல எங்கட
> மரத்துத் தேங்காய்
> எப்ப தங்கடை வளவுக்கை
> விழுமெண்டு நித்திரை
> கொள்ளாமல் காத்திருக்குதுகள்.’**

சுரணையில்லாமல் எடுத்துக் கொண்டு போகுதுகள். இனி இவளவையிலை இரக்கம் பாக்க ஏலாது. காளி ஆச்சியிட்டை நேத்திவைச்சு எங்கடை தேங்காயை களவெடுக்கிறவளின்ரை கை முறிய வேணுமெண்டு அவளின்ரை தலையிலை பாரத்தைப் போடப்போறன்’ என அவளே காளியாக மாறியவள்போல சுந்தரேசனை முறைச்சுப் பார்த்து ’உங்கடை மாமிக்கு எதுவும் சொல்ல உங்களுக்குப் பயமப்பா. என்ரை அண்ணன் மாரெண்டா வேலி யாலை பாயஞ்சு போய் உடனேயே தேங்காயை பறிச்செடுத்திட்டு வந்திடுவாங்கள். நீங்கள் பொம்பிளை யளுக்கு பயப்படுற ஒரு பொம்மனாட்டி’ என கணவனை கேலி செய்தவள் ‘இப்ப பாருங்கோவன் விளையாட்டை. காளியாச்சியை வைச்சு ஒரு வெருட்டுப் போட்டிருக்கிறன். உங்கடை மாமிக்கு காளியாச்சியெண்டா கெடி கலக்கமெண்டு எனக்குத் தெரியும். இப்ப நடக்கப்போற வேடிக்கையை பாருங்கோவன். இப்பிடியெல்லாம் வெருட்ட உங்களுக்கு மூளை வந்தாத்தானே’ என சுந்தரேசனை அவள் கிண்டலடித்த மறுகணம், செல்லாச்சி மாமிக்கு ரோசமோ அல்லது காளியாச்சியிலை ஏற்பட்ட பயமோ தெரியாது, தான் எடுத்துக்கொண்டு போன தேங்காயை தூக்கிவந்து சுந்தரேசனின் வீட்டுக்கு முன்னால் வீசியெறிந்துவிட்டு மறைந்துவிட்டாள்.

இதைக்கண்டதும் மனோகரி பெருமை பிடிபடாதவளாய் பலமாக சிரித்தபடி ‘இப்ப என்ன சொல்லிறீங்கள் உங்கடை மனிசியின்ரை கெட்டித்தனத்தைப் பற்றி? வாயிருந்தா
வங் காளம் போகலாமப்பா. சும்மா நாங்கள் வாயை மூடிக்கொண்டிருந்தால் சனம் எங்களுக்கு மேலையேறி சவாரி செய்து போடுங்கள். செல்லாச்சி மாமி இனி இந்தச் சென்மத்துக்கு எங்கடை தேங்காயிலை ஆசைப்படமாட்டா. அப்பிடியொரு வெருட்டெல்லே வெருட்டி வைச்சனான். இனி நாங்கள் மரத்தை தறிக்கவும் தேவையில்லை’ என வார்த்தை ஜாலம் புரிந்துகொண்டிருக்க சுந்தரேசனும் தான் இவ்வளவு காலமும் செல்லாச்சிமாமிக்கு தன்மையாய் எடுத்துச் சொல்லியும் எடுபடாத சங்கதியை தனது மனைவி சாதித்து விட்டாளே என பெருமைப்பட்டவனாய் செல்லாச்சி மாமி தங்கள் காணிக்குள் விட்டெறிந்த தேங்காயை ஆவலுடன் கையிலெடுத்தவன் அதனை இலாவகமாக குலுக்கிப் பார்த்தான். அப்படி குலுக்கிப் பார்த்தவன் சந்தேகம் வந்தவனாய் மீண்டும் அதனை குலுக்கிப் பார்த்தான் இளனிச் சத்தம் ஏதுமற்றதாய் தேங்காய் இலேசாகவும் இருந்தது. அவனுக்கு உண்மை புரிந்ததுவிட்டது. கையிலிருந்த தேங்காயை மனோகரி யின் முன்னால் தூக்கியெறிந்தான். மனோகரி பெருமை பிடிபடாதவளாய் பெருமிதத்துடன் சிரித்தபடி அதை சாவதான மாக ஆசையோடு தூக்கியெடுத்து அதனை குலுக்கினாள், பல முறை குலுக்கிப் பார்த்தாள். ஆனால் உள்ளிருந்து இளனியின் ஓசை ஏதும் வராது தேங்காய் மௌனம் காத்ததனை அறிந்த அவளது முகம் பேயறைந்ததுபோல சிவந்து போனது. அதைக் கவனித்த சுந்தரேசன் மனோகரியைப் பார்த்து நக்கல் சிரிப்பு சிரித்தான்.

செல்லாச்சி மாமியென்ன கொக்கா? மனோகரியின் பேச்சுக்கு, வெருட்டுதலுக்கு அவள் பயப்படுவாளா? கறிக்குதவாத ஒல்லித் தேங்காய் அவளுக்கு எதற்கு? அதுதான் செல்லாச்சி மாமி அதனை விட்டெறிந்தாள்.

மனோகரி தனக்கு ஏற்பட்ட மானக் கேட்டை எண்ணி மனங் கொதித்தவளாய் ஆத்திரத்தோடு தனது கையிலிருந்த தேங்காயை மீண்டும் செல்லாச்சி மாமியின் வீட்டு முற்றத்தை நோக்கி வீசினாள். வீசிய தேங்காய் தனது வீட்டு முற்றத்தில் வந்து தொப்பென விழுந்ததை கண்ட செல்லாச்சி மாமி வீம்புக்கு கை தட்டி பலமாகச் சிரித்தாள்.




# கன்னிப் பிரசவம்...

இளகிய மனம் இயற்கைக்கு விரைவாக இரக்கம் காட்டும் என்றே அவள் கார் கண்ணாடியை ஆர்வமாய் திறந்து பட்டமரம் சுட்டு பச்சமரமிடம் பசுமை வாங்கிவந்து சேர்ந்த தென்றலை இதமாய் வாங்கிக் கொண்டாள்.

(இத்தனை இயற்கையிடையே தனிமையில் ஓர் வயதான அம்மா)

பஸ்ஸின் வருகைக்கு இவள் துடிக்க வேண்டியதில்லையே. இந்த வழியில் தான் ஏராளமான பஸ்கள் போக்குவரத்துச் செய்கின்றதே ஆனால் ஏன் இந்த அம்மா பதற்றத்தோடு நிக்கிறாள் என்று சிந்தனைக்கு வேலை கொடுத்துக்கொண்டே சென்ற அவள் கால்கள் கார் நிறுத்தியை இறுக்கி அழுத்திக் கொண்டது.

(கண்ணாடியின் ஊடாக கருசனையாய் கலந்துரையாட தொடங்கினாள் அந்த கிழவியுடன்)

'அம்மா எங்க போகப் போறிங்க ....ஏன் இதுல தனிய...?' (என குரலை வினாவாக இழுத்தாள்)

(கீழே கிடப்பது தங்கமா இல்லையா என்று சந்தேகம் தீர்ப்பதற்கு உத்துப்பார்க்கும் பார்வை குறைந்த பாட்டியை போல் அருகில் வந்து உத்துப்பார்த்தாள் அந்த கிழவி)

'அம்மாடி இந்த பாழுப் போனவனால எனக்கு நிம்மதி இல்லம்மா, அவன் ஆஸ்பதிரியில நிம்மதியா கிடக்கான் எனக்கு காலும் ஓடல கையும் ஓடல அடிக் கடி இதால வஸ்சு ஓடும் ஆனா இப்போ என் நேரம் ஒன்னையும் காணோம்'

(கிழவியின் கதை அடை மழையாய் பெய்தோய்ந்தது)

'எங்கம்மா போறீங்க என்கூட வாறீங்களா? '

'வவுனியா ஆஸ்பத்திரி என்று தான் சொன்னாங்கம்மா.........'என்று கூறி மீண்டும் தொண தொண என்று பேசத்தொடங்கினாள் கிழவி, ஆனால் அதற்கு பாரதி சற்றும் இடம்கொடுக்கவில்லை.

'அம்மா ஏறுங்க நான் அந்தப்பக்கம் தான் போறன்' என்று கூறிமுடிக்க முதல், கார் அருகில் வந்து நின்றாள் கிழவி

பேச்சுத்துணை இன்றி இயற்கையோடு பேசித் தீர்த்துக்கொண்டவளுக்கு கிழவியின் தொண தொணப்பு பாரதியின் மன நிலையை மாற்ற முற்றப்பட்டு தோற்று இடையிடையே அவள் நிலையை நினைவுபடுத்திப் போனது.



சரண்யா

கிழவின் மனவேகத்திற்றுக்கு ஏற்றால் போல் வைத்தியசாலையின் முன் வந்து நின்றது கார்'தாயே ரொம்ப நன்றிமா இந்த உதவிய எப்படி மறப்பன் இவன பெத்த வயித்துல உன்ன போல ஒரு பொட்டைய பெத்திருந்தாலும் கடைசி வரைக்கும் என் கூடயிருந்து கஞ்சியாவது ஊத்திருக்கும்'; என்று கூறிக் கொண்டே பாரதியின் இரு கரங்களையும் எடுத்துகண்ணில் ஒற்றி நன்றி தெரிவித்தாள்கிழவி, கிழவியின்வார்த்தைகள் அவளது அக்காவை நினைவுபடுத்திச் செல்ல ஒரு கணம் கிழவி யோடு சென்று அவளதுமகனின் நலம் விசாரிக்க தோணியது பாரதிக்கு 'அம்மா நானும் வாறன் வாங்க உங்க மகன பாத்திட்டே போறன்.'

'இல்ல ஏன்மா உனக்கு இந்த சிரமம். இதுவே பெரிய உதவி' எந்த சிரமமும் இல்லை என்றவாறு தலையை ஆட்டி சிறு புன்னகையோடு கிழவியை அணைத்தவாறு ஆஸ்பத்திரிக்குள் நுழைகிறாள்

ரொம்ப தூரம் ஆகவில்லை அவளுக்கொரு அதிர்ச்சி காத்திருந்தது, வீரியமாய் ஏறெடுத்து பார்த்துக் கொண்டிருந்த விஸ்வின் இவளது கண்ணுக்கு முன்னே நின்றான். வைத்த கால்கள் அப்படியே நிற்க கிழவிமேலிருந்த கைகள் சாதாரண நிலைக்கு வர அசையாது நின்றாள் பாரதி

'இந்த புள்ள தான் என் மகன ஆஸ்பத்திரில சேத்த தெய்வம்' என்று கூறி விஸ்வினை நோக்கி விரல் நீட்டியபடியே அவனருகில் சென்று நின்றாள் கிழவி விறைத்தபடியே திரும்பி காரை நோக்கி நகர்ந்தாள் பாரதி

' என்ன புள்ள என் மகன பாக்க வரலயா?' என்று உரத்த குரலில் அழைத்தாள் கிழவி

பாரதி காதுகளுக்கு விழுவதாகயில்லை. அடுத்த கணமே கிழவி பாரதியின் உதவியை பற்றி புகழ்ந்தபடியே மகனை பார்க்க வேகமாய் ஆஸ்பத்திரிக்குள் நுழைகிறாள்.

தொடரும்....

# இலக்கிய நயம்......

சங்க இலக்கியங்களாகக் கொள்ளப்படுபவை எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் என்பது ஆன்றோர் வகுத்து வைத்த வழிமுறையாகும். இப் பைந்தமிழ் இலக்கியங்களானவை மானிட வாழ்வின் சமூகப் பண்புகளைப் புடம் போட்டுக் காட்டுவனவாக மிளிர்ந்தன என்றால் மறுப்பதற்கில்லை. மனித வாழ்வில் ஒருவன் நெறி பிறளா வாழ்வை எவ்விதம் வாழ வேண் டும் என்ற முறைக்கு இலக்கியமும் இலக்கணமும் வகுத்ததுடன் மனிதனவன் வாழ்வைச் செம்மைப்படுத்த வழிசமைத்தல் இத்தகைய சங்க இலக்கியங்கள் என்பவை தான்,என்பதை அத்தகைய நூல்களைப் படிப்பதன் மூலம் நாமும் தெளிவாக அறிய முடியும்.

எட்டுத்தொகை நூல்களில் ஒன்று குறுந்தொகை இலக்கியமாகும். தமிழர் தம் பாரம்பரியத்தினையும் வாழ்வியலையும் அவர் தம் காதல் வாழ்வினையும் இரசிக்கும் தன்மையுடன் இலக்கிய நயம் ததும்பத் ததும்பத் தருவதில் குறுந்தொகை நூலுக்கு இணை எதுவுமில்லை. காதல் வாழ்வின் நுணுக்கங்களை உணர்வுகளின் சின்னச் சின்ன அசைவுகளைக் கூட இரசனையும் அழகும் அதனது சுவையும் மாண்பும் சற்றும் குறைவுறாமலும் மாறுபடாமலும் தந்ததில் குறுந்தொகைக்கு இணை குறுந்தொகையேதான்.

சங்ககால வாழ்வியலில் அக்கால மாந்தர் தம் இல்லறத்தை இனிதே நல்லறமாகப் போற்றி வாழ்ந்தமைக்குச் சான்றாகிறது இப்பாடல்.

இல்லறத்தில் இனிதே இணைந்து புதுத்தம்பதியர் அவர்கள், செல்வச் செழிப்பில் பெற்றவர்களுக்கு இளவரசி போல் வாழ்ந்த மகளவள். சேடியர் புடைசூழ பட்டு மஞ்சத்தில் பட்டுப் பீதாம்பரம் உடுத்து பஞ்சிலும் மிருது வான பாதம் நோகா வண்ணம் பெற்றோர் தம் அர வணைப்பில் வாழ்ந்த மகளவள், பருவம் வந்ததும் பெற்றோருக்கு செல்வ மகளானாலும் உற்றவன் ஒருவ னது கைப்பற்றி புக்ககம் போக வேண்டியது

அம்மங்கையினது கடமையும் அல்லவா? கண்ணுக்கினிய மணாளனின் கைகளால் மாங்



கல்யம் வாங்கி மனைவி ஆனாள், அவளது இதயத்துக்கு இனியவ னின் இதயத்தைக் கொள்ளை கொள்ள தன் இன்ப மணாளனுக்கு இன்சுவை உணவு சமைக்க உவகை கொண்டவளானாள். அதன் விளைவாக தலை வன் இனிதே உண்டுவிட புளிக்குழம்பு தயாரிக்கக் கிளம்பி விடுகிறாள் அவனது காதல் மனைவி இவள் . தோய்த்த கட்டித்தயிரைத் தனது காந்தன் மென்விரல் கொண்டு பிசைகின்றாள். பிசைந்த கரத்தை நீர் கொண்டு கழுவ வேண்டுமே என்கிற விதி கூட தெரியாத அம்மங்கை தயிர் பிசைந்த அந்த விரல்களை தன் தூய ஆடையில் துடைத்துக் கொள்கிறாள். அத்துடன் தாழிக்கும் போது நெருப்பிலிருந்து வெளியேறிய புகையானது அவள் மை இட்ட மான் விழியைக் கலங்கச் செய்தது. இவ்வாறு சமைத்த அவ்வுணவை எது எத்தகையதாக இருந்தபோதும் அவள் கணவன் அதனை மிக இனிதாக உள்ளதாகக் கூறி பாராட்டி மகிழ்ந்து உண்ண வேண்டுமென விரும்பினாள் அவனும் அவ்விதமே இன்முகம் மாறாத காதல் உணர்வோடு அதனை இரசித்து ருசித்து உண்டான். இவ்விதம் கணவனின் இன்முகம் கண்டபோது அவனது அன்பு மனையாளின் அழகு முகம் மகிழ்வால் மலர்ந்து நின்றது. இவ்விடத்தில் இங்கு இனிய இல்லறம் நல்லறமாக இனிதே மலர்ந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. அதனை குறுந்தொகை இவ்விதம் நயத்தோடு இப்படிக் கூறி நிற்கிறது.

முளி தயிர் பிசைந்த
காந்தன் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழா அது உடீ
குவளை உன்கண் குய்ப்புகை கமழத்
தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டபின்
நுண்ணிதன் மகிழ்ந்தன்று
ஒண்ணுதல் முகனே

என்கிறது நமது குறுந்தொகை. இன்றைய சுவைமிகு நயத்தினில் நாம் திளைத்தோம் இனி வரும் நாளில் இன்னொரு சுவையுடன் சந்திப்போம்.

குந்தவி நாச்சியார்.

# ஆரோக்கியமான மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

ப்ரியமதா பயஸ்



1. நீங்கள் அழைக்கப்பட்ட ஒவ்வொரு சண்டைக்கும் செல்ல வேண்டாம். குறிப்பாக நீங்கள் குழப்பத்தில் ஈடுபடுவோரைச் சுற்றி இருக்கும்போது, நாடகத்தில் சேர அழைப்பை நிராகரிக்க தயாராக இருங்கள்.

2. உங்கள் சுவாசத்தில் கவனம் செலுத்துங்கள். நாள் முழுவதும், சில ஆழமான சுவாசங்களை எடுப்பதை நிறுத்துங்கள். சுவாசம் போன்ற நுட்பங்களுடன் மன அழுத்தத்தை வைத்திருங்கள். நான்கு எண்ணிக்கையில் சுவாசிக்கவும், நான்கு எண்ணிக்கையை வைத்திருங்கள், பின்னர் நான்கு எண்ணிக்கையில் வெளியேறி, நான்கு எண்ணிக்கையில் மீண்டும் பிடித்துக் கொள்ளுங்கள். இந்த சுழற்சியை நான்கு முறை செய்யவும்.

3. பழைய பொருள்களை அகற்றுங்கள். ஒரு இரைச்சலான இடம் பெரும்பாலும் ஒரு இரைச்சலான சூழலை உருவாக்கு கிறது. ஒரு வருடத்தில் நீங்கள் பயன்படுத்தாத எதையும் அகற்றுவதற்கு நேரம் ஒதுக்குங்கள் மற்றும் நிறுவன அமைப்புகளில் முதலீடு செய்யுங்கள்.

4. தீர்ப்பளிப்பதை நிறுத்தவும். வேறொருவரின் வாழ்க்கையைப் பற்றி நீங்கள் ஒரு கருத்தைத் தூண்டும்போது, உங்கள் நோக்கங்களைச் சரிபார்க்கவும். மற்றவர்களை நியாயந்தீர்ப்பது எதிர்மறை சக்தியை உருவாக்கி ஊக்கு விக்கிறது.

5. அடிக்கடி 'நன்றி' என்று சொல்லுங்கள். ஒவ்வொரு நாளும் நன்றியுணர்வோடு தொடங்கவும் முடிக்கவும். பாராட்டுகளை வெளிப்படுத்த உங்கள் அன்றாட வழக்கங்கள் மற்றும் தொடர்புகளில் வாய்ப்புகளைத் தேடுங்கள்.

6. நிறைய சிரிக்கவும் நீங்கள் அதை உருவாக்கும் வரை போலி செய்ய வேண்டியிருந்தாலும், சிரிப்பதில் பல அறிவியல் நன்மைகள் உள்ளன.

மேலும், நீங்கள் வாகனம் ஓட்டுதல், நடைப்பயிற்சி போன்ற நடவடிக்கைகளைச் செய்யும்போது உங்கள் முகபாவனைக்கு கவனம் செலுத்துங்கள். கோபம் வந்தால் அந்த கோபத்தை தலைகீழாக மாற்றுங்கள்! உங்கள் சிரிப்பால்.

7. எதிர்காலத்தைப் பற்றி கவலைப்பட வேண்டாம். இது மிகவும் கடினம், நிகழ்காலத்தில் தங்குவதற்கும் அமைதி யான வாழ்க்கை வாழ்வதற்கும் நேரடித் தொடர்பு உள்ளது. நீங்கள் எதிர்காலத்தை கட்டுப்படுத்த முடியாது. பழைய பழ மொழி ஒன்று சொல்வார்கள், கவலை என்பது ஒரு முன்னும் பின்னும் ஆடும் நாற்காலி போன்றது. இது உங்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும், ஆனால் அது உங்களை எங்கும் நிறுத்தாது. உங்கள் எண்ணங்களை மீண்டும் நிகழ்காலத் திற்கு கொண்டு வருவதை மெதுவாக பயிற்சி செய்யுங்கள்.

8. உண்மையான உணவை உண்ணுங்கள். உணவு பூமியிலிருந்து எந்த நிலைக்கு வந்தது என்பது எவ்வளவு நெருக்கமாக இருக்கிறதோ, அதை சாப்பிடுவதில் நீங்கள் ஆரோக்கியத்தை உணருவீர்கள். ஒரு தாவரத்தில் தயாரிக்கப்பட்ட உணவுக்கு மேல் ஒரு தாவரத்திலிருந்து வளர்ந்த உணவுக ளைத் தேர்வுசெய்ய வேண்டும் .

9. படுக்கையறைக்கு வெளியே தொழில்நுட்பத்தை வைத்திருங்கள். படுக்கைக்கு முன் மின்னணு சாதனங் களின் நீல ஒளி பாதகமான தூக்கம் மற்றும் ஒட்டுமொத்த ஆரோக்கியத்துடன் இணைத்துள்ளன. உடலாரோக்கியத்தை மோசமாக்குவதற்கு, நேரத்தைப் பொருட்படுத்தாமல், தங்கள் செல்போனில் படுக்கைக்கு வரும்போது மின்னஞ்சல் மற் றும் சமூக ஊடகங்களைச் சரிபார்ப்பதை எதிர்க்க முடியாது என்று பலர் தெரிவிக்கின்றனர்.

10. அமைதியான சூழ்நிலையில் அமைதியாக இருங்கள்.

சமாதானத்தின் இறுதி நிலையை நீங்கள் சித்தரிக்கும்போது, பொதுவாக அமைதி மட்டுமே இருக்கும்.

11. புரிந்துகொள்ளக் கேளுங்கள், பதிலளிக்க வேண்டாம்

அடிக்கடி உரையாடல்களில், நாம் என்ன சொல்ல விரும்புகிறோம் என்று சொல்வது எப்போது என்பது பற்றிய குறிப்புகளைத் தர காதுகளைப் பயன்படுத்துங்கள் . சுறுசுறுப்பாகக் கேட்பதைப் பயிற்சி செய்யுங்கள், கேள்விகளைக் கேளுங்கள், செயலாக்குங்கள், பின்னர் பேசுங்கள்.

12. இன்னும் மெதுவாக பேசுங்கள்.

பெரும்பாலும் அமைதியின்மை வேகமாக அல்லது தொடர்பற்ற பேச்சில் வெளிப்படுகிறது. மூச்சு விடுங்கள், மெது வாக்குங்கள், உங்கள் சிந்தனைமிக்க கருத்து உங்கள் வார்த்தைகளை இயக்கட்டும்.

13. ஒத்திவைக்க வேண்டாம். கடைசி நிமிடம் வரை காத்தி ருப்பது நம் வாழ்க்கையில் மன அழுத்தத்தை கொண்டுவரும்.

14. உங்களுக்கு முன்னுரிமை கொடுங்கள். உங்கள் வாழ்நாள் முழுவதும் 24 மணிநேரமும் வாழ உங்களுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்ட ஒரே நபர் நீங்கள் தான்.

15. மற்றவர்களை மன்னியுங்கள் ஒரு கோபத்தை வைத்தி ருப்பது உங்களை வேறு எவரையும் விட அதிவேகமாக காயப்படுத்துகிறது. அது போகட்டும் (போனால் போகட்டும் போடா.)

16. உங்கள் எதிர்பார்ப்புகளை சரிபார்க்கவும். எதிர்பார்ப்பு பெரும்பாலும் கவலைக்கு வழிவகுக்கிறது. எதிர்பார்ப்புகள் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட கோபங்கள் என்ற பழைய பழமொழியை நினைவில் கொள்க.

17. சுறுசுறுப்பான விளையாட்டில் ஈடுபடுங்கள். உங்கள் குழந்தை வெளியே வந்து வேடிக்கையாக இருக்கட்டும். நடனம், விளையாட்டு,எல்லாவற்றிலும் ஈடுபடுங்கள்.

18. உங்களை நீங்கள் விமர்சிப்பதை நிறுத்துங்கள்.

உலகம் போதுமான விமர்சகர்களைக் கொண்ட கடின மான இடமாகும். அவர்களில் ஒருவராக இருப்பதன் மூலம் உங்கள் வாழ்க்கை சிறப்பாக செயல்படபோவதில்லை.


19. உங்கள் பணத்தை நிர்வகிக்கவும் மன அழுத்தத்தை ஏற்படுத்தும் பட்டியலில் நிதி முதலிடத்தில் உள்ளது . ஒவ்வொரு மாதமும் ஒரு பட்ஜட்டைச் செய்ய நேரம் ஒதுக்குங்கள், நீங்கள் உண்மையில் என்ன செலவிடுகிறீர்கள் என்பதைக் கணக்கிடுங்கள்.

20. எல்லாவற்றையும் கட்டுப்படுத்த முயற்சிப்பதை நிறுத்துங்கள், உங்கள் கட்டுப்பாடு உங்கள் அமைதி உணர்வை நாசமாக்குவது மட்டுமல்லாமல், அது வெளி உறவுகளின் வழியையும் அடைக்கிறது.

21. சூரிய உதயத்திற்கு முன் எழுந்திருங்கள். விடியலை தனிப்பட்ட முறையில் சாட்சியாகக் காண்பது ஒரு தனித்துவ மான பிரமிப்பு உணர்வையும் வாழ்க்கையை சிறப்பாக்கவும் வைக்கிறது .

22. நீங்கள் நீங்களாக இருங்கள். நாம் உண்மையில் யார் என்பதைஉணர்ந்து கொள்ள வேண்டும். வேறு ஒருவராக மாற முயற்சி செய்வது உள் முரண்பாட்டை உருவாக்கும். நம் மேல் உள்ள நம்பகத்தன்மை மகிழ்ச்சியை வளர்க்கிறது.

## மனிதனின் மரணம் எப்படி இருக்க வேண்டும் தெரியுமா?



வயதானால் நோய்வரும் என்று எந்த இயற்கையின் சட்டமும் கிடையாது.

உங்களைப் படைத்தது இறைவன் அல்லது இயற்கை, என்று எதை நீங்கள் நம்பினாலும் உங்களை முழுமையாகப் படைத்திருக்கிறது.

உங்கள் உடலில் இருக்கும் ஒவ்வொரு உறுப்பும் நீங்கள் உயிருடன் இருக்கும் அத்தனை நாளும் பயன்படுத்தவே படைக்கப்பட்டிருக்கிறது.

அதனால் எவனாவது வயதானால் அந்த நோய் வரும் வயதானால் இந்த நோய் வரும் என்று சொன்னால், தயவு செய்து நம்பாதீர்கள்.

உங்கள் கூடவே வாழும் மிருகங்களைப் பாருங்கள். மரணம் வரும்வரை தன் வேலைகளைத் தானே செய்து கொள்கிறது.

எந்தச் சிங்கமும் தனக்கு வயதாகிவிட்டது என்று தன் குட்டியிடம் சாப்பாடு கேட்பதில்லை.

எந்த மாடும் படுத்து கொண்டு தன் கன்றிடம் தண்ணீரோ உணவோ கேட்பதில்லை.

எந்தப் பூனையோ, நாயோ படுத்த படுக்கையாக இருந்து கொண்டும் மலம் கழிப்பதில்லை.

மரணம் அடையும் நாள் வரை ஆரோக்கியமாக சுயமாக தன் வேலைகள் அனைத்தையும் செய்கின்றன.

மனிதர்கள் மட்டும் தான் வயதானால் நோய்வரும், இயலாமை வரும் என்று நம்பி, அடுத்தவர்களை எதிர்பார்த்து வாழ ஆரம்பிக்கிறார்கள்.

நன்கு ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்

முதுமை என்று எதுவும் இல்லை.

நோய் என்று எதுவும் இல்லை.

இயலாமை என்று எதுவுமில்லை.

எல்லாம் உங்கள் மனதிலும், அதன் நம்பிக்கையிலும் தான் இருக்கிறது.

சிந்தனையை மாற்றுங்கள்.

ஆரோக்கியமாக வாழுங்கள்.

நீங்கள் எதை நம்புகிறீர்களோ அதுவாகவே ஆகிறீர்கள்.

மனிதனின் மரணம் எப்படி இருக்க வேண்டும் தெரியுமா?. யாருடைய மரணமும், மரண படுக்கையிலோ, மருத்துவமனையிலோ நடக்கக் கூடாது. சிந்தனையை மாற்றுங்கள். நான் ஆரோக் கியமாக, மகிழ்ச்சியாக, ஆனந்தமாக வாழ்வேன் என்று நம்புங்கள்.எல்லாத் தொந்தரவும் பறந்து போகும் என்று ஒவ்வொரு வினாடியும் ஆனந்த மாகவே வாழும் அனுபவத்தில் இருந்து, வாழ்க்கையை வாழுங்கள் .

# அல்லைப்பிட்டி வெண்புரவி நகரின் தந்தை அமிர்த பிரான்சிஸ் ஜெயசேகரம் அடிகளார்

## குருத்துவப் பணியின் 50 ஆண்டு நிறைவில்

- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம், ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர்- யாழ் பல்கலைக்கழகம்; இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

**யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தைச் சேர்ந்த கலாநிதி அமிர்த பிரான்சிஸ் ஜெயசேகரம் அடிகளாரின் குருத்துவ திருநிலைப்படுத்தலின் 50ஆம் ஆண்டு நிறைவு கொண்டாட்டம் அவரின் எண்ணக் கருவில் உருவான அல்லைப்பிட்டி வெண்புரவி நகரில் 20 நவம்பர் 2021 அன்று நடைபெற்றது.**

**அவரின் 50 ஆண்டு காலக் குருத்துவப் பணியைக் கௌரவிக்கும் விதமாக காலைக்கதிர் தினசரி மற்றும் ஒன்லைன் பத்திரிகையின் ஞாயிறு கிறிஸ்தவ செய்தி இதழில் 'புலம்பெயர் ஆன்மீகப் பணியகங்களை உருவாக்கிய கலாநிதி பிரான்சிஸ் ஜெயசேகரம் அடிகளார் சேவை' என்னும் தலைப்பில் 28 நவம்பர் 2021 அன்றும் 'புலம்பெயர் ஆன்மீகப் பணியகங்களின் தந்தை அமிர்த பிரான்சிஸ் ஜெயசேகரம் அடிகளார் குருத்துவப் பணியின் 50 ஆண்டு நிறைவில்' என்னும் தலைப்பில் 05 டிசெம்பர் 2021அன்றும் ஆக்கங்கள் வெளியிடப்பட்டன.**

**கலாநிதி அமிர்த பிரான்சிஸ் ஜெயசேகரம் அடிகளாரின் தொடர் பணி சிறக்க காலைக்கதிர் தினசரி மற்றும் ஒன்லைன் பத்திரிகையின் ஞாயிறு கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கிறோம். அவரின் பணி பற்றிய கடந்த வார ஆக்கங்களின் தொடர்ச்சி இதுவாகும்.**

**கடந்த வார ஆக்கங்களில் அவர் புலம்பெயர் ஆன்மீகப் பணியகங்களை உருவாக்கிய தந்தை என்றும் அவர் ஜேர்மனியில் ஆரம்பித்து இன்றும் வெளிவரும் தொடுவானம் பத்திரிகை பற்றியும் விளக்கினோம்.**

**இவ்வாரம் அல்லைப்பிட்டி வெண்புரவி நகரில் அவர் ஆற்றி வரும் பணிகளை நோக்குவோம். வெண்புரவி நகரில் அவரின் பணிகளை மேலும் விளக்க நகரின் பெயர்ப்பலகை, அங்கு அமைக்கப்பட்டுள்ள அழகிய ஆலயத்தின் முகப்புத் தோற்றம், நகரின் ஒரு பகுதிப்படம் என மூன்று படங்கள் பிரசுரமாகின்றன.**

**நான்காவது படம் கலாநிதி அமிர்த பிரான்சிஸ் ஜெயசேகரம் அடிகளார் ஜேர்மனியில் பணியாற்றிய காலத்தில் இவ்வாக்கம் மற்றும் காலைக்கதிர் தினசரி மற்றும் ஒன்லைன் பத்திரிகையின் ஞாயிறு கிறிஸ்தவ செய்தி இதழ் ஆசிரியர் ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் 1997ஆம் ஆண்டு அவரைத் தரிசித்த போது எடுக்கப்பட்ட படமாகும்.**

கலாநிதி அமிர்த பிரான்சிஸ் ஜெயசேகரம் அடிகளாரின் குருத்துவ திருநிலைப்படுத்தலின் 50ஆம் ஆண்டு நிறைவு கொண்டாட்டம் அவரின் எண்ணக்கருவில் உருவான அல்லைப்பிட்டி வெண்புரவி நகரில் 20 நவம்பர் 2021 அன்று நடைபெற்ற போது யாழ்ப்பாணம் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, குருக்கள், கன்னியர், வெண்புரவி நகர் பங்கு மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர் எனத்



தெரிவித்திருந்தோம்.

இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒரு விடயம், அந்த கொண்டாட்டத் திருப்பலியின் போது பாடப்பட்ட பாடல்கள் அனைத்தும் அந்நிகழ்விற்கென்றே எழுதப்பட்டு இசையமைக்கப்பட்ட பாடல்கள் என்பதே அவ்விடயமாகும்.

இப்பாடல்களை இந்நிகழ்விற்கென்றே ஜேர்மனியில் வசிக்கும் பஸ்ரி இராஜகுமரர் என்பவராலும் கலாநிதி அமிர்த பிரான்சிஸ் ஜெயசேகரம் அடிகளாராலும் எழுதப்பட்டு பலராலும் இசையமைக்கப்பட்டுள்ளன.

இப்பாடல்களின் ஒவ்வொருவரியும் அழகுற உணர்வு பூர்வமாக வெண்புரவி நகர் மண்ணையும், அங்கு



புதிதாய் வாழும் மக்களையும், அவர்களின் மனநிலை - அன்றாட கடல் வாழ்க்கை அனுபவம் - அன்பான ஒரு குடும்ப உணர்வு மிக்க வாழ்க்கை என்பன பற்றியும்



விளக்குகின்றன.

பல தடவைகள் வெண்புரவி நகர் என்ற பெயர் பாடல்களில் இணைக்கப்பட்டு மெருகூட்டப்பட்டுள்ளது.

'புகுமுக அழைப்பு' எனத் தலைப்பிடப்பட்ட வருகைப் பாடல் 'இறைவன் தந்த உதயம் - இது என்றும் எமக்கு அபயம் - அவன் கரம் பிடித்து அழைத்த - அல்லை என்றும் இது உன் உதயம்' என தஞ்சமளித்த அல்லைப்பிட்டியை அல்லை என விழித்து நிற்கிறது.

கைநிறையக் காணிக்கை எனத் தலைப்பிடப்பட்ட காணிக்கைப் பாடல் 'பிறந்தபுது வெண்புரவித் தோட்டத்திலே எம்மை - நற்பயிராய் நாட்டி அங்கு அமர வைத்துப் பார்த்து - தோழமையை நறுமணமாய் வீசவைத்த உள்ளங்களை - மாலையாகக் கோர்த்தெடுத்து நன்றியோடு பீடத்திலே - கைநிறையக் கொண்டு வந்தோம் ஐயா உம் - பீடத்திலே காணிக்கையாய் கொட்டி வைத்தோம் ஐயா' என நன்றி காணிக்கையாகக் கொட்டிவைக்கப்பட்டுள்ளது.

இறுதிப்பாடல் வெண்புரவி நகர் மக்கள் எங்கும் எப்போதும் பாடப்படக் கூடிய வெண்புரவி நகருக்கான பொது கீதமாக வெண்புரவி அன்னைக்கு என்று அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

வெண்புரவி அன்னைக்கு என்ற இறுதிப்பாடல் 'வெள்ளி அலை வந்து வந்து - சொல்லுவதைக் கேளீர் - வெண்புரவி நகர் பாதுகாக்க - அன்னை வந்தாள் பாரீர் - மரி அன்னை வந்தாள் பாரீர்' என அமைக்கப்பட்டுள்ளது.

இப்பாடலின் பல்லவி 'வெண்புரவி அன்னையே இறை அன்னையே - உன்முகம் பார்க்கும் போதெல்லாம் துயர் மறைந்து போகுதே' என வாழ்வின் எல்லாத் துயரத்தின் மத்தியிலும் அன்னையின் துணை விதந்து பாடப்படுகிறது

இப்பாடலின் ஒவ்வொரு அடியும், 'வெண்புரவி அன்னையே, இறை அன்னையே' எனத் திரும்பத் திரும்ப அன்னையை அழைத்து, அன்னையை நெஞ்சுக்கு நெருக்கமாகக் கொண்டு வந்து, அன்னை பக்தியை வளர்ந்து, அன்றாட அனுபவங்களில் அவளின் தாய்க்குரிய அன்புப் பாரமரிப்பை வேண்டி நிற்கிறது.

ஜெயசேகரம் அடிகளார் கூறியவை -

புலம்பெயர் நாடுகளில் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகங்கள் பற்றியும் அல்லைப்பிட்டி வெண்புரவி நகர்த் திட்டம் பற்றியும் ஜெயசேகரம் அடிகளாரிடம் கலந்துரையாடியபோது அவர் முதன்முதலில் தெருவித்த - கவனத்தைக் கவர்ந்த - விடயம் இங்கு கட்டாயம் பதியப்பட வேண்டும்.

அவர் தெரிவிக்கும் போது -

ஜேர்மனியில் எனது பணியைத் தொடங்கிய போது என்னிடம் பெரிய தொகைப்பணம் இருக்கவில்லை. ஆன்மீப்பணிப் பயணங்களுக்கும் எனது மற்றைய திட்டங்களுக்கும் பணம் சேகரிக்க அன்றாடம் மேல் மாடிக் கட்டடங்களில் இருந்த வீடுகளுக்குப் பத்திரிகை




விநியோகம் செய்யும் பணியை மேற்கொண்டு பணம் சேகரித்தேன். பின்னர் பலரின் உதவியும் கிடைத்தது.

தாய்நாடு திரும்பிய பின்னர் குருநகர் பங்குத் தந்தையாக இருந்தபோது அல்லைப்பிட்டியில் வெண்புரவி நகர் அமைப்பது பற்றி அப்போதைய யாழ்ப்பாணம் ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்




டகையிடம் கலந்துரையாடினேன். பணம் ஒன்றும் தேவை இல்லை, உத்தரவு தாருங்கள் என்றேன். உத்தரவு கிடைத்தது.

அதன்பின் அல்லைப்பிட்டியில் வெண்புரவி நகர் எனும் வீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தி 150க்கு மேற்பட்ட நிரந்தர வீடுகள் - கிணறுகள் - பாலர் பாடசாலை - ஆலயம் போன்றவற்றை அமைக்கும் பணியில் ஈடுபட்டேன்.

பிற்காலத்தில் நிறுவன உதவிகள் கிடைக்காத போதும் வெளிநாடுகளில் வாழும் எனக்குத் தெரிந்த அன்பர்கள், நண்பர்களின் உதவியுடன் இப்பெரும் திட்டத்தை நிறைவேற்ற முற்பட்டேன்.

இந்த வேளையில் அப்போதைய கியுடெக் கரித்தாஸ் நிறுவன இயக்குநர் ஜெயக்குமரர் அடிகள் உதவிக்கு வந்தார். அவர் உதவியிருக்காவிடின் இத்திட்டம் தவிடு பொடியாயிருக்கும். எனவேதான் எனது நன்றியைத் தெரிவிக்கும் விதமாக எனது குருத்துவ 50ஆவது ஆண்டு கொண்டாட்டம் வெண்புரவி நகரில் நடைபெற்ற போது அவரை அங்கு அழைத்து ஆயர் கையால் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தேன். - என்றார்.



# கரை ஒதுங்கும் மனித உடலங்கள்!

## கிளம்பும் புதிய சர்ச்சைகள்

**- ந.லோகதயாளன் -**

வடமராட்சிக் கடலில் கரை ஒதுங்கியவை எனக் கூறப்படும் ஐந்து உடலங்களில் ஒன்று மனித உடல் அல்ல எனத் தெரிவித்து மருதங்கேணிப் பொலிஸார் தாமே அடக்கம் செய்யும் முடிவை எடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தத் தகவல் பொதுமக்கள் மத்தியில் பரபரப்பையும் அச்சத்தையும் தோற்றுவித்துள்ளது.

சட்டத்தின்காவலர்கள் இந்த முடிவை எவ்வாறு எடுத்தனர், எவரது உறுதிப்படுத்தலின் பெயரில் இதனை அடக்கம் செய்யும் முடிவிற்கு சென்றனர், அதற்கு யார் அதிகாரம் அளித்தது என நாடாளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சி.சிறிதரன் ஆகியோர் போர்க்கொடி தூக்கும் நிலைமையில், காணாமல்போன உறவுகளிடத்திலும் மீண்டும் ஓர் நியாயமான சந்தேகம் எழுகின்றது.

நவம்பர் மாதம் 27 ஆம் திகதி வல்வெட்டித்துறை மற்றும் மணல்காடு பகுதிகளில் இரண்டு உடல்கள் கரை ஒதுங்கியமையோடு இந்த விடயம் ஆரம்பமானது.

அதன் பின்பு 28 ஆம் திகதி யாழ்ப்பாணம் நெடுந்தீவுக் கடற்கரையிலும் ஒரு உடலம் கரை ஒதுங்கியது.

2021-11-30 அன்று கட்டைக்காட்டில் ஓர் உடல் கரை ஒதுங்கியது. இதன் பின்பு 2021-12-02 அன்று சக்கோட்டையில் ஓர் உடலும் வெற்றிலைக்கேணியில் ஓர் உடலும் கரை ஒதுங்கின. இவ்வாறு கரை ஒதுங்கிய உடல்களில் 28 ஆம் திகதி நெடுந்தீவுக் கரையில் ஒதுங்கிய உடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சவச்சாலையில் உள்ளது.

இதேபோன்று பருத்தித்துறை வைத்தியசாலையில் மூன்று உடல்கள் வைக்கப்பட்டுள்ளன. அதேநேரம் கிளிநொச்சி வைத்தியசாலையில் ஓர் உடல் மட்டுமே உள்ளது. அவ்வாறானால் 6 ஆவது உடல் எங்கே என்ற கேள்வியே தற்போது எழுகின்றது.

வடமராட்சியில் கரை ஒதுங்கிய உடல் தொடர்பில் பருத்தித்துறை வைத்தியசாலைக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த உடல்களைப் பொலிஸார் வைத்தியசாலையில் ஒப்படைத்தமை தொடர்பில் ஆராய்ந்தபோது அங்கே 3 உடல்கள் மட்டுமே பருத்தித்துறை வைத்தியசாலையில் ஒப்படைத்தனர் என்பதை உறுதிப்படுத்த முடிந்தது. அதற்கு மேல் உடலம் ஏதும் இவ்வாறு கொண்டு வரப்படவுமில்லை, வெளியே எடுத்துச் செல்லப்படவுமில்லை என்கின்றன வைத்தியசாலை வட்டாரங்கள். சடலம் ஒன்று சட்ட வைத்தியரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்பு சட்ட வைத்தியர் சான்று வழங்கியிருந்தால்மட்டுமே அதனை வெளியே எடுத்துச் சென்றிருக்க முடியும், இங்கே அவ்வாறு இடம்பெறவில்லை என்பது பருத்தித்துறை சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவாவின் கூற்றில் இருந்து அறிய முடிகின்றது.

இவ்வாறு சட்ட வைத்தியரால் உறுதி செய்யப்படாத உடல் எச்சம் ஒன்றை ஒரு ரெஜிபோம் பெட்டியில் வைத்து மருதங்கேணி மிருக வைத்தியரிடம் எடுத்துச்சென்று, இது விலங்கின் உடல்பாகம் தானா என மருதங்கேணிப் பொலிஸார் வினாவியுள்ளனர் என அறிய முடிகின்றது. அதனைப் பார்வையிட்ட மருதங்கேணி மிருக வைத்திய அதிகாரி சுகிர்தன், இந்த உடல் சிதைவடைந்த நிலையில் இருப்பதனால் இலகுவில் அடையாளம் காண முடியவில்லை, இதே நேரம் கைகளைப் பார்த்தால் மனித உடலை ஒத்து இருப்பதனால் இதனைத் தீர்மானிக்கும் அதிகாரம் எனக்குக் கிடையாது, அதனால் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் உதவியை நாடுங்கள் எனப் பதிலளித்துள்ளார்.

இருந்தபோதும் பொலிஸார் பல்கலைக்கழக மருத்துவபீடத்தை நாடவில்லை. இதனைப் பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி மருத்துவர் சுரேன்திரன் உறுதி செய்தார். அதே நேரம் வனஜீவராசிகள் திணைக் கள மருத்துவர்களையும் பொலிஸார் அனுகவில்லை. இந்த நிலையில் அந்த உடல் இப்போது எங்கே என்பதே பெரும் கேள்வியாகவுள்ளது.

இந்த நிலைமையில்தான் மருதங்கேணி பொலிஸார் ஓர் உடலைத் தம்பாட்டில் அடக்கம் செய்துள்ளனர் என்ற தகவல் வெளி வந்துள்ளது. இதனால் நீண்ட காலம் தடுப்பில் இருந்த ஒருவரின் உடலாகிது இருக்குமோ எனக் காணாமல்போன உறவுகளிடத்தில் சந்தேகம் வலுக்கின்றது.

ஏனெனில் கரை ஒதுங்கியுள்ள உடல்களில் ஒன்றின் கையில் ஏற்பட்ட வெட்டுக்காயத்துற்கு சில நாள்களிற்குள் தையல்(இழை) இடப்பட்ட தையல் நூல் அப்படியே உள்ளது. அதுவும் ஓர் மிகப்பெரும் அடையாளமாகவே கருதப்படுகின்றது.





மற்றொரு சடலத்தின் மணிக்கட்டிலும் நூல் கயிறு கட்டப்பட்டுள்ளது.

இந்தச் சடலங்கள் தொடர்பில் பொலிஸ் உயர் அதிகாரிகளைத் தொடர்பு கொண்டால் இவை இந்திய மீனவர்களது உடல்களாக இருக்கலாம் என்கின்றனர். ஆனால் இந்தியாவின் மீனவர்கள் இப்படி காணாமல்போயினர் என்பதற்கான எந்தவொரு பதிவுமே இல்லை என இந்தியத் தரப்பு உறுதிபடத் தெரிவிக்கின்றது.

கடந்தவாரம் வடமராட்சி கிழக்கில் ஓர் இந்தியரது சாரதி அனுமதிப்பத்திரம் கரை ஒதுங்கிய சமயம், அதற்கும் இந்த சடலங்கள் கரை ஒதுங்கியமைக்கும் தொடர்பு இருக்குமோ எனச் சந்தேகிக்கப்பட்டது. ஆனால் நாம் 4 மணிநேரத்தில் அந்தச் சாரதி அனுமதிப்பத்திரத்துக்கு உரியவர் தமிழகத்தில் உயிரோடு இருப்பதை இனம் கண்டோம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

## இலங்கை ராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

காலப்பகுதியில் 11 இளைஞர்கள் கடத் தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் முக்கிய சந்தேக நபராக குறிப்பிடப்படும், சிறிலங்கா கடற்படையின் முன்னாள் புல னாய்வு அதிகாரியான நேவி சம்பத் என அழைக்கப்படும், லெப்.கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெற்றியாரச்சி மற்றும் யாழ்ப்பாணம் – மிருசுவில் பகுதியில் சிறு வர்கள் உட்பட எட்டு தமிழர்களை கொலை செய்த குற்றச்சாட்டின் கீழ் மரண தண் டனை விதிக்கப்பட்டு பின்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் பொது மன் னிப்பில் விடுவிக்கப்பட்ட முன்னாள் இரா ணுவ சார்ஜன்ட் ஆர்.எம்.சுனில் ரத்நாயக்க ஆகியோரே உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தடைப்பட்டியலில் உள்ளடக் கப்பட்டுள்ளவர்கள் அமெரிக்காவுக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது. அத் துடன், அவர்களது குடும்பத்தினரும் அமெ ரிக்காவிற்குள் நுழைய தடை அமுலில் இருக்கும்.

போர்க்குற்றங்களில் ஈடுபட்டதற்காக அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்ட இலங்கைப் படைத் தரப் பைச் சேர்ந்த இரண்டாவது மற்றும் மூன் றாவது அதிகாரிகள் இவர்கள் ஆவர்.

2020 ஆம் ஆண்டில், இலங்கை இராணுவத்தளபதி சவேந்திர சில்வா அமெரிக்காவிற்குள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டது, அவரது கட்டளைப் பொறுப்பின் மூலம், மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபட்டது பற்றிய நம்பக மான தகவல்கள் காரணமாக எங்கள் வெளியுறவுக் கொள்கையின் மையத்தில் மனித உரிமைகளை வைப்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித் துள்ளது.

மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ் பிரயோகங்கள் எங்கு நடந்தாலும் அவற் றின் மீது கவனத்தை ஈர்க்கவும் பொறுப் புக்கூறலை மேம்படுத்தவும் பொருத்த மான கருவிகள் மற்றும் அதிகாரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் இந்த உறுதிப் பாட்டை நாங்கள் மீண்டும் உறுதிப்படுத்து கிறோம் எனவும் அமெரிக்கா கூறியுள் ளது.

கொழும்பில் 2008/2009 காலப்பகு தியில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் முக்கிய சந்தேக நபராக குறிப்பிடப்படும், சிறிலங்க கடற்படையின் முன்னாள் புலனாய்வு அதிகாரியான நேவி சம்பத் என அழைக் கப்படும், லெப்.கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெற்றியாராச்சி கைது செய் யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத் தக்கது.

இதேவேளை, அமெரிக்காவில் விரி வுபடுத்தப்பட்ட தடைப்பட்டியலில் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த இருவர் உட்பட மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்க ளுடன் தொடர்புடைய பல்வேறு நாடுக ளைச் சேர்ந்த 15 பேர் மற்றும் 10 நிறுவ னங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாளை முதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அதற்கமைய நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட அனைத்து கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்தவர்க ளுக்கு நல்லூர் மற்றும் கோண்டாவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையம், நாவலடி ஆரம்ப சுகாதார நிலையம், கொக்குவில் கிராம அபிவிருத்திச் சங்கம், கோண்டாவில் சிவகாமி மகால், கொக்கு வில் வராகி அம்மன் ஆலயம், மணியம் தோட்டம் தேவாலயம், திருநெல்வேலி கலாமன்றம் மற்றும் செங்குந்தா இந்துக் கல்லூரி போன்றவற்றில் வைத்து பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது என நல் லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணி மனையினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதிகளைச் சேர்ந்த 30 வயதுக்கு மேற்பட்ட இரண்டு தடுப்பூசிக ளையும் பெற்றுக்கொண்ட அனைவரும் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## 10 நாள்களில் 144 பேருக்கு மன்னாரில் கொரோனா

மன்னாரில் கடந்த 10 நாள் களில் 144 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் மன்னார் மாவட்டத்தில் இவ்வருடம் 3,060 கொரோனாத் தொற்றாளர் கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி. வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட கொரோனா நிலை வரம் தொடர்பாக அவர் விடுத்துள்ள கொரோனா நிலைவர அறிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:-

மன்னாரில் கடந்த 10 நாள்களில் 144 கொரோனாத் தொற்றாளர்கள் அடை யாளம் காணப்பட்டுள்ள நிலையில் மன் னார் மாவட்டத்தில் இவ்வருடம் 3,060 கொரோனாத் தொற்றாளர்களும், தற் போது வரை 3,077 கொரோனாத் தொற் றாளர்களும் அடையாளம் காணப்பட் டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை இரவு 2 கொரோனா மரணங்கள் பதிவாகியுள் ளன. மன்னார் பள்ளிமுனையைச் சேர்ந்த 59 வயதுடைய பெண் ஒருவர் வீட்டில் மரணித்த நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற் றுள்ளமை தெரியவந்துள்ளது.

இரண்டாவது நபர் மன்னார் உப்புக் குளம் பகுதியைச் சேர்ந்த 64 வயதுடைய பெண் மன்னார் மாவட்ட பொது வைத்தி யசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலை யில், அவருக்கு ஏற்பட்ட நிமோனியா காய்ச்சல் காரணமாக உயிரிழந்தார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோத னையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் மாவட்டத்தில் கொரோ னாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 31 ஆக அதிகரித்துள்ளது - என்றுள்ளது.

## பால்மாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பால்மா விற்பனைக்கு இல்லை என்று நுகர் வோர் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், நேற்று நடை பெற்ற ஊடக சந்திப்பில் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன இது குறித்து கருத் துத் தெரிவித்துள்ளார்.

சந்தையில் தற்போது பால்மாவுக்கு மீண்டும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள் விக்குப் பதிலளித்த அமைச்சர், அதற்குத் தங்களிடம் தீர்வு இல்லை எனக் குறிப் பிட்டார்.

டொலர் பற்றாக்குறை காரணமாக பால்மாவை விடவும், ஏனைய அத்தி யாவசிய நுகர்வுப் பொருட்களுக்கு முன் னுரிமை அளிக்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் தெரிவித்தார்.

## பொரளையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இரண்டு பேர் துப்பாக்கியால் வானை நோக்கிச் சுட்டு, அங்கிருந்தவர்களை அச் சுறுத்திவிட்டு இந்தக் கொள்ளையைப் புரிந்துள்ளனர்.

சம்பவ இடத்துக்குப் பொலிஸார் செல் வதற்கு முன்னதாக அவர்கள் அங்கி ருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இதையடுத்து சந்தேகநபர்களை சி.சி.ரி.வி. கமராவின் மூலம் அடையாளம் கண்டு கைதுசெய்வதற்கான நடவடிக் கைகள் எடுக்கப்படுகின்றன என்று பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

## மீண்டும் மின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தினங்களில் நாளாந்தம் மாலை 6.30 தொடக்கம் 9.30 மணி வரையான காலப்பகுதியில் 30 நிமிட மின் விநியோகத் தடை நாட்டின் சில இடங்களில் பதிவாகும் என்று சக்தி வலு அமைச்சு அறிவித் துள்ளது.

## பாரதியாரின் பிறந்தநாள் நேற்று; யாழில் சிலையும் திறந்துவைப்பு

(இ.கலையமுதன்)

இந்தியாவின் தேசிய கவிஞர் மகா கவி சுப்பிரமணிய பாரதியாரின் 139 ஆவது பிறந்தநாள் நிகழ்வு யாழ்ப்பா ணத்தில் நேற்று கொண்டாடப்பட்டது.

யாழ்., நல்லூர் அரசடி சந்தியில் அமைந்துள்ள பாரதியாரின் திருவுருவச் சிலைக்கு இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் மாலை அணிவித்து மலர் தூபி மரியாதை செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து யாழ். மாநகர மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணன், ஆணையாளர் ஜெயசீலன், யாழ். தமிழ் சங்கத் தலைவர் லலீசன் உள்ளிட்டோர் நிகழ்வில் கலந்துகொண்டு மாலை அணி வித்து மலர் தூபி மரியாதை செலுத்தினர்.

அதேவேளை, மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 139ஆவது பிறந்த நாளான நேற்று யாழ்ப்பாணம் - வட்டுக் கோட்டை யில் சுப்பிரமணிய பாரதியாரின் திருவுரு வச் சிலை திறந்து வைக்கப்பட்டது.




இன்று காலை 10 மணியளவில் வட் டுக்கோட்டை குக் வீதி முதலாம் ஒழுங்கை யில் யாழ். இந்திய நட்புறவுப் பேரவையின் தலைவர் சிதம்பரம் மோகனினால் நிர்மா ணிக்கப்பட்ட சுப்பிர மணிய பாரதியாரின் திருவுருவச் சிலையை மறவன்புலவு சச் சிதானந்தன் திறந்து வைத்தார்.

நிகழ்வில் வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை, யாழ்ப்பா ணம் ஸ்ரீ நாகவிகாரையின் விகாராதிபதி ஸ்ரீ விமல தேரர், இந்து சமய மதகுருமார் கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## ஆளுநர் ஜீவன் தலைமையில் செவ்வாயன்று வடக்கு மாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கைதடியில் நடை பெறவுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியா கராஜா தலைமையில் கைதடியில் உள்ள வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தில் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட் டங்கள் காலதாமதம் அடையும் நிலை மையில் இந்த ஏற்பாட்டை ஆளுநர் மேற்கொண்டுள்ளார்.

இந்தக் கூட்டத்துக்கு வடக்கு மாகாண மக்கள் பிரதிநிதிகள், நிர்வாக அதிகாரிகள் எனப் பலரும் அழைக்கப்பட்டுள்ளமை யால் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகின்றது.



மேற்படி கூட்டம் கடந்த 10ஆம் திகதி இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டு நாடாளு மன்றத்தில் வரவு - செலவுத் திட்ட இறுதி வாக் கெடுப்பு காரணமாக பிற்போடப்பட்டது.

## தமிழ்க் கட்சித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கணேசன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், புளொட் டின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக் கலநாதன், தமிழ் மக்கள் தேசியக் கூட் டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரே மச்சந்திரன் மற்றும் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என்.ஸ்ரீகாந்தா உள் ளிட்டவர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளனர்.

அதேவேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலமும் இந்தச் சந்திப் பில் பங்கேற்பார் என எதிர்பார்க்கப்படு கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ இந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்துள்ளது.

## 13ஐக் கட்டிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நேற்று மாலை 3 மணியளவில் சுன் னாகத்திலுள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் தமிழர்தம் அபிலாஷை களில் சர்வதேச நாடுகளின் கரிசனை தொடர்பாக சாணக்கியர்களின் கருத்துப் பகிர்வு என்ற தலைப்பில் நடைபெற்ற நிகழ்விலேயே அவர் இதனை தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேர்தலில் படித்த, ஆற்றலுள்ள இளை ஞர்களுக்கு முன்னுரிமை என்று நாங் கள் தீர்மானித்தோம். ஆனால் அது வேட்பு மனுவில் காணப்படவில்லை. 2022ஆம் ஆண்டு தமிழ் மக்களைப் பொறுத்தவரை மிக முக்கியமான ஓர் ஆண்டாக இருக்க லாம் . சாணக்கியன் போன்ற ஐந்தாறு இளைஞர்களை நாங்கள் களமிறக்கியி ருந்தால் நாட்டையே தலைகீழாக மாற்றி இருப்போம்.

மாறுகின்ற உலகத்திலேயே நாங்கள் நிறைய மாற்றங்களை உள்வாங்க வேண்டும்.

சமஷ்டி என்ற சொல் அன்றும் இருந் தது, இன்றும் இருக்கின்றது. ஆனால் சமஷ்டிக்கான விளக்கம் தற்போது மாறி விட்டது.

சம்பந்தன் பிரித்தானிய உயர்ஸ்தானி கரை சந்தித்த பொழுது பிரித்தானியாவில் அன்றிருந்ததைப் போன்று இலங்கை யிலும் யாப்பை அறிமுகப்படுத்தினீர் கள், ஆனால் இன்று உங்கள் நாடு எங் கேயோ சென்றுவிட்டது, ஆனால் எமது நாடோ பின்னோக்கி சென்றுவிட்டது என்றார்.

சம்பந்தன் அன்றைய சிந்தனையோடு இருக்கவில்லை. புதியதையும் உள்வாங் குகிறார். அதனாலேயே இன்றும் அவர் எமக்குத் தலைவராக இருக்கின்றார்.

13க்கு அப்பால் நாங்கள் செல்வ தற்கு முயற்சித்துக் கொண்டிருக்கும் பொழுது –

13ஐ அமுல்படுத்த ஒன்றுகூடுகிறோம் என்று சில கட்சிகள் சொல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது.

அப்போதைய ஜனாதிபதியும் இன்றைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ 13க்கு அப்பால் சென்று அர்த்தபுஷ்டியான தீர் வைத் தருவோம் என்கிறார். ஆனால் சில தமிழ் கட்சித் தலைவர்களோ 13ஆம் திருத்தத்தை அமுல்படுத்தக் கோரு கின்றனர்.

13ஆம் திருத்தம் அடிப்படையிலேயே பழுதுபட்டது, அதனைத் திருத்த முடி யாது என இந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறுகின்றார்.

13ஆம் திருத்தத்தின் சில முக்கிய மான நல்ல விடயங்கள் உள்ளன. அவற் றையும் சேர்த்துக் கொண்டு அதையும் தாண்டிய அதிகாரப்பகிர்வை நாம் எதிர் பார்த்து நிற்கின்றோம்.– என்றார்.

அண்ணா விரைவுப் பொதிகள் சேவை
கனடா & நோர்வே - Rs.1600
சுவிஸ் - Rs.1500
075 330 5500, 070 330 5500
076 122 1566
யாழ்ப்பாணம் - நல்லூர் - வட்டுக்கோட்டை - சங்கானை - சுன்னாகம் - ஆவரங்கால் - நெல்லியடி - கைதடி - சங்கத்தானை - பளை - கிளிநொச்சி - புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு - கனகராயன்குளம் - மல்லாவி - மன்னார் - வவுனியா - திருகோணமலை - மூதூர் - கொழும்பு
POST YOUR AD yarlads.com
உங்கள் விளம்பரங்களை இலவசமாகப் பதிவிட

Northern PC Park
வடக்கின் கணினிப் பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park

# சடலமாக கண்டெடுக்கப்பட்ட பெண்ணின் சாவில் சந்தேகம்

## மக்கள் போராட்டம்

நுவரெலியா - டயகம மேற்கு தோட்டம் 5 ஆம் பிரிவில் கடந்த 06.12. 2021 அன்று மாலை 5 மணியளவில் சாமிநாதன் தங்கேஸ்வரி என்ற 53 வயதுடைய பெண், ஆற்றில் சடலமாக கண்டெடுக்கப்பட்டார்.

இந்நிலையில் இவரின் மரணத்தில் சந்தேகம் நிலவுவதாக தெரிவித்து, அப்பிரதேச மக்கள் கவனவீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

இவர்கள் பதாதைகளை ஏந்தி, கோஷங்களை எழுப்பி, கறுப்புக் கொடி பிடித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், தோட்டத்திலுள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்துக்கு முன்பாகப் பேரணியாக வந்து, குறித்த பெண் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

மேற்படி சம்பவம் தொடர்பில் பொலிஸார் சரியான விசாரணையை முன்னெடுத்து, அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் பிரேத பரிசோதனையின்போது இறந்தவரின் உடலை பார்க்கவிடாமல் பெட்டியை திறக்கப்படாமல் நல்லடக்கம் செய்ய பொலிஸார் அனுமதி வழங்கினர் எனவும் ஆற்றில் மிதந்த சடலம் உடையின்றி கிடந்தமையால் இதில் சந்தேகம் நிலவுவதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

மேலும் முறைகேடான விடயங்கள் நடந்திருப்பின் சட்டத்தின் முன் குற்றவாளி நிறுத்தப்பட வேண்டும் என்பதுடன் பிரேத பரிசோதனை அறிக்கை திருப்தி இல்லை. இது தொடர்பான அறிக்கை பொலிஸாரால் உறவினர்களுக்கு வழங்கப்படவில்லை எனவும் போராட்டக்காரர்கள் குற்றம் சுமத்தினர்.

ஆகவே இந்த விடயத்தில், பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகைமாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும்.
076 825 7716 - ஆகாஸ்

சசிகா லேணர்ஸ்
THE SASIKA LEARNERS
Reg.No:DS882
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை
தலைமைக் காரியாலயம்
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7578/ 7678
070 301 3011/ 077 949 5706
உரிமையாளரின் தொடர்புக்கு: 0777 226 247/ 077 614 0361



கிளை நிறுவனங்கள்
மல்லாகம் T.P: 021 224 3393, 070 301 3014, 077 343 6622
பண்டத்தரிப்பு T.P: 021 225 2333, 071 255 4135, 077 434 3798
சங்கானை T.P: 021 225 1664, 070 301 3016, 077 434 3149
சாவகச்சேரி T.P: 021 227 0616, 071 577 0616, 077 435 3995
காரைநகர் T.P: 021 225 2454, 070 510 2484
நெல்லியடி T.P: 021 226 0999, 071 755 0999, 077 261 2446
யாழ் மத்தி (Town) T.P: 021 222 8004, 070 301 5004, 070 301 3017, 077 998 6247
புன்னாலைக்கட்டுவன் T.P: 021 224 5001, 076 384 0684, 077 934 6509
வேலணை T.P: 021 221 5472, 070 301 3012
email:- sasikadrivingschool@gmail.com
web:- sasikalearners.com

வருட இறுதியை முன்னிட்டு விசேட விலைக் கழிவுகள்
HIKVISION
MEGA STORE
No.1 WorldWide CCTV and Video surveillance
உங்கள் வீடுகள், அலுவலகங்கள், வங்கிகள், கோயில்கள் மற்றும் பொது பராமரிப்பு நிலையங்களின் பாதுகாப்பினை, சிறந்த முறையில் கண்காணிப்பினை உறுதி செய்வதற்கு குறித்த தவணையில் நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரீ.வி கமராக்கள் பொருத்தித் தரப்படும்



Chat with us on Whatsapp
+ 9475 886 0478
Main Show Room in Northern Province
நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரீ.வி கமராக்கள் மற்றும் உதிரிப்பாகங்களை இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
hikvisionmegastore@gmail.com
இல.164, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
NO:164, PALALI ROAD, THIRUNELVELY, JAFFNA. Tel :021 2227126

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.12.2021 இல் வெளியிடப்பெற்றது.




# நெற் செய்கையில் உரப்பசளை இன்றி உயர் விளைச்சல் பெறமுடியுமா?

அரசாங்கம் உரப்பசளை பூச்சிநாசினி, களைநாசினி போன்ற விவசாய இராசாயனப் பொருள்களுக்கு தடை விதித்துள்ளது. விவசாயிகளோ விவசாய இராசாயனப் பொருள்கள் இல்லாமல் எப்படி பயிர் செய்து வாழ்வாதாரத்தை கொண்டு செல்லலாம் என கவலை அடைந்துள்ளார்கள். நெற்செய்கையை மேற்கொள்வதற்கு பட்ட கடனை அடைக்க முடியுமா? தொடர்ந்தும் கடனாளியாக வாழ வேண்டிவருமா? என்ற கவலைகள் விவசாயிகளை வாட்டுகிறது. அதேபோன்று தம் சொந்த செலவில் முதலீடு செய் தவர்கள் முதலீட்டை இழப்போமா? என்ற ஏக்கமும் அடைந்துள்ளனர். நெல் விளைச்சல் குறையும்போது அரசிக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதுடன் அரிசியின் விலையும் அதிகரித்துச் செல்லும் நிலையில் அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் அரிசி நஞ்சில்லாமல் இருக்குமா என விவசாயிகள் கேள்வி எழுப்புகிறார்கள். ஆங்காங்கே அவ்வப்போது விவசாயிகள் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். கூடிய விலைக்கு என்றாலும் உரப்பசளையை தந்தால் தான் நெற்செய்கையை மேற்கொள்வோம் என ஒரு பகுதி விவசாயிகள் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்.

அரசாங்கம் நஞ்சில்லா உணவு உற்பத்தியில் உறுதியாகவுள்ளது. உரப் பசளைக்கு மாற்றீடாக சேதனப்பசளை பாவனைக்கு நடவடிக்கை எடுத்துள்ளது. தமக்குத் தேவையான கூட்டெருவை தயாரிக்கும் விவசாயிகளுக்கு 12,500 ரூபாவும் மானியமும் வேறு சலுகைகளும் வழங்கியுள்ளது. தொழில் முயற்சியாளர்கள் கூட்டெரு தயாரிப்பதற்கு குறைந்த வங்கிக் கடன் வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. இதேநேரம் பிரதேச சபைகள், கூட்டெரு தயாரித்தலில் ஈடுபட்டுள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கு 25 கோடி ரூபா செலவில் கூட்டெரு தயாரித்தல் தொழிற்சாலை அமைந்து கொடுக்கப்பட்டுள்ளது. அதன் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டு விட்டது. இப்படி இலங்கையின் பல பாகங்களில் பல்வேறு நிறுவனங்கள் சபைகளால் கூட்டெரு தயாரித்தல் நடைபெறுகிறது. இராணுவமும் கூட்டெரு தயாரித்தலில் ஈடுபட்டுள்ளது. பெரும்போக நெற்செய்கைக்கு கூட்டெரு தாயாரிக்கும் காலம் பிந்திவிட்டது.

இங்கு உற்பத்தி செய்யப்படும் கூட்டெரு நெற் செய்கைக்கு போதுமான தில்லை. இதனால் அரசாங்கம் வெளிநாடுகளில் இருந்து சேதனப்பசளை இறக் குமதி செய்து விவசாயிகளுக்கு வழங்குகின்றது. சீனாவிலிருந்து முதல் முறை யாக இறக்குமதி செய்யப்படவிருந்த சேதனப்பசளையில் தீங்கு விளைவிக்கும் நுண்ணங்கிகள் இருந்தமையால் வேறு நாடுகளிலிருந்து சேதனப்பசளை இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. மானியம் அல்லது உதவி வழங்கப்படாத விவசாயிகளுக்கு முதற்கட்டமாக இறக்குமதி செய்யப்பட்ட சேதனப்பசளை வழங்கப்பட்டுள்ளது. விளைவு குறைந்தால் நஷ்டஈடு வழங்கவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்தியாவிலிருந்து முப்பது லட்சம் லீற்றர் மொனோ நைத்திரேற் திரவப்பசளை விமானம் மூலம் கொண்டுவரப்பட்டது.

வடமாகாண விவசாயிகள் உள்நாட்டு யுத்தகாலத்தில் ஏற்பட்ட பொருளாதாரத் தடை காரணமாக எரிபொருள், யூரியா மற்றும் உரப்பசளைகள் தடைப்பட்டன. அச்சமயம் இரசாயன விவசாயத்திலிருந்து சேதன விவசாயத்திற்கு மாறிய அனுபவம் ஒன்று உள்ளது. அதன்மூலம் அவர்கள் பல பாடங்களை கற்றுக் கொண்டார்கள். இன்றுபோல் அன்றும் வடபகுதி விவசாயிகள் அல்லல்பட்டார்கள். இன்று அரசு பல உதவிகளை வழங்குகின்றது. அன்று எந்தவித உதவிகளும் கிடைக்காத நிலை இருந்து ஆனால் விவசாயிகள் பசிபட்டினியிலிருந்து மீட்பதற்கு உணவு உற்பத்தியில் ஈடுபட வேண்டி பல சிரமங்களுக்கு மத்தியில் ஈடுபட்டார்கள். குடாநாட்டு முதிய விவசாயிகள் சேதன விவசாயத்தில் போதிய அனுபவமுடையவர்கள். அவர்களின் வழிகாட்டலின் உதவியுடன் உணவு உற்பத்தியில் ஈடுபட்டார்கள். உள்ளூரில் கிடைக்கக்கூடிய சேதனப்பசளை மூலவளங்களை உச்சப்பயன் அளிக்கக் கூடிய வகையில் பயன்படுத்தி மெல்ல மெல்ல சேதன விவசாயத்திற்கு மாறினார்கள். காலப்போக்கில் அதிக விளைச்சலும் பெற்றார்கள். குழை தாட்டல், பட்டி அடைத்தல்,எரு போடுதல், மாட்டுசலம் பாவித்தல் என பலநடவடிக்கைகளில் மேற்கொள்ளப்பட்டன.



நெற்செய்கையில் மேற்கட்டுப்பசளையாக யூரியாவுக்கு மாற்றீடாக கோழியெரு, வெளவால் எச்சம், வேப்பம் பிண்ணாக்கு பாவித்தார்கள். உழுவதற்கு உழவு இயந்திரங்களுக்கு மண்ணெண்ணையும் ஆமணக்கம் எண்ணெயும் கலந்து டீசலாகப் பாவித்தார்கள். யுத்தத்தின் போது பல உழவுமாடுகள் குண்டு பட்டு இறந்ததால் விவசாயிகள் மாடுகளை கூட்டு முறையில் இணைத்து உழுதார்கள். சூடு மிதித்தார்கள். இப்படிப் பல்வேறு அனுபவங்களை கற்றுக் கொண்டார்கள்.

அளவுக்கு அதிகமாக யூரியா பாவித்தமையால் இலங்கையிலே யாழ்ப்பாண குடாநாட்டு கிணற்று நீரில் அதிகளவு நைத்திரேற்று காணப்பட்டது. இதனால் கர்ப்பிணித் தாய்மார்கள் பாதிக்கப்பட்டார்கள். பிறக்கும் குழந்தைகளில் 1,000 இல் 5 குழந்தைகள் இதயத்தில் துவாரமுள்ள குழந்தைகள் பிறந்து இறந்துள்ளார்கள். யூரியா பாவனை நிறுத்தப்பட்டமையால் கிணற்று நீரில் நைத்திரேற்று கலக்கவில்லை. ஆயினும் கிணறும் மலசல கூட குழியும் அருகாமையில் இருந்த இடங்களில் நைத்திரேற்று பிரச்சினை காணப்பட்டது. சேதனப் பசளை பாவித்தபோது பயிர்கள் காலநிலை தாக்கத்திலிருந்து தப்பிக் கொண்டன. நோய் பீடைத் தாக்கத்திலிருந்தும் மிகக் குறைந்தளவில் பாதிக்கப்பட்டன. பாரம்பரிய நெல் இனங்கள் கூடுதலாகப் பயிரிட்டபடியால் சோறு சுவை உடையதாக இருந்தது. இது போன்று இன்னும் பல பாடங்களையும் விவசாயிகள் கற்றுக் கொண்டார்கள்.

பொருளாதாரத் தடையை அரசு நீக்கியதும் மீண்டும் உரமும் பீடைநாசினி



களும் லொறி லொறியாக வந்து குவிந்தது. நெல்லுக்கு கமநல சேவை நிலையங்களுடாக மானிய விலையில் உரப்பசளை வழங்கப்பட்டது.

உரப்பசளைப் பாவனை மூலம் பயிர்ச்செய்கை மேற்கொண்டபோது ஆரம்பத்தில் அதிக விளைவு பெற்றாலும் காலப்போக்கில் உயர் விளைச்சலைப் பெற முடியவில்லை. இதற்கு சான்றாக முத்தையன்கட்டு படித்த வாலிபர் விவசாயத் திட்டத்தை குறிப்பிடலாம். காடு அழித்து உரப்பசளையை மட்டும் பாவித்து பயிர்ச்செய்கையை மேற்கொண்டபோது சராசரி விளைச்சலைவிட 1/3 பங்கு விளைச்சல் அதிகமாக கிடைக்கப்பெற்றது. விவசாயம் செய்ய சென்ற வாலிபர்கள் பணக்காரர்களாக உயர்ந்தார்கள்.

10 வருடங்களின் பின் விளைச்சல் மெல்ல மெல்ல குறையத் தொடங்கியது. நோய் பூச்சி பீடைத் தாக்கமும் பெருகின. பயிர்ச்செய்கைக்கான செலவும் பல மடங்கும் அதிகரித்தது. விவசாயத் திணைக்களத்தின் ஆராய்ச்சிகளினாலும் விளைச்சல் குறைவதற்கான காரணங்களை கண்டுபிடிக்க நீண்டகாலம் பிடித்தது. சில வாலிபர்கள் விவசாயத்தை கைவிட்டு விட்டார்கள். குடாநாட்டுக்கு வந்த படித்த வாலிபர்கள் தமது பேரன், பாட்டன் போன்றோரிடம் கேட்டார்கள். நாங்கள் 10 – 12 வருடத்தில் விவசாயத்தை கைவிடவேண்டி வந்துள்ளது. ஆனால் நீங்கள் பரம்பரை பரம்பரையாக விளைச்சலில் குறைவின்றி பயிர்ச் செய்கை மேற்கொள்வது எப்படி என்று கேட்டபோது ‘பேராண்டி தோட்டத்து சந் தியில் எத்தனை லொறியில் வன்னி எரு வந்திருக்கிறது. எத்தனை வண்டில் களில் குழை வந்துள்ளது. என்று பார்த்து வா’ என்று சிரித்துக் கொண்டு சொன் னார்.

குடாநாட்டு விவசாயிகள் தமது பாரம்பரிய பயிர்ச்செய்கை முறைகளையும் ஒன்றுக்கு மேற்பட்ட சேதனப்பசளை பாவனையும் ஒரே பயிரை செய்யாமல் பல பயிர்களை மாறி மாறி செய்கை பண்ணுதல் (சுழற்சி முறைப் பயிர்ச்செய்கை) போன்ற நடவடிக்கைகள் மூலம் விளைச்சலை தொடர்ந்தும் பெற்றார்கள். படித்த வாலிபர் திட்டங்களில் பணப் பயிரான மிளகாய், வெங்காயத்தை தொடர்ந்து செய்தமையுடன் தம்மிடமுள்ள எருவை யாழ்ப்பாண லொறிகளுக்கு விற்றுவிட்டார்கள். யாழ்குடாநாட்டில் முதிய விவசாயிகளிடம் பெற்ற அனுபவங்களை தமது காணிகளில் பயன்படுத்தி பயிர்ச்செய்கையை மேற்கொண்டு மீளவும் சராசரி விளைச்சல் பெறத்தொடங்கினார்கள்.

மண்ணுக்கு சேதனப்பசளையை சேர்க்கும்போது அது மக்குநிலையில் நிலைத்திருக்கும். இதனை சேதனப் பொருள் திரளல் எனப்படும் சேதனப் பொருள் திரளலானது விளைச்சலை அதிகரிக்கிறது. (26 ஆம் பக்கம் பார்க்க)




# நெற் செய்கையில் ........

மு. கந்தசாமி
வளவாளர் ஓய்வுநிலை பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO) விவசாய தொழில்நுட்ப தகவல்மையம், யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்.

(25ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேதனப்பசளை இல்லாமல் உரப்பசளையுடன் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும்போது சேதனப்பொருள் திரளல் குறைவடைவதால் சேதனப் பசளையின்றி உரப்பசளை பாவித்தபோதும் பயிரிடப்பட்ட எல்லா இடங்களிலும் காலப்போக்கில் விளைவு குறையும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். சேனைப் பயிர்ச்செய்கையை உதாரணமாகக் கொள்ளலாம். காடு வெட்டி மானாவாரியாக பசளையின்றி பயிரிடுபவர்கள் 2 - 3 போகம் பயிர் செய்த பின் விளைவு குறைய பயிர்ச் செய்கையை கைவிட்டுவிடுவார்கள். அந்த இடத்தில் காட்டை வளரவிட்டு 10 - 15 வருடங்களின் பின் மீண்டும் சேனைப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவார்கள். காடு வளரும்போது சேதனதிரள் ஏற்படுகிறது. சேதன உக்கல் மண்ணிலுள்ள பயிர்ப் போசணைகள் நீருடன் கழுவப்பட்டு செல்லாது அல்லது வாயுவாக மாற்றி காற்றில் கலக்காமல் பிடித்து சேமித்து வைக்கும். இது மண்ணிலுள்ள நுண்ணங்கிகளின் பெருக்கத்துக்கும் சக்திக்கும் பயன்படுகிறது. மண்வாழ் நுண்ணங்கிகள் மண்ணை உயிரோட்டமுள்ளதாக வைத்திருக்கும். மேலும் சேதனப் பசளை சிதைவடையும் போது உண்டாகும் சேதன, அசேதன அமிலங்களை பயிர்கள் நேரடியாக இலகுவாகப் பெற்றுக் கொள்கிறது. உரப்பசளையில் குறிப்பிட்ட பயிர்ப் போசணைகள் மட்டும் காணப்படும். சேதனப் பசளையில் சகல பயிர்ப் போசணைகளும் காணப்படும். பயிர்களில் எடுக்கமுடியாத நிலையில் நிலத்தில் கரைபடாத நிலையிலுள்ள பொஸ்பரஸ் உரப்பசளையை

சேதனப்பசளையானது விடுவித்து பயிர்களால் இலகுவில் எடுக்க உதவும். வயல் நிலங்களில் பசளைகள் மெதுவாக சிதைவடைவதால் பாதுகாக்கப்படுகிறது.

பாரம்பரிய நெல் இனங்கள் பசளைத் தூண்டல் பேறு அற்றவை. பசளை குறைந்தாலும் பெரியளவில் விளைச்சல் குறையாது. பசளையை அதிகளவு பிரயோகித்தாலும் விளைச்சலைக் கூட்டாது புதிய திருந்திய நெல் வர்க்கங்கள் பசளைத் தூண்டல்பேறு உடையவை. போதியளவு பசளைப் பிரயோகம் செய்யாதவிடத்து விளைச்சலை குறைத்து தரும் அதேவேளை பசளை அளவைக் கூட்டிப் பாவிக்கும்போது விளைச்சலைக் கூட்டித் தரும். சேதனப் பசளையில் பயிர்ப்போசணைகள் குறைந்த வீதத்தில் காணப்படுவதால் விளைச்சலை கூடப்பெற வேண்டுமானால் பெருமளவு சேதனப் பசளை இடவேண்டும். கூட்டெருவில் 2 வீதம் நைதரசன் காணப்படும் அதேவேளை யூரியாவில் 46 வீதம் நைதரசன் காணப்படுகிறது. இந்நிலையில் கூட்டெருவை மட்டும் இட்டு உயர் விளைச்சலைப் பெறமுடியாது.

அதிகளவு விளைச்சல் பெறுவதற்கு ஒருங்கிணைந்த சேதனப்பசளைப் பிரயோகம் அவசியமாகும். தளித்து கூட்டெருவை மட்டும் நம்பியிருக்காது, இயற்கைப் பசளைகளான எருவகை, பண்ணையெரு, பசுந்தாட்பசளை, வைக்கோல் போன்ற பயிர் மீதிகள், கருக்கிய உமி, பிண்ணாக்கு வகை, அசோலா வளர்ப்பு, திரவப் பசளைகள், உயிர் உரங்கள், மண்புழு, உரம் போன்ற உள்ளூரில் காணப்படும் சேதனப் பசளை மூல வளங்களை ஒரு திட்டமிட்ட ஒழுங்கில் ஒருங்கிணைத்து பசளைப் பிரயோகத்தை மேற்கொள்ள வேண்டும்.



ஒருங்கிணைந்த சேதனப்பசளைப் பிரயோக முகாமைத்துவம்

| அடிக்கட்டுப் பசளை (பயிர்ச்செய்கைக்கு முன்) | | |
|---|---|---|
| பாவிக்கும் காலம் | சேதனப்பசளை | ஏக்கருக்கு பாவிக்கும் அளவு |
| ஆரம்ப பண்படுத்தல் (விதைப்புக்கு 1 - 1½ மாதத்துக்கு முன்பு) | வைக்கோல் அல்லது பசுந்தாட் பசளை | வயலிலுள்ள அனைத்தும் 500 – 700 கிலோ |
| இரண்டாம் உழவு (விதைப்புக்கு/ நாற்று நடுகைக்கு 2 கிழமைக்கு முன்பு) | கருக்கிய உமி அல்லது மாட்டெரு அல்லது கோழியெரு (கனகூள எரு) | 250 கிலோ 2 தொன் 1 தொன் |
| புழுதி விதைப்பு அல்லது சேறடிக்கும் போது | கூட்டெரு | 200 கிலோ |

சேதனப் பசளையை தயாரித்து விவசாயிகளுக்கு விற்பனை செய்வதன் மூலம் வேலை வாய்ப்புக்களையும் உருவாக்கிக் கொள்ளலாம். இங்கே ஒருங்கிணைந்த பசளைப் பிரயோகமுறை ஒன்றைக் காணலாம். இது ஒரு மாதிரியே தவிர இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை . உங்கள் பகுதி

| மேற்க்கட்டுப் பசளை (பயிர் ஸ்தாபித்த பின்னர்) | | |
|---|---|---|
| பாவிக்கும் காலம் | சேதனப்பசளை | ஏக்கருக்கு பாவிக்கும் அளவு |
| 10 நாள் 10, 15, 30, 50 நாட்களில் | அசோலா பஞ்சகௌவியா | 30 கிலோ 3 லீற்றர் / 100 லீற்றர் நீரில் |
| களைகட்டிய பின் | அசோலா | 30 கிலோ |
| மட்டம் வெடிக்கும்போது | கூட்டெரு அல்லது வெளவால் எச்சம் அல்லது கனகூள எரு (கோழியெரு) அல்லது வேப்பம் பிண்ணாக்கு | 100 கிலோ |
| பூக்கும்போது | பஞ்சகௌவியா | 3 லீற்றர் / 100 லீற்றர் நீரில் |

யில் கிடைக்கக் கூடிய சேதனப்பசளை வளங்களுக்கு ஏற்றவகையில் நாங்களே திட்டமிட்டுக் கொள்ளலாம். இங்கு பசளை அளவு கூடியளவில் இருப்பதைக் காணலாம். சேதனத் திரட்சிக்காக 2 வருடங்களுக்கு இந்த அளவைப் பாவித்து பின்னர் குறைந்தளவில் பாவிக்கலாம்.

பயிர்ச்செய்கை ஆரம்பிப்பதற்கு 3 மாதங்களுக்கு முன்பே கூட்டெரு தயாரிக்க ஆரம்பிக்க வேண்டும்.

நெற்செய்கையில் உயர் விளைச்சல் பெறுவதற்கு பின்வரும் விடயங்க ளில் கவனம் செலுத்த வேண்டும்.

* முறையான தரை பயன்படுத்தலும் விதைப்பும் / நடுகையும்
* போதுமானளவு பயிர்ப்போசணை கிடைக்கக் கூடியதாக சேதனப்பசளை குறித்த காலங்களில் இடல்



* பிரதேசத்துக்கு பொருத்தமானதும் உயர் விளைச்சல் தரும் நெல் இனங்களைப் பயன்படுத்தல். வினைத்திறனான களைக் கட்டுப்பாடு
* நோய், பூச்சி பீடைகளை தடுத்தலும், கட்டுப்படுத்தலும்
* இலகுவாக கையாளக்கூடிய உபகரணங்களை பயன்படுத்தல் (வித்திடல், நாட்டு நடுகை , களைகட்டல்)

இங்கு சேதனப்பசளை பிரயோகம் மட்டுமே பார்த்துள்ளோம். ஏனைய விடயங்களில் அக்கறை கொள்ளாவிடில் விளைவு 60 வீதம் வரை குறைவடையும். சேதனப்பசளை மூலம் நெற் செய்கையைமேற் கொள்வது கடின உழைப்பாகும். ஒரு கிலோ நெல் 70 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படும் அதே வேளை பலன் அதிகமாகும். விவ சாயிகள் சேற்றில் கால் வைத்தால் தான் நாங்கள் சோற்றில் கை வைக்கலாம். அதுவும் நஞ்சில்லா சோறு கிடைக்கும் என்பதை நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.



# குயில் கூடு

இறுதிப் பாகம்

வைத்தியரின் அறையில் பதற்றத்துடன் அமர்ந்திருந்த நிர்மலா வைத்தியரின் முகத்தில் தென்பட்ட சிந்தனைக் குறியினைக் கண்டதும் துணுக்குற்று திகைப்புற்றாள். இன்றைய நாளில் அவர் நிர்மலா அலெக்ஸ் இருவரினதும் மருத்துவச் சான்றிதழ் தருவதாகக் கூறியிருந்தார். அதைப்பெறவும் தமக்கு குழந்தை பிறக்காததுக்கான காரணம் என்ன என்பதை அறியவும் ஆவலும் பதற்றமுமாக வந்து அமர்ந்திருந்த தம்பதியினரின் கவலை தீர்ப்பான் என்று எண்ணியிருந்த அவர்களது மனச்சிந்தனையில் வைத்தியர் ரகுராமின் சிந்தனை தோய்ந்த முகம் கவனையைத் தோற்றுவித்ததில் வியப்பேதும் இல்லைத்தானே. அறைக்குள் நுழைந்த வைத்தியர் ரகுராம் இவர்களைக் கண்டதும் ஓ... மிஸிஸ் அலெக்ஸ் நீங்க வந்து கனநேரமாயிட்டுது என்ன? சொறி நான் ஒரு முக்கியமான கேஸ் பார்த்துக் கொண்டு இருந்துட்டன். சொறி சொறி வாங்கோ என்று கூறிக்கொண்டே தனது மேசையை நெருங்கினார். அவரிடமிருந்து தமது மெடிக்கல் றிசல்ட் என்னவென்று அறியும் விதமாக ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு டொக்டரின் மேசைக்கு அருகிருந்த கதிரைகளில் அமர்ந்து கொண்டனர். இருவரும் இவர்களது இந்த முண்டியடிப்பும் அவசரமும் Dr. ரகுராமுக்கு சிரிப்பினை வர வழைத்து விட ஓய்.... என்னப்பா அலெக்ஸ் நீரும் உமது மனைவியும் குழந்தைகள் போலத் தானே உங்களுக்கு குழந்தைகள் வேணுமோ என்று சிரித்தபடியே கூறினார்.

என்ன.... டொக்டர் நாங்களே எப்போதும் விளையாடிக் கொண்டிருக்க இயலுமோ... எங்களோடு விளையாட குட்டி மகனோ, மகளோ வேணும்தானே டொக்டர் என்றான். அலெக்ஸ்... இல்லை நண்பா.. சும்மா பகிடிக்குத்தான் சொன்னன்... டோண்ட் பீ சீரியஸ் என்று கூறினார். .. ரகுராம் இல்லை டொக்டர் என்ர பெண்சாதியிட பதற்றம் இதுவரை நான் காணாதது. நீங்க இன்று நல்ல முடிவாகச் சொல்ல மாட்டீங்களோ என்று அவள் மனம் படுகிறபாடு இருக்கே... அதை என்னால் சொல்ல முடியாது டொக்டர் என்றான். ஓ... நீங்க ரெண்டு பேருமே சோ..மெனி ரென்சன் தான் எனக்கு. நல்லாவே விளங்குது. அலெக்ஸ். நீங்க அவவைச் சொல்லுறியல் நீங்களே பயங்கர ரென்சனில தான் இருக்குறீங்க என்றது வெளிப்படையாகவே தெரியுது என்றாரார். ஓம்.. ஓம்.. டொக்டர் என்று தலையைச் சொறிந்தபடி வெட்கச் சிரிப்பை வெளியேற்றினான் அலெக்ஸ். இவர்கள் இருவரின் கோமாளித் தனத்திலும் தீயை வைக்க என்று உள்ளூரப் பொருமியபடி யாரும் பார்க்காவண்ணம் அலெக்ஸினது தொடையில் நறுக்கெனக் கிள்ளினாள் நிர்மலா. அத்தோடு கணவனை ஓர்முறை முறைத்தும் பார்த்தாள்... இதைக் கண்ணுற்ற அலெக்ஸ் டொக்டர் நீங்க இப்போ உடனே அவளுக்கு றிசல்ட் ( Result ) சொல்லிடுங்கோ அல்லது கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா என்று சொல்லி கண்ணாலேயே எரித்துவிடுவாள் என் பத்தினி என்றான். டொக்டரும் ஆ.... ஹா.... ஹா... எனச் சிரித்துக் கொண்டார். கணவனும் அவனது நண்பனான டொக்டரும் சேர்ந்து சிரித்த சிரிப்பினைப் பார்த்தும் கேட்டும் கொண்ட நிர்மலா தானும் மிகுந்த வெட்கச் சிரிப்பொன்றை உதிர்த்துக் கொண்டார். டொக்டர் இப்போது பேச ஆரம் பித்தார். சொறி மிஸிஸ் அலெக்ஸ். நாங்க எப்போதும் நண்பர்கள். அத்தோடு ஆண்கள். சும்மா பகிடி பண்ணத்தான் செய்வம். நீங்க யோசிக்காதையுங்கோ என்றவன் சிரிப்பைக் குறைத்துக் கொண்டவனாக ஓகே, அலெக்ஸ் மிஸிஸ் அலெக்ஸ்... நான் உங்கள் மேல செய்து கொண்ட ரெஸ்ட் றிப்போர்ட்டும் சரி நீங்க ஏற்கனவே செய்து வைச்சிருக்கிற றிப்போர்ட்டும் சரி உங்களில எந்தக் குறையும் இல்லை என்றுதான் காட்டுது. நான் நல்லா ஒருமுறைக்கு இருமுறை ரெஸ்ற் பண்ணிப் பார்த்துட்டன். அதோட றிப்போர்ட்டும் நல்லா வாசிச்சுப் பார்த்தாச்சு. எல்லாமே நோர்மல் தான். ஏன்தான் இன்னும் குழந்தை உண்டாகாமலுள்ளது என்கிறது தான் தெரியவில்லை என்றார். இதைக் காதால் கேட்டுக் கொண்டிருந்த நிர்மலாவின் கண்களில் கண்ணீர் குபுக்கென்று கட்டி நின்றது. ஓம்... டொக்டர் எல்லா டொக்டரும் பார்த்து இதைத் தான் சொல்லுகினம். நாங்களும் போகாத கோயில்லை. செய்யாத நேர்த்திக்கடன் இல்லை. ஆனால் குழந்தைதான் உண்டாகாமல் இருக்கிறது டொக்டர் என்றான் அலெக்ஸ் மனைவியின் தோள்களில் ஆதரவாக கை சேர்த்து அணைத்துக் கொண்டவன். அவளது கரத்தை மறு கரத்தால் நான் இருக்கிறேன் என உணர்த்தும் விதமாக அழுத்திக் கொடுத்தான்.

சரி.. சரி எதுக்கும் யோசிக்காதீங்கோ. நான் சில இயற்கை நடைமுறைகளை உங்களுக்குச் சிபாரிசு பண்ணுகிறேன். அதோட புதிதாக சில மருந்துகள் எழுதியிருக்கிறேன். அதை ரெகுலராகச் சாப்பிட்டு வாங்கோ. நிச்சயமாக நல்ல பலன் கிடைக்கும் என்றார். மிஸிஸ் அலெக்ஸ் கவலைப் படாதீங்கோ. உங்களில எந்தக் குறையுமில்லை. நீங்க உங்கட பாலன் யேசுவை மன்றாடுங்கோ. நிச்சயம் இந்த கிறிஸ்மஸ் பரிசாக அவரே உங்கட வயித்தில வந்து பிறக்கப் போறார் பாருங்கோ என்றார்.

ஓம் டொக்டர் நீங்க சொன்னது நடந்தது என்றால் இப்ப சீனி விக்குற விலையில ஒரு மூடை சீனி வாங்கி வாயில போட்டிடுவன் என்றாள் நிர்மலா. ஓம்.. ஓம் சமையலிலதான் நிற்குறீங்க நீங்க என்று சிரித்துக் கொண்ட ...ரகுராம் .... சரி.. சரி... சந்தோஷமாகப் போய்வாங்கோ என்று வழியனுப்பி வைத்தார். அலெக்சும் நிர்மலாவும் பதற்றமோ, பரபரப்போ இல்லை என்றாலும் இருவரிடமும் மகிழ்ச்சி மட்டும் தொலைந்து போய் வெறுமை உணர்வு ஒன்றைக் கொண்டவர்களாக வீடு வந்து சேர்ந்தார்கள்.

நாள்கள் வாரங்களாகின. வைத்தியரின் ஆலோ



மதிவதனி இராஜசேகரன்

சனைப்படி அவரால் சிபாரிசு பண்ணப்பட்ட மருந்துகளும் எடுக்கப்பட்ட அவ்வேளை அவர்களது தாம்பத்தியமும் மருத்துவரின் அறிவுரைப்படி இயற்கையோடு இணைந்த முறையிலேயே கைக்கொள்ளப்பட்டிருந்தது.

அன்று வழக்கம்போல படுக்கைவிட்டு எழமுற்பட்டுக் கட்டிலை விட்டு இறங்கி காலை நிலத்தில் ஊன்றிய நிர்மலாவுக்கு கட்டிலும் அருகிருந்த ஜன்னலும் ஒழுங்கில்லாதது போல சுழன்றடித்தது போலிருந்தது. கண்கள் இருட்டிக் கொண்டு வர விழுந்து விடாதிருக்க பக்கத்திலிருந்த கணவன் மேல் மெல்லச் சாய்ந்து கொண்டாள். அந்த விடிகாலை இருளில் ஆசை மனைவியின் ஸ்பரிசம் இதமாய் உடல்தடவ ஏய்... அம்மு... என்னடி அத்தான் மேல திடீர்ப்பாசம் இந்த நேரத்தில என்று கூறிக் கொண்டவன் மனைவியின் உடலைத் தன்பக்கமாகத் தூக்கி எடுத்தான். ஸ்... சும்மா விடுங்கோப்பா... கொஞ்சம் தலைச்சுற்றல் மாதிரி இருக்கென்று உங்கள் மேல சாய்ந்தால் இது தான் சாட்டு என்று கொஞ்சு றீங்க என்ன? என்றாள். தலைச்சுற்று என்ற மனைவியின் சொற் கேட்ட அலெக்ஸ் சடாரெனத் துள்ளி எழுந்து கட்டிலில் அமர்ந்து கொண்டான். அடி... இரா சாத்தி... என்னடி சொன்னனீ? தலைச்சுற்றோ? அடி நிம்மிக் குட்டி நீ உண்மையைச் சொல்லு உனக்கு இந்த மாசம் பீறியட் வந்துதோ என்றான்.... ஓர் கணம் திகைப்பில் ஆழ்ந்த நிர்மலாவின் முகத்தில் ஆயிரம் சூரியப் பிரகாசம் தோன்றயது... இஞ்சப்பா, இஞ்சருங்கோ... எனக் கணவனை அவள் விழிக்க மழலை ஒன்றை மடி மேல் சுமப்ப வனாக அவளைத் தூக்கி மடிமேல் வைத் துக் கொண்ட அலெக்ஸ் சொல்லடி.... செல்லம் என்ன என்று வினவினான். ஓம் அப்பா... நீங்க சொன்னது போல சுகமில்லாமல் வரயில்லையப்பா. ஒரு கிழமைக்கு மேல ஆயிட்டுது.... என்றாள். மகிழ்வு பொங்க ..... அம்மாடி.... என்ர செல்லமே.... நாம இப்பவே வெளிக்கிடுவம் வா டொக்டரிட்ட போய்க் கேட்டு வருவம் ஒருமுறை. பிறக்னன்சி ரெஸ்ட்டும் எடுத்துடுவன் என்று கூறிக் கொண்டு மனைவியைத் தூக்கிக் கொண்டு குளியலறை நோக்கி நடக்க ஆரம்பித்தான். 'என்னை இறக்கி விடுங் கோப்பா, நான் நடப்பன் என்றவளின் நெற்றியில் முத்தமிட்டவன் இப்போ நீ நடக்க வேண்டாம் நான் சொன்னா கேளு என்றபடியே அவளை குளியலறை வரை சுமந்து சென்றான்.

காலை 9 மணிக்கே Dr. ரகுராமின் பிரத்தியேக வைத்தியக் கூடத்தில் இருவரும் சென்று அமர்ந்து கொண்டனர். வைத்தியர் வர 10 மணியாகும். என்கிற தகவல் கூட இருவரது காதிலும் விழவில்லை. தமது எதிர்பார்ப்பு பூர்த்தியாகும் தினம் இதுவோ என எண்ணிக் கொண்டும் கற்பனைகள் ஆயிரமாயிரம் கண்முன் நர்த்தனமாடி வர பசியையும் மறந்தவர்களாக இருவரும் காத்திருந்தனர். அவர்களது ஆனந்த நிலை யைக் கலைப்பதாக இருந்தது அக்குரல் 'அம்மா... இஞ்ச பாருங்கோ Dr. ரகுராமைப் பார்க்கவோ வந்தனீங்கள்..... சரி இஞ்ச வாங்கோமா என்று கூப்பிட்டவள் சிறிய ரக போத்தல் ஒன்றினைக் கொடுத்து அம்மா நீங்க வோஷ்றூம் போய் யூரின் எடுத்துக் கொண்டு வாங்கோ என்று அனுப்பினாள். பின் தொடர்ந்த அலெக்ஸ் ஐ கண்ணால் அடக்கிய நிர்மலா சென்று அந்தப் பெண்மணி குறிப்பிட்ட வேலையைச் செய்து முடித்தாள்.... நிமிடம் ஓர் யுகமாகக் கழிவது போலிருந்தது இருவருக்கும்... சுமார் 10.15 மணியளவில் Dr. ரகுராம் தன்னுடன் கூட வந்த அந்த நபருடன் பேசியபடியே இவர்களைக் கடந்து போனார். அவர் தம்மைக் கவனிக்காதது இருவருக்கும் சிறிய கவலையைத் தந்தாலும் அவரது சேவையின் சுமை அந்தப் பாராமுகம் என்பது இருவருக்கும் தெரியும் என்பதால் அமைதி காத்தனர். வைத்தியரின் அறைக்குள் சென்ற அந்த வைத்தியசாலை தாதி வெளிவந்து மிஸிஸ் அலெக்ஸ் உங்களையும் உங்கட ஹஸ்பன்டையும் டொக்டர் கூப்பிடுகிறார் என்றாள். அவசரமும் ஆர்வமுமாக எழுந்த நிர்மலாவை அமைதிப்படுத்தி எழுந்து கொண்ட அலெக்ஸ் மெல்ல நடத்திக் கொண்டு அவரது கதவைத் திறந்தான். வாசலிலே ஆவலாகக் காத்திருந்த Dr. ரகுராம் நண்பன் அலெக்ஸை இறுக அணைத்துக் கொண்டே நண்பா... வாடா என்று என்றுமில்லாத உரிமையாக இறுக்கமாக அணைத்தபடியே வாழ்த்துக்களடா அலெக்ஸ் என 'டா' போட்டு அழைத்தான். நீ அப்பாவாகப் போறாய்டா நண்பா... என்கிற அந்த வரிகள் காதில் விழ முன்னமே அலெக்ஸ் Dr. ரகுராமை அணைத்தபடியே விம்ம ஆரம்பித்தான். இவர்கள் நிலை இப்படியென்றால் நிர்மலாவின் நிலை சொல்லிமாளாது ஆனந்தமும் பூரிப்புமாக நின்றவளின் கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருக்கெடுக்க ஆரம்பித்தது. விம்மலினூடே அவளது குரல் உடைந்து விக்கி விக்கி வர ஆரம்பித்தது. நண்பனின் பிடியிலிருந்து விடுபட்ட அலெக்ஸ் மனைவியை அப்படியே தூக்கி ஒரு சுற்றுச் சுற்றினான் வைத்தியசாலை டொக்டர் போன்ற யாவற்றையும் மறந்தவனாக....

வாழ்வில் வசந்தம் காணாத பாலைவனங்களாகக் கிடந்த இருவர் வாழ்விலும் பசுஞ்சோலை ஒன்று துளிர்க்க ஆரம்பித்திருந்தது. நிலவில்லா வெற்று மேகங்களைத் தமக்கிடையே நிலவைப் பிரசுரிக்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தன. கூடு கட்டத் தெரியா குயில் ஒன்று தன் முட்டை அடைகாக்க திடசங்கற்பம் பூண்டு குஞ்சு ஒன்றைப் பிரசவிக்க தன் கூட்டை கருசனையாகக் கட்ட ஆரம்பித்திருந்தது. இந்த மகிழ்ச்சியில் தாமும் பங்கு பெறவோ என்னமோ வானமும் மழையை சோ எனப் பொழிந்து விட மண்மகள் அதைத் தனக்குள் வாங்கி பூரித்து பூத்து நின்று கொண்டாள்.... மழையும் பூரிப்புடன் பொழிந்து கொண்டிருக்க காற்றின் அசைவில் தன்மொட்டு விட்ட அந்தச் செம்பருத்தி மரம் ஓர்முறை சிலிர்த்துக் சிரித்து நின்றது.....

**- சுபம் -**


**குயில்கூடு முற்றிற்று.**


காலைக்கதிர் Kalaikkathir


# மெல்பனில் மல்லிகை ஜீவா நினைவரங்கில் முருகபூபதியின் மூன்று நூல்களின் வெளியீடு

## 'அக்கினிக்குஞ்சு' ஆசிரியர் யாழ். பாஸ்கருக்கு மல்லிகை ஜீவா நினைவு விருது

முருகபூபதி




இலங்கையின் மூத்த எழுத்தாளரும் மல்லிகை ஆசிரியருமான டொமினிக்ஜீவா அவர்களினால் இலக்கிய உலகிற்கு 1970 களில் அறிமுகப்படுத்தப்பட்ட எழுத்தாளரும் சமூகப் பணியாளருமான முருகபூபதியின் 70 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வெளியாகும் கதைத் தொகுப்பின் கதை (சிறுகதை), நடந்தாய் வாழி களனி கங்கை(கட்டுரை), பாட்டி சொன்ன கதைகள் (சிறுவர் இலக்கியம் ) நூல்களின் வெளியீட்டு அரங்கு இம்மாதம் 19 ஆம் திகதி (19-12-2021) ஞாயிற்றுக்கிழமை மாலை 4-00 மணிக்கு ஆஸ்திரேலியா மெல்பனில் **Berwick Senior Citizens Hall (112 High Street, Berwick VIC 3806)** மண்டபத்தில் நடைபெறும்.


மெல்பன் வாசகர் வட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமதி சாந்தி சிவக்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வு, திருமதி மேகானந்தா சிவராசாவின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும்.

திருமதி சரண்யா மனோசங்கர் தமிழ்வாழ்த்துப் பாடுவார்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் பெருந்தொற்றினால் மறைந்த ஈழத்தின் மூத்த எழுத்தாளரும், மல்லிகை இதழின் ஆசிரியருமான டொமினிக் ஜீவாவின் உருவப்படத்திற்கு விளக்கேற்றி, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு, அவரைப் பற்றிய நினைவுரை நிகழ்த்தப்படும்.

எழுத்தாளர் டொக்டர் நடேசன் நினைவுரையாற்றுவார்.

சட்டத்தரணி செல்வத்துரை ரவீந்திரன் முருகபூபதியின் நூல்களை வெளியிட்டு வைத்து உரையாற்றுவார்.




கொழும்பு இலக்கியன் வெளியீட்டகத்தால் வெளியிடப்பட்ட பாட்டி சொன்ன கதைகள் (சிறுவர் இலக்கியம்) நூல் குறித்து செல்வன் ஹரீஜன் பசுபதிதாசனும், யாழ். ஜீவநதி வெளியீடாக வந்துள்ள கதைத் தொகுப்பின் கதை நூல் குறித்து திருமதி கலாதேவி பாலசண்முகன், திரு. அசோக்குமார் ஜனார்த்தனன், திரு. க. ராஜா ஆகியோரும், கொழும்பு குமரன் பதிப்பகத்தின் வெளியீடாக வந்துள்ள நடந்தாய் வாழி களனி கங்கை நூல் குறித்து கிறிஸ்டி நல்லரெத்தினமும் உரையாற்றுவர்.

**நடந்தாய் வாழி களனி கங்கை (கட்டுரை)**

இலங்கையின் வற்றாத ஜீவநதியான களனி



கங்கையின் தீர்த்ததில் நிகழ்ந்த வரலாற்றுச் செய்திகள், மற்றும் ஐதீகக்கதைகளின் பின்னணி, அங்கு ஏற்பட்ட அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்கள் பற்றிய விவரணச் சித்திரமாக படைக்கப்பட்ட களனி நதியின் கரையோரம் எங்கும் நடந்த சுவாரசியமான கதைகளைக் கூறும் நூல்.

நடந்தாய் வாழி களனி கங்கை இலங்கையில் அரங்கம் பத்திரிகையில் தொடராக வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

**கதைத் தொகுப்பின் கதை (சிறுகதை)**

புகலிட வாழ்வுக்கோலங்களை சித்திரிக்கும் 15 சிறுகதைகளைக் கொண்டிருக்கும் முருகபூபதியின் ஏழாவது சிறுகதைத் தொகுதியான கதைத் தொகுப்பின் கதை நூலில் ஒவ்வொரு கதை பற்றியும் 15 பேர் தமது வாசிப்பு அனுபவங்களையும் பதிவுசெய்துள்ளனர்.

**பாட்டி சொன்ன கதைகள்**

சின்னஞ்சிறிய வயதில் முருகபூபதியின் பாட்டி அவரை உறங்கவைக்கும்பொழுது சொன்ன **(Bed Time Stories)** கதைகளை உருவகக் கதைகளாக மாற்றி, இன்றைய நவீன காலத்திற்கு ஏற்ப எழுதப்பட்ட சிறுவர்களுக்கு மாத்திரமன்றி பெரியவர்களுக்குமான படைப்புகள். இந்த நூல் தமிழ் நாட்டில் வெளிவந்தமையால், அங்கு நூலகசேவைகள் திணைக்களம், சிறுவர் இலக்கிய வரிசையில் இதனைச் சேர்த்தது.

பாட்டி சொன்ன கதைகள் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட சில கதைகள், சிறுவர்களுக்கு ஆர்வமூட்டும் வகையில் சிறுவர் கதைகள் என்ற பெயரில் வண்ணப்படங்களுடன் இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது.

இதனை இலங்கை கல்வி அமைச்சு சிறுவர் இலக்கியவரிசையில் இணைத்துள்ளது.

இந்த அரங்கில் எழுத்தாளரும் நாடகக் கலைஞரும் நீண்ட காலமாக ஆஸ்திரேலியாவிலிருந்து அக்கினிக்குஞ்சு இதழை முதலில் அச்சு வடிவிலும் வெளியிட்டு, பின்னர் இணைய இதழாகவும் வடிவமைத்து வெளியிட்டுவரும் யாழ். பாஸ்கர் மல்லிகை ஜீவா நினைவு விருது பெறுகிறார்.





இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 218**

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**561. தமிழ் மக்களின் இந்தியாவுடனான கள யதார்த்தம் எதுவாக இருக்கிறது?**

தமிழ் மக்களின் அரசியலாலே அது குழம்பி, குழப்பப்பட்டு, குழம்பிப் போயிருக்கிறது.

மன்னன் அதியமானை வாழ்த்த ஔவையாரை கேட்ட போது அவர் “வரப்புயர நீருயரும்; நீர் உயர நெல் உயரும்; நெல் உயர குடி உயரும்; குடி



உயர கோன் உயர்வான்” என வாழ்த்தினார்.

1987 இந்தியா ஒப்பந்தத்தால் வந்த வரப்பை வளர்த்திருக்கலாம். அன்றைய தலைவர்களுக்கு இந்தியாவுடனிருந்த உறவில், சிங்கள பெரும்பான்மையின் எதிர்ப்பில் அறுவடையைக் கண்டிருக்கலாம்.

அது, அவர்களது அரசியலால் சிந்திய பாலாகப் போய்விட்டது. இன்னொரு விதத்தில் சேமித்து வைக்கப்பட்ட வெண்ணெய் இனி நெய்யாக்க முடியுமா என்ற கோலத்தில் இருக்கிறது.

தமிழ் மக்கள் இந்தியாவை தங்கள் தொப்புள் கொடி உறவுகளாப் பார்க்கிறார்கள். அப்படியே எதிர்பார்த்தார்கள். அப்படி நடந்தார்கள். தாங்கள் அடித்தாலும் உதைத்தாலும் சிங்கள மக்களுக்கெதிராக இந்தியா தங்களைக் கைவிடக் கூடாது; விடாது என நம்புகிறார்கள்.

ஒப்பந்தத்தை பற்றியும், அதன்பின் நடந்தவைகள் பற்றியும், அதன் தாக்கங்கள் எனவும் பந்தி பந்தியாக எழுத வேண்டியதில்லை. ஒன்று மட்டும் தெளிவானது. காலனியாக இலங்கையை ஆண்டு அந்த காலங்களில் இரண்டு இனங்களையும் இணைத்து, ஒற்றை ஆட்சியை



- ஒரு நாட்டை - உருவாக்கிய பிரித்தானியா உட்பட சர்வதேச நாடுகள் யாவும் இன்றும் அந்த இலங்கையை ஸ்ரீலங்காவாக, ஒரு நாடாக, ஒற்றையாட்சி அமைந்ததாக, சிங்கள மக்களை பெரும்பான்மையினராகவும் - மற்றோரை - தமிழர் உட்பட - சிறுபான்மையினராகவே கணிக்கிறது. இந்தியா மட்டும் தான் தற்போதைய ஸ்ரீலங்காவின் இறைமைக்கு மாறாக இரண்டுநாடுகள் என்பதை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், தமிழ் மக்களை சிறுபான்மையினராக கணிக்காது, ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் அதில் வாழும் இனக் குழுவாக தனித்தியல்புகளுடன் வாழ்ந்தது, அப்படியே வாழ அருகதையுள்ளது என்பதை ஏற்றது. ஒரு சுயநிர்ணய உரிமைக்கு ஏதுவான கட்டமைப்போ, தேசமென்பதோ, அதிகாரப்பரவலுக்கானதோ, அந்த மக்கள் சிறுபான்மையினரல்லர், தனித்துவமானவர்கள் என ஏற்று அதன் அடிப்படையில் பெரும்பான்மைக்கு குறிவைத்து இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது. போர் முடிந்த நாள்களிலிருந்தே தமிழ் அரசியல் பரப்புக்கள் மேலும் மேலும் பிரிந்து, பொது நிலைப்பாடு ஏற்படக் கூடிய சாத்தியக் கூறுகள் காணமுடியாதிருக்கிறது. கூட்டமைப்புக்குள் இருந்த முரண்பாடுகளால் தற்சமயம் செல்வம் அடைக்கலநாதனின் முன்னெடுப்பிலும் அவரது ரெலோவுடன் இணைந்தவையும் இந்தியாவிடம் 13 ஆம் சீர்திருத்தத்தை உடனடியாக அமுல்படுத்தக் கோரும் முனைப்புக்கள்



நடக்கின்றன. அதைவிட அவர்கள் சர்வதேச பிரதிநிதிகளின் வாசல்படிகளிலும் கூட்டமைப்பாக ஏறி இறங்குகிறார்கள்.

இடையில் கூட்டமைப்போ, இல்லை யோ தாங்கள் பிரதிநிதிகளாக சுமந்திரன் அமெரிக்கா சென்று வந்த பின் இந்தியா அவர்களை புதுடெல்லிக்கு பேச்சுக்கு வர தந்த அழைப்பு காற்றில் ஆடுகிறது.

இந்தியாவிலிருந்து சர்வதேசத்தை அணுகாமல் அதனை விலத்தி அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளை அணுகுவதா? எது யதார்த்தம்?

**562. எப்படியான அணுகுமுறை யதார்த்தம்?**

தொப்புள் கொடியான உறவாக இந்தியக் கடல் பரப்பில் ஆளுமையுடன், வல்லரசாக, சர்வதேச கணிப்புக்களை விலத்தி, இலங்கை பல்லின மக்களைக் கொண்ட நாடு, அதில் தமிழ் முஸ்லிம் மக்கள் வடகிழக்கு பிரதேசத்தில் காலம் காலமாக தனித்துவமாக வாழ்வதை உறுதிப்படுத்தியது இந்தியா. ஆனால் சுதந்திர தமிழ் ஈழம் அமையவே வேண்டும், அமைத்தே தீருவோம் என்ற முரண்பாடுகளால் உறவுகள் சீரழிந்தன. இன்றும் இந்தியா தமிழ் மக்களுக்கு நீதியாக, அனுதாபமாக நடக்கவில்லை, ஆதலால் அதனை நம்பி உலைவைப்பதில் பிரயோசனமில்லை என்ற சாரார் புலம் பெயரில் மிகுதியாகவும், நாட்டிலும் உண்டு. அவர்கள் இந்தியாவை விலத்தியே தீர்வுகளை



நோக்குகிறார்கள். இது யதார்த்தமற்றது.

“13 ஆம் திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டாலும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் வேர்களை மட்டுமல்ல, ஒரு குச்சியைத் தனும் பிடுங்கும் ஆற்றல் அதற்கு இருக்கப்போவதில்லை. இலங்கை ஒற்றையாட்சி அரசமைப்பில் வேரூன்றிய சட்ட விதிக்கூறுகள் என்று விவரிக்கப்படுகின்ற கூறுகளில் குறிப்பாக ‘பௌத்தத்துக்கு முன்னுரிமை’என்பது ஒற்றையாட்சி முறையின் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்குரிய ஒன்றாக இருக்கும் வரை எந்த மாகாண அரசின் நிரல் ஊடாகவோ அன்றேல் மத்தியும் மாகாணமும் ஒத்துப்போகவேண்டிய நிரல் ஊடாகவோ அமுலாக்கப்படக் கூடிய எந்த அதிகாரப்பரவலாக்கல் (devolution) மூலமாகவும் வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்படும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை தடுத்து நிறுத்துவது இலங்கையில் இருக்கும் நீதி மற்றும் மக்களாட்சி முறைகள் ஊடாக சாத்தியமற்றது. தடுத்து நிறுத்துவதை மட்டுமல்ல அதன் வீரியத்தை குறைப்பதும் இயலாத காரியம். அரசியல் யாப்புத் தொடர்பான களயதார்த்தம் இவ்வாறிருக்க, இந்தியா உள்ளிட்ட சர்வதேசத் தரப்புக்களிடம் உச்சப்பட்சக் கோரிக்கையை முன்வைப்பதற்கான தற்போதைய தருணத்தில், உக்கிப்போன 13 ஆம் திருத்தத்தை உடனடித் தீர்வாக இந்தியாவிடம் கோருவது கொள்கை சார் அரசியலுக்கு மட்டுமல்ல, இயல்பு அரசியலுக்கும் ஈழத் தமிழர் பார்வையில் முரணானது” – என தமிழ் நெற்றின் 2 நவம்பர் 2021 பதிவில் வந்ததின் ஒரு பகுதி.

அதே பதிவில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மேல் மேற்கொள்ளப்படும் இராணுவமயமாக்கல் இலங்கை ஆக்கிரமிப்பு அரசின் நில ஒருமைப்பாடு என்பதை நிறுவ தேசிய பாதுகாப்பு என்பதாக மேற்கொள்ளப்படுவதாகவும், அரசமைப்பில் வேரூன்றியுள்ள முக்கியமான சட்ட விதிக் கூறாக முழுத்தீவுக்குமான தனித்துவமான நில ஒருமைப்பாடு என்பது அமைந்திருக்கின்றது எனவும் குறிப்பிடுகிறது. இது யதார்த்தமான பார்வை.

தமிழ் பரப்புக்கள், முக்கியமாக கூட்டமைப்பு, சமஷ்டியில் அரசியல் செய்கின்றன. அப்படியானால் இந்தியா உள்ளிட்ட சர்வதேசத் தரப்புகளிடம் உச்சபட்சக் கோரிக்கையாக முன்வைக்கப்பட வேண்டியது என்ன? வைக்கப்பட்டுள்ளது என்ன? அப்படியான உச்சபட்சக் கோரிக்கை அமெரிக்காவுக்கும் மற்ற மேற்குலகத்தைய நாடுகளுக்கும் முன்வைக்கப்பட்டிருக்குமானால் அதனை இந்தியா முன்வைப்பதில் என்ன தயக்கம்? அமெரிக்காவின் அபிப்பிராயத்தின் பின் பேசலாம் என்ற இழுபறி ஏன்? ஒருமைப்பட்ட அல்லது ஒத்த நிலைப்பாடு தமிழ் அரசியல் பரப்புகளுக்கிடையே வருமா?

தமிழ் மக்கள் இன்று வெள்ளம் தங்கள் மூக்குகளுக்கு வந்தளவில் நிற்கிறார்கள். ‘ஒரு நாடு; ஒரு சட்டம்; ஒரு மக்கள் என்று கோட்டா பேசும் வகையில் மிக விரைவில் புதிய அரசமைப்பு நிறைவேற்றப்படுமானால் அது அவர்களை மூழ்கடித்து விடும். பெருகிவரும் வெள்ளத்தை நிறுத்துவதற்கான திராணி அவர்கள் கையில் இல்லை. மூச்சையாவது விடக்கூடிய இடைவெளிதான் தற்போது தேட வேண்டியது? போர் முடிந்த கையுடன் தமிழர் தகவல் நிலையத்தின் (லண்டனில் இருந்து இயங்குவது) ஏற்பாட்டில் தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகள் எல்லாம் சுவிற்ஸலாந்து அரசின் அனுசரணையுடன் ஜெனிவாவில் பேச்சுக்களுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இதில் எல்லாத் தலைவர்களும் டக்ளஸ், ராவூப் ஹக்கீம், மனோ கணேசன் உட்பட பங்கு பற்றி எழுந்திருக்கும் புதிய சூழலில் ஒத்த அடிப்படையில் எப்படியான முன்னேற்றங்களைத் தேடுவது என்பது பற்றி கலந்துரையாடினார். சுவிற்ஸலாந்து அரசின் பிரதிநிதி இதனில் பங்குபற்றியதை எதிர்த்து டக்ளஸ், சித்தார்த்தன் போன்றோர் ஸ்ரீலங்காவின் இறைமைக்கு எதிராக நோர்வே போன பின் தாங்கள் சுவிற்ஸலாந்துடன் இருந்து பேச முடியாதது என வெளியேறினார். ஆயினும் தொடர்ந்தும் ஒரு ஒருமித்த நிலைப்பாட்டிற்காக பாடு



படுவோம் என்று ஒத்துக் கொண்டார்கள்.

இன்று வரை ஒரு ஒத்த நிலைப்பாட்டில் அணுகி ஏதும் தீர்வை தராதமட்டில் “தைப்பொங்கலுக்கு முன் தீர்வு, தீபாவளிக்கு முன் தீர்வு, வருட இறுதிக்குள் தீர்வு” என்றெல்லாம் சொல்ல வந்த சுமந்திரன், சம்பந்தன் போன்றோர் ஜனநாயகத்தின் விழுமியமாகவும் கூர் முனையாகவும் விளங்கும் கோட்பாட்டில் பதவி விலகி, புதியவர்களுக்கு வழிவிட வேண்டும் என தமிழ் வின் ஊடகம் 11 டிசெம்பர் 2021 பதிவு தந்திருக்கிறது. இவற்றின் நிதர்சனம் என்ன?

(வளரும்.....)

# எல்லோரும் இறையெண்ணி இதையோதி இருந்திடுவோம்!

(திருவெம்பாவை நேற்றுத் தொடங்கியது. அதையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது)

மங்கையர்கள் கூடுகிறார் மனமுருகப் பாடுகிறார்
பொங்கிவரும் பக்தியினால் புலருமுன்னே எழும்புகிறார்
எழும்பாத மங்கையரை எழுந்துவர வேண்டுகிறார்
எம்பிரான் திறமுரைத்து எல்லோரும் பாடுகிறார்

ஆதியொடு அந்தமும் ஆண்டவனே என்கின்றார்
மாலறியா நான்முகனும் மலைக்கநிற்பா னென்கின்றார்
பரஞ்சோதி என்கின்றார் பெருங்கருணை யென்கின்றார்
எழுந்திருந்து வந்திடுவீர் ஈசன்புகழ் பாடிடுவோம்

முத்தன்ன வெண்ணகையீர் முகமகமலர்ந்து வந்திடுவீர்
அத்தன் ஆனந்தன் அவன்புகழைப் பாடிடுவோம்
சித்தம் அழகுடையீர் சிவனடியைப் பரவிடுவோம்
முத்தத்தில் நிற்கின்றோம் முகமலர்ந்து வாருங்கள்

விண்ணாகி நிற்கின்றான் மண்ணாகி நிற்கின்றான்
வேதாமாய் நாதமாய் வியாபித்தும் விரிந்துள்ளான்
கண்ணார் அமுதமுமாய் காணுகிறான் கண்ணுதலான்
காலையிலே நீராடிக் கழல்பணிவோம் எழுந்திடுவீர்

சிவன்புகழைப் பாடுகிறோம் செவியதனைக் கேட்கலையோ
அவன்புகழைக் கேட்காத அச்செவியும் நற்செவியோ
வன்செவியை வைத்திருக்கும் மாதரசே எழுந்திடுவாய்
மாதேவன் புகழ்பாடி மார்கழியில் மகிழ்ந்திருப்போம்

பகலிரவு எல்லாமே பரஞ்சோதி நினைப்பென்பாய்
படுக்கையினை அணைத்தபடி படுத்திருக்கும் மாயமென்ன
நேசமென்பாய் பாசமென்பாய் நினைப்பெல்லாம் இறையென்பாய்
எழுந்தோடி வந்திடுவாய் ஏத்திடுவோம் இறைநாமம்

தித்திக்கப் பேசினாய் திரும்பவும் உறங்குகின்றாய்
வண்ணக் கிளிமொழியார் வந்திட்டோம் வாசலுக்கு
கண்ணைத் துயின்று காலத்தைப் போக்காதே
கண்ணுக் கினியானைப் பாடிடுவோம் வந்திடுவாய்

கோழிகூவும் சத்தமும் குருகுகளின் சத்தமும்
காதினிக்குக் கேட்கலையா காலையென்று தெரியலையா
ஊழி முதல்வனாய் உயர்ந்துதிருக்கும் பரம்பொருளை
உணர்வுடனே பாடுகிறோம் உடனெழுந்து வந்திடுவாய்

பெருந்துயரைத் தீர்க்கும் பரம்பொருளைப் பாடுகிறோம்
பரம்பொருளே கடைத்தேற்றும் தீர்த்தமாய் ஆகியுள்ளான்
அவன்புகழைச் சேர்ந்திருந்து அனைவருமே பாடிப்பாடி
ஆடிடுவோம் நீர்நிலையில் அமைந்திடுமே நல்வாழ்வு

அப்பனைப் பாடுவோம் அம்மையையைப் பாடுவோம்
அருந்திறத்தைப் பாடுவோம் அருங்கலைத்தை பாடுவோம்
அறியாமை போயகல அனைவருமே சேர்ந்தொன்றாய்
அதிகாலை நீராடி அகமெண்ணிப் பாடிடுவோம்

ஆணாகிப் பெண்ணாகி அலியாக நிற்கின்றான்
அனைத்துக்கும் காரணமாய் ஆகியும் இருக்கின்றான்
அண்ணா மலையான் அருள்சுரக்கும் ஊற்றாவான்
அவன்புகழைப் பாடிநின்று அனைவரும் நீராடிடுவோம்

வாதவூர்ப் பிறந்தார் மணிமணியாத் தமிழ்கொண்டு
பேரறிவாம் பெரும்பொருளை பாடுகிறார் பக்தியுடன்
மார்கழியில் நீராட மங்கையர்கள் அழைக்கவென
திருவெம்பாப் பாட்டாக தித்திப்பாய் வழங்கியுள்ளார்

அதிகாலை வேளையிலே அனைவருமே எழுந்திருந்து
அரன்நாமம் அகமெண்ணி ஆடிடுவோம் நீர்நிலையில்
நீர்நிலையில் ஆடுகையில் நினைவெல்லாம் நிமலனிடம்
நிறைந்திருக்க வேண்டுகிறார் வாதவூர்ப் பெருமகனார்

மார்கழியை மனமிருத்தி ஆண்டாளும் வேண்டுகிறாள்
மார்கழியின் மகத்துவத்தை மனமிருத்தப் பாடுகிறாள்
சைவமும் வைஷ்ணவமும் சங்கமிக்கும் காலமாய்
மார்கழியை ஆக்கிவிட்டார் அடியார்கள் இருவருமே

திருப்பாவை திருவெம்பாவை திவ்வியமாய் இருக்கிறது
திருவருளை மனமிருத்த திருவமுதாய் வாய்த்திருக்கு
ஏலோரெம் பாவாய் இதயத்தில் அமர்கிறது
எல்லோரும் இறையெண்ணி இதையோதி இருந்திடுவோம்

**- மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா -**
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேண், ஆஸ்திரேலியா)

# அரசு காலம் கடத்தி சாட்சியங்களை அழிக்காமல் மக்களுக்கு நீதி கிடைக்கச் செய்தல் வேண்டும்!

## சிவசக்தி ஆனந்தன் வலியுறுத்தல்



அரசாங்கம் காலம் கடத்தி சாட்சியங்களை அழிக்காமல் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

காணாமல் போன உறவினர்களால் மேற்கொள்ளப்பட்ட தீப்பந்த போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் -

தங்களுடைய உறவினர்களுக்கு நீதி கிடைக்கவேண்டுமென கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். உண்மையில் தமிழ் மக்களுடைய தேசிய இனப்பிரச்சினை வெறுமனமே ஒரு மனித உரிமை பிரச்சினையாக இதுவரைகாலமும் யுத்தம் முடிந்து 12 வருடகாலமாக ஐ.நா. மனித உரிமைப் பேரவைக்கு இந்த மனித உரிமை பிரச்சினையாக முடக்கப்பட்டு இருக்கின்றார்கள்.

ஆனால் இந்த 12 வருடகாலத்திலே போரால் பாதிக்கப்பட்டு இருக்கக்கூடிய காணாமல் ஆக்கப்பட்டவர்கள், அரசியல் கைதிகள், நில அபகரிப்பு உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்கு இந்த 12 வருடகாலமும் இந்த மனித உரிமை பேரவைக்குள் எந்த ஒரு தீர்வும் காணமுடியாத நிலையில்தான் தள்ளப்பட்டு இருக்கின்றது.

ஆகவே, தமிழ் மக்கள் நீண்டகாலமாகத் தமக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக இந்த மனித உரிமை பேரவையில் எதிர்பார்த்திருந்தது வெறும் ஏமாற்றமாக இருக்கின்றது.

அதுமட்டுமல்லாமல் தமிழ் மக்களுடைய இந்தப் பிரச்சினையை வெறுமனமே சிறுபான்மைக்குழுக்கள் என்று இந்த மேற்குலக நாடுகள் அதற்கு குறுகிய வட்டத்துக்குள் இதை நோக்குகின்ற நிலைமை இருக்கின்றது. அது தொடர்ந்து நீடிக்கப்படாமல் இருக்க வேண்டுமாக இருந்தால் சர்வதேச சமூகம் இந்த போர் பாதிப்பால் ஏற்பட்டு இருக்கின்ற அத்தனை பிரச்சினைகளுக்கும் ஒரு தீர்வு காண்பதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு கடுமையான ஓர் அத்தத்தைப் பிரயோகிப்பதற்கான ஒரு காலகட்டம் வந்திருக்கின்றது.

ஆகவே, இந்த காணாமல் ஆக்கப்பட்டு இருக்கும் உறவுகள் இன்றைக்கு நூற்றுக் கணக்கானவர்கள் தங்களுடைய உறவினர்களை இழந்திருக்கின்றார்கள். ஆகவே, அரசாங்கம் காலம் கடத்தி சாட்சியங்களை அழிக்காமல் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதோடு, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உயிரோடு இல்லையாக இருந்தால் பகிரங்கமாக அரசாங்கம் மன்னிப்பைக் கோரவேண்டும். அதற்கு அடுத்தகட்டமாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதற்கான ஒரு நிலைமைக்கு செல்வதற்கு சர்வதேச சமூகம் இலங்கை அரசுக்கு ஒரு முழுமையான ஓர் அழுத்தத்தை கொடுக்க வேண்டும். - என மேலும் தெரிவித்தார்.

# தமிழரின் இதயபூமி தீவிரமாக சிங்கள மயப்படுத்தப்படுகிறது

## வட மாகாண முன்னாள் உறுப்பினர் காட்டம்

தமிழர் தாயகத்தின் இதயபூமியான முல்லைத்தீவு மாவட்டத்தில் சிங்கள குடியேற்றங்கள் ஆரம்பத்தில் மணலாறு பிரதேசத்தில் உருவாக்கப்பட்டு தனியான சிங்கள பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டதுடன் வெலிஓயா என பெயரும் மாற்றப்பட்டது என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

யுத்தத்துக்கு பின்னரான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் சிங்கள குடியேற்றங்களும், காணி அபகரிப்புக்களும் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றன.

மகாவலி வலயத்தின் மூலம் கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, தென்னமரவடி, நாயாறு போன்ற தமிழர்களின் பூர்வீகக் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் வட்டுவாகல், நந்திக்கடல், ஆறுமத்தான் குடியிருப்பு போன்ற பகுதியில் கரையோரத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களமும் காணிகளை அபகரித்துள்ளன.

அத்தோடு கடற்படை முகாம் விரிவாக்கத்துக்கும் அபகரிக்க தீவிர முயற்சி மக்கள் எதிர்ப்பின் மத்தியில் தொடர்கிறது.

தற்போது மாந்தை கிழக்குப் பகுதியில் சிராட்டிக்குளம், நட்டாங்கண்டல், துணுக்காய், அமைதிபுரம் போன்ற பிரதேசங்களில் 23 ஆயிரத்து 803 ஏக்கர் தமிழர்களின் பயிர்ச் செய்கை மற்றும் கால்நடை வளர்ப்புக்குரிய பூர்வீகக் காணிகள் வனவளத் திணைக்களத்தால் அபகரிப்பதற்கான திட்டங்கள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தகாலப் பகுதியில் அபகரிக்கப்பட்ட காணிகளுக்கு மேலதிகமாக 2010 ஆண்டுக்குப் பின் இன்று வரை 56 ஆயிரம் ஏக்கருக்கு அதிகமான தமிழர்களின் பூர்வீகக் காணிகள் அபகரிக்கப்பட்டு தீவிரமாக சிங்களக் மயப்படுத்தப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# துரைவி விருதுக்கான ஆக்கங்கள் கோரல்!

2021 ஆம் ஆண்டில் இலங்கையில் தமிழில் வெளிவந்த கட்டுரைத் தொகுப்பு மற்றும் மொழிபெயர்ப்பு நூல்களில் சிறந்தவைத் தேர்ந்தெடுக்கப்பட்டு துரைவி விருது வழங்கப்படவுள்ளது. தெரிவு செய்யப்படும் சிறந்த நூல் ஒன்றுக்கும் தலா 10 ஆயிரம் ரூபாவும், விருதும், சான்றிதழும் வழங்கப்படும்.

கட்டுரைத் தொகுப்பு - கட்டுரைத் தொகுப்பு கலை இலக்கிய விமர்சனம், ஆய்வு, கோட்பாடுகள் போன்ற வகையான ஆக்கங்கள் கொண்ட நூலாக இருத்தல் வேண்டும். மொழிபெயர்ப்பு நூல் - மொழிபெயர்ப்பு நூலின் மூலப்படைப்பு உலகின் எந்த மொழியிலும் வெளிவந்தாகவும் இருக்கலாம். மொழிபெயர்க்கப்படும் நூல் ஆக்க இலக்கியமாக இருத்தல் வேண்டும். விதிகள் - விருதுக்காக அனுப்பப்படும் நூல் இலங்கையில் பதிப்பிக்கப்பட்டு இலங்கையில் ISBN இலக்கம் பெற்று இருத்தல் வேண்டும். நூலாசிரியர் - மொழிபெயர்ப்பாளர் இலங்கையில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். நூலாசிரியர் -மொழிபெயர்ப்பாளர் பற்றிய விவரக் கொத்து, சமர்ப்பிக்கப்படும் நூலுடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.


ஒவ்வொரு நூலின் மூன்று பிரதிகள் அனுப்பப்படல் வேண்டும். நூலின் பிரதிகள் நேரடியாகவோ தபால் மூலமாகவோ 2022ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதி முன்னதாக கீழ் காணும் விலாசத்திற்கு சேர்க்கப்படல் வேண்டும். முகவரி Duraivi, c/o Vijaya General Stores,85, Wolfendhal Street, Colombo-13.

மேலதிகத் தொடர்புகளுக்கு - மேமன்கவி - 0778681464, துரைவி அலுவலகம் - 011-2327011,

மின்னஞ்சல் - duraivi1931@gmail.com

# வரவு - செலவுத் திட்டம் விவாதத்தின்போது நிதி அமைச்சர் கடன் கேட்டு இந்தியாவில்!

## சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிசெ.12

வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படும்போதே நிதி அமைச்சர் கடன் கேட்டு இந்தியாவுக்கு செல்ல வேண்டிய நிலையில் இருக்கின்றார். வரவு - செலவுத் திட்டத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக கடனுக்காக அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அல்லல்பட்டுத் திரிகின்றார் . எனவே, தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வைக் காண்பதுதான் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக இருக்க முடியும் எனத் தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நிதி அமைச்சு, பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட செயற்படுத்துகை அமைச்சு, நிதி மூலதன சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு, சமுர்த்தி உள்ளக பொருளாதார, நுண்நிதிய ,சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

பலமான. செல்வாக்குமிக்க ,அரசின் செல்வாக்குள்ள ,நிதி விடயத்தில் மட்டுமல்லாது ஏனைய விடயங்களிலும் கூட பலமாகவுள்ள அமைச்சர்தான் பஸில் ராஜபக்ஷ. யுத்த காலத்தில் வட,கிழக்கிலே இருக்கக்கூடிய இடங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படும்போது அந்த இடங்களுக்கு நேரடியாகச் சென்று அந்தப் பகுதிகளை பார்வையிட்டு அங்கு தேவையான அபிவிருத்திகள் பற்றி அங்கிருக்கக்கூடிய அரசியல் சமூக, அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடி செயல்பட்டு வந்துள்ளார். ஆனால் இன்று அவரின் செயல்பாடுகள் இன்றுள்ள நிதி நெருக்கடியினாலோ என்ன காரணத்தினாலோ கொஞ்சம் குறைவாகவே பலரும் பார்க்கின்றனர்.

வடக்கு,கிழக்கு 30,40 வருடங்களாக யுத்தத்தைக் கண்டுவந்த இடம். ஏறக்குறைய ஒரு லட்சம் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் அங்குள்ளன. அவர்களுக்கான வருமானங்கள் மிகவும் குறைவாகவே உள்ளன. முக்கியமாக இந்த கொரோனா காலத்திலே உலகம் முழுக்க கஷ்டங்கள் உள்ள காலத்திலே நாளாந்த வருமானங்களை பார்த்திருக்கின்ற மக்கள் மத்தியிலே இந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மிக கஷ்டத்தில் வாடிக்கொண்டிருக்கின்றார்கள். இவர்களுக்கு ஏதாவது ஒரு வழியிலே அரசு உதவ வேண்டும்.

குடிசைக் கைத்தொழில், ஆடுவளர்த்தல், மாடு, கோழி வளர்த்தல் போன்றவற்றை அவர்களுக்கு கொடுக்கலாம் என பலர் கூறுகின்றனர். கொடுக்கலாம் அதில் பிரச்சினையில்லை. ஆனால் அதில் உள்ள பிரச்சினை என்னவென்றால் இன்று பல மக்களிடம் ஆட்டிறைச்சி, கோழி இறைச்சி வாங்கி சாப்பிட பணம் இல்லை. இது தான் உண்மை. ஆகவே, அவர்கள் உற்பத்தி செய்யக் கூடிய கைத்தொழில் பொருள்கள் எல்லாம் வீடுகளில் தேங்கிக்கிடக்கின்றன. இவற்றை சந்தைப்படுத்துவதற்கு உதவி செய்வதுடன் அவர்கள் அன்றாட வாழ்க்கையைக் கொண்டுநடத்துவதற்கு ஏதாவது ஒருவழியில் அமைச்சர் உதவ வேண்டும்.

வரவு - செலவுத் திட்டத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக கடனுக்காக அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அல்லல்பட்டுத் திரிகின்றார். இந்த வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படும்போதே அவர் கடன் கேட்டு இந்தியாவுக்கு செல்ல வேண்டிய நிலையில் இருக்கின்றார் . இந்தியா. சர்வதேச நாணய நிதியம், பங்களாதேஷ் இப்படி பல நாடுகள் ,அமைப்புகளிடம் கடன் கேட்கும் நிலைமையிலேயே இருக்கின்றோம்.

இவ்வளவு பொருளாதார நெருக்கடி வந்தமைக்கு மிக முக்கிய காரணம் இந்த அரசோ கொரோனாவோ மாத்திரமல்ல. ஏறக்குறைய சுதந்திரம் பெற்ற காலம் முதல் இந்த நாட்டில் இருக்கக்கூடிய ஸ்திரமில்லாத தன்மை. இது தேசிய இனப்பிரச்சினையால் வந்த பிரச்சினை. இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு பல மாநாடுகள், கூட்டங்கள், ஒப்பந்தங்கள் எல்லாம் செய்யப்பட்டன. ஒவ்வொரு ஒப்பந்தங்களும் கிழித்தெறியப்பட்டன. இந்த நாட்டுக்குள் மாத்திரமல்ல நாட்டுக்கு வெளியே கூட நடந்தன. நான் இந்த அரசை மட்டும் கூறவில்லை. ஒவ்வொரு அரசும் ஒவ்வொரு முயற்சிகளை எடுக்கும் பொது அதனை எதிர்க்கட்சிகள் குழப்புவதே வழமை. திம்பு, ஒஸ்லோ பேச்சுகள், ஒப்பந்தங்கள் நடைமுறைப் படுத்தப்படாமையே இந்த ஸ்திரமற்ற நிலைமைக்குக் காரணம்.

இந்த யுத்தம் முடிந்தவுடன் புலம்பெயர் தமிழர்கள் பலர் இங்கு நிதிகளைக் கொண்டுவந்து முக்கியமாக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க விரும்பினர். ஆனால் அதற்கு பெரும் தடைகள் ஏற்படுத்தப்பட்டன. இன்று கூட மீன்பிடித்துறையில் முதலீடு செய்யப் பலர் தயாராக இருக்கின்றபோது கூட, அமைச்சர் அதனை உடனடியாக செய்ய கையெழுத்துப் போட்டுக்கொடுத்தால் கூட தடைகள் ஏற்படுத்தப்பட்டு அந்த முதலீடு செய்ய வந்தவர்கள் திரும்பி சென்ற நிலைமைகளையும் நாம் பார்த்துள்ளோம். மீன்பிடி அமைச்சர் எடுத்த முயற்சிகள் எல்லாம் இந்த தடைகளால் பின்தள்ளப்படுகின்றன. இவ்வாறான பிரச்சினைகளை நிவர்த்தி செய்தால்தான் இந்த நாடு பொருளாதார ரீதியில் முன்னேற்றம் காணும் .

முதலாவதாக தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வைக் காண்பதுதான் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படியாக இருக்க முடியும். இந்த நாட்டில் வாழும் ஒவ்வொரு குடிமகனும் தான் இந்த நாட்டின் பிரஜை என்பதை உணரக்கூடிய வகையில் இருந்தால் இன்று கூட வெளிநாடுகளிலிருந்து முதலீடுகளை செய்ய பலர் தயாராகவுள்ளனர். அதற்கு முதலீடுகளை செய்ய ஏற்படுத்தப்படும் தடைகள், முதலீடுகள் பாதுகாக்கப்படுமா என்ற அச்சம் என்ற இரண்டையும் நீங்கள் இல்லாமல் செய்ய வேண்டும். அமைச்சர் பஸிலுக்கு இதற்கான திறமை, வல்லமை இருக்கின்றது. அத்துடன் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதிலும் அவரின் ஆதிக்கம் நிச்சயம் இருக்கும். - என்றார்.

# சேதனப் பசளை உற்பத்தி செய்யும் விவசாயிகளை ஊக்குவிப்பதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பம்!

## வியாழேந்திரன் தெரிவிப்பு

நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு தேசிய கொள்கைகள் திட்டத்துக்கமைய இலங்கை ஹதபிம அதிகார சபையின் ஊடாக சேதனப் பசளை உற்பத்தி செய்யும் விவசாயிகளை ஊக்குவிப்பதற்கான வேலைத்திட்டம்சிறந்தமுறையில்முன்னெடுக்கப்பட்டுவருவதாக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் சேதனப் பசளை உற்பத்தி திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, நுவரெலியா மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் சேதனப் பசளை உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் விவசாயிகளுக்கு உபகரணங்கள் வழங்குவதற்கான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 6 ஆயிரத்து 303 விவசாயிகளுக்கு உபகரணங்கள் எதிர்வரும் நாள்களில் வழங்கப்பட உள்ளன.

இந்த வேலைத் திட்டத்தில் கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் 405 விவசாயிகளுக்கும், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவு 499 விவசாயிகளுக்கும், மண்முனை



தெற்கு மற்றும் எருவில்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 429 விவசாயிகளுக்கும், கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 1,108 விவசாயிகளுக்கும், மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 641 விவசாயிகளுக்குமாக முதற்கட்டமாக 3,801 விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

# தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் போட்டியில் வலி.வடக்கு பிரதேச செயலகம் முதலாமிடம்!



அகில இலங்கை ரீதியில் திறன்கள் அபிவிருத்தி, வேலைவாய்ப்பு மற்றும் தொழில் உறவுகள் அமைச்சால் தேசிய ரீதியாக பிரதேச செயலகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட 2020 ஆம் ஆண்டுக்கான பெறுபேறுகள் கடந்த வெள்ளிக்கிழமை தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தால் வெளியிடப்பட்டிருந்தது.

அதன் அடிப்படையில் தேசிய உற்பத்தித்திறனின் உயர் விருதான முதலாம் இடத்துக்கான விருதை வலி. வடக்கு, தெல்லிப்பழை பிரதேச செயலகம் தனதாக்கியது.

யாழ். மாவட்டத்தில் பிரதான மீள்குடியேற்ற பிரதேச மக்களைக் கொண்ட தெல்லிப்பழை பிரதேச செயலகம் பாரியளவிலான அபிவிருத்தித் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றி வருகின்றமையுடன் பிரதேச செயலரின் உயர்ந்த ஆளுமை மிக்க நிர்வாகத்திறமையுடன் கூடிய நேர்ப்பாங்கான வழிகாட்டலின் கீழ் வினைத்திறனுடன் பணியாற்றி வரும் உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவைக்கு சான்றாக இந்த விருது அமைகின்றது.

# ‘எண்ணம் போல் வாழ்க்கை’ நிவேதா சிவராஜாவின் நூல்

யாழ்ப்பாணம், டிசெ. 12

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மனிதம் அமைப்பின் பிரதான செயற்பாட்டாளர் நிவேதா சிவராஜாவின் முதலாவது நூலான ‘எண்ணம் போல் வாழ்க்கை’ இன்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை 2 மணிக்கு கல்லுண்டாயில் அமைந்துள்ள இளைஞர் தேசிய சேவைகள் மன்றத்தில் வெளியீடு செய்யப்படவுள்ளது.

குறித்த நூலானது மனிதம் அமைப்பினூடாக சமூகம் சார்ந்த செயற்பாடுகளின் அனுபவப் பகிர்வாக அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையின் நீதித்துறையிலும் திட்டமிட்ட இனவாதப் போக்கு!

## கஜேந்திரகுமார் எம்.பி. காட்டம்



திருகோணமலையில் சிங்களவர்களுக்காக தனிச் சிங்களத்தில் வழக்கு நடத்துவதற்காக தனியான நீதிவான் நீதிமன்றம் உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழர்கள் வாழும் கந்தளாய் நீதிமன்றில் நீதிமன்றப் பதிவுகள் அனைத்தும் சிங்கள மொழியிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. கொழும்பில் 50 வீதமான வழக்குகள் தமிழர்கள் தொடர்புடயவையாக இருந்த போதும், சிங்களத்திலேயே அனைத்து ஆவணங்களும் பேணப்படுகின்றன. இதற்குத் திட்டமிட்ட இனவாதமே காரணமாகும்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நீதி அமைச்சு மீதான வரவு – செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்படி அரசின் இனவாத நடவடிக்கையை அம்பலப்படுத்தினார்.

அவரது உரையின் முழு விவரம் வருமாறு –

நீதி அமைச்சு மீதான விவாதத்தில் எனது உரையை ‘இந்நாட்டின் நீதித்துறைக்கு இருக்கின்ற மதிப்பு குறித்த ஓர் உதாரணத்துடன் ஆரம்பிக்கின்றேன்.

மிருசுவிலில் நடந்த கொடூரமான படுகொலையின் குற்றவாளியாக இந்த நாட்டின் அனைத்து சட்ட நடைமுறைகளின் ஊடாகவும், இந்த நாட்டின் அதி உயர் நீதிமன்றின் ஊடாகவும் குற்றவாளியாக இனங் காணப்பட்ட ஒருவரை, ஜனாதிபதி தலையிட்டு அவரைப் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்து அனுப்புகின்ற அளவுக்குத் தான் இந்த நாட்டின் நீதித்துறையின் மதிப்பு இருக்கிறது.

தெரிந்தவர்கள், நண்பர்கள், கொலையாளிகள் போன்றோர்கள் மன்னிப்பளித்து இலகுவாக விடுதலை செய்யப்படுகிறார்கள்.

உண்மையில் பொதுமன்னிப்பு என்பது, ஒரு நாட்டில், ஏற்கனவே இருக்கின்ற சட்டமானது குறித்த ஒரு வழக்கில் உண்மையான நீதியை வழங்க முடியாதவாறு ஒரு நிரபராதி பாதிக்கப்பட்டிருக்குமிடத்து, அதனால் எதிர்காலத்தில் அந்த சட்டம் மாற்றத்துக்குள்ளாக வேண்டிய நிலை இருக்குமிடத்து, அந்த சட்டத்தின் கீழ் குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவரை தண்டனையில் இருந்து மன்னிப்பளிப்பதற்காகவே இந்த பொதுமன்னிப்பு என்பது பாவிக்கப்படுவது உலக வழமை என்பது நீதி அமைச்சருக்கு நன்கு புரியும். ஆனால் அது உலக வழக்கு மட்டும் தான், இலங்கைக்கு அது மறுபக்கமாகச் செயற்படுகிறது.

அதாவது இலங்கையில் கொலைகாரர்களையும் கொள்ளைக்காரர்களையும் குற்றமிழைத்த உங்கள் நண்பர்களையும் அல்லது உங்கள் இனத்தவர்களையும் விடுவிக்க மட்டுமே இந்த பொதுமன்னிப்பு வழங்கப்படுகிறது மோசமான நிலைமை காணப்படுகிறது.

அதே போல, நீங்கள் சிறைச்சாலை மறுசீரமைபுக்கென ஓர் இராஜாங்க அமைச்சரை வைத்திருக்கிறீர்கள். சிறைக்கைதிகள், குற்றவாளிகளோ அல்லது குற்றம் சுமத்தப்பட்ட சந்தேக நபர்களோ என்பதற்கு அப்பால், அவர்கள் முற்று முழுதாக அரசின் பாதுகாப்பில் அரசின் கட்டுப்பாட்டில் இருப்பவர்கள். அவர்களை பராமரிப்பதற்கென ஒரு தனியான அமைச்சு இந்நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது.

ஆனால் அந்த குறித்த சிறைச்சலை மறுசீரமைப்பு சிறைக்கைதிகள் நல்வாழ்வு அமைச்சர் சிறைச்சாலைகளுக்குள் தன்னிச்சையாக நுழைந்து சிறைக் கைதிகளை அச்சுறுத்தி இருந்தார். அதனையடுத்து அந்த இராஜாங்க அமைச்சர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டு குறித்த அமைச்சுப் பதவியிலிருந்து இராஜினாமா செய்திருப்பதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்திருந்தது.

ஆனால், தனது அமைச்சுப் பதவியைப் பாவித்து இத்தகைய குற்றத்தை இழைத்தமையை ஒப்புக்கொண்ட பின்னரும் அந்த இராஜாங்க அமைச்சர் இந்த அரசில் ஏனைய துறைகளுக்கான இராஜாங்க அமைச்சராக தொடர்ந்தும் இருக்கிறார். அதுமட்டுமல்லாது, இன்று நீதித்துறை தொடர்பாக இந்த சபை விவாதித்துக் கொண்டிருக்கின்ற, இந்த சமயத்திலே குற்றம் இழைத்த குறித்த இராஜாங்க அமைச்சர் திமிருடன் இந்த சபைக்கு வந்ததோடல்லாது நீதித்துறைக்குப் பொறுப்பான அமைச்சருக்கு அருகிலேயே உட்கார்ந்துமிருந்தார். அது இந்த நாட்டின் நீதித்துறையின் நிலைமையை தெளிவாகப் படம் பிடித்து காட்டுகிறது. குற்றம் பகிரங்கமாக உறுதிப்படுத்தப்பட்ட குற்றவாளிகள் இன்று வெளியே விடப்பட்டு இருக்கிறார்கள்.

ஆனால், இந்த நாட்டில் நீங்கள் கொண்டு வந்த சட்டங்கள் மூலம் கூட குற்றங்கள் உறுதிப்படுத்தப்பட முடியாதவர்கள், பயங்கரவாதத் தடைச் சட்ட சந்தேக நபர்கள் இன்று நீண்டகாலமாக சிறைகளுக்குள்ளே தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பயங்கரவாத தடைச் சட்டம் சர்வதேச நியமங்களுக்கேற்ப மாற்றி உருவாக்கப்பட்டால் கூட பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ், இங்கு ஒரு கைதியையும், சந்தேகநபராகக்கூட தடுத்துவைக்கப்பட்டிருக்க முடியாது. அனைவருமே விடுதலை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

நீங்கள் உருவாக்கிய சட்டத்தின் மூலமே குற்றவாளியாக இனம் காணப்படாதவர்கள் உள்ளே, ஆனால் குற்றவாளிகள் என இனங்காணப்பட்டு இந்த சபைக்குள்ளே வருவதற்கே அருகதையற்ற குற்றவாளிகள் உள்ளே இருக்கிறார்கள்! இது தான் இந்த நாட்டின் நீதியின் நிலைமை. இதை நீதித்துறை அமைச்சரும் நன்கு அறிவார்.

அடுத்து, இந்த நாட்டிலே கைதிகளைப் பராமரிப்பதற்கென 10 வேலை முகாம்களும், அதில் இரண்டு திறந்த வெளி முகாம்களும், இளைஞர்களுக்கான சீர்திருத்தப் பள்ளிகளும் இருக்கின்றன. ஆனால் இவற்றில் ஒன்று கூட வடக்கு கிழக்கில் இல்லை.

நான் அண்மையில் ஓய்வுபெற்ற சில தமிழ் நீதிபதிகளுடன் நீதித்துறை தொடர்பான அவர்களின் கரிசனைகள் – கவலைகள் – தொடர்பாக சில தெளிவுபடுத்தல்களை பெற்றுக்கொள்வதற்காக அவர்களுடன் உரையாடியிருந்தேன்.

திருகோணமலையில் ஆரம்பகாலத்திலிருந்து, ஒரு நீதிவான் நீதிமன்று மட்டுமே இருந்தது, பின்னர் அது இரண்டாக அதிகரிக்கப்பட்டது. இரண்டாவதாக கொண்டு வரப்பட்ட நீதிமன்று சிங்களத்தில் மட்டும் இயங்குகின்ற ஒரு நீதிமன்றம். அங்கு குறித்தளவு சிங்களவர்கள் இருக்கின்றமையால் அந்த சிங்கள நீதிமன்று அங்கு தேவையென நியாயப்படுத்தப்பட்டது.

அது போலவே வடக்கு கிழக்கு தமிழர் பகுதியில் அமைந்திருப்பதால் தமிழில் இயங்கி வந்த கந்தளாய் நீதிமன்று, இப்போது சிங்கள நீதிமன்றாக இயங்குகிறது. அங்கு இருக்கின்ற அனைத்து பதிவுகளும் சிங்கள மொழியிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. கந்தளாயில் சிங்களவர்கள் கணிசமான எண்ணிக்கையில் வாழ்வதால் அது சிங்கள மொழியில் இயங்குவதாக காரணம் கூறப்பட்டது. காலங்காலமாக அரச குடியேற்றத் திட்டங்கள் மூலம் திட்டமிட்டுக் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களுக்காக அந்த நீதிமன்று தமிழ் மொழியில் இருந்து சிங்கள மொழிக் கையாளுகைக்கு மாற்றப்பட்டது.

ஆனால் கொழும்பில் உள்ள நீதிமன்றுகளில் அரைவாசிக்கும் மேற்பட்ட வழக்குகள் தமிழர்கள் சம்பந்தப்பட்டவையே. ஆனால் கொழும்பு நீதிமன்ற நடைமுறைகள் பதிவுகள் உட்பட அனைத்துமே சிங்களத்திலேயே நடைபெறுகின்றன. கொழும்பு, கல்கிசை மட்டுமல்ல, நுவரெலியா அவிசாவளை, ஹற்றன், வலப்பனை போன்ற இடங்களில் அநேகமாக முழுவதுமே தமிழர்கள் செறிந்துவாழும் பகுதிகளில் கூட நீதிமன்ற நடைமுறைகள் தனிச் சிங்களத்தில் மட்டுமே நடைபெறுகின்றன. ஏன் இந்த இரட்டை நிலைப்பாடு.

தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு கிழக்கில் உருவாக்கப்பட்டுள்ள நீதிமன்ற நடைமுறைகள் தமிழில் நடைபெறவேண்டியதாக இருக்கையில், வடக்கு கிழக்கில் குடியேறியுள்ள சிங்களவர்களின் வசதிக்காக சிங்கள் மொழி மூல நீதிமன்றங்களை உருவாக்கி இருக்கிறீர்கள். அப்படியாயின் அதே நியாப்பாடுகளின் அடிப்படையில் தெற்கில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் தமிழர்களின் வசதிக்காக ஏன் தமிழ் மொழி மூல நீதிமன்றுகளை நீங்கள் உருவாக்கவில்லை? ஆனால் அப்படிச் செய்ய மாட்டீர்கள். ஏனெனில் இதன் பின்னால் உங்களுக்கு ஒரு நீண்டகாலத் திட்டம் இருக்கிறது, அதன் அடிப்படையிலேயே நீங்கள் இவ்வாறாகச் செயற்படுகின்றீர்கள்.

வடக்கு கிழக்கில் இருக்கும் நீதிமன்றுகளில் திட்டமிட்டப்பட்ட வகையில் சிங்களவர்கள் பணிக்கு அமர்த்தப்படுகிறார்கள். வவுனியா நீதிமன்றத்தில் நீதிமன்ற உத்தியோகத்தர்கள், பணியாளர்களாக சிங்களவர்களே பெருமளவில், நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் அங்கிருக்கும் நீதிபதி தமிழ் மொழி பேசுபவர், ஆனால் பெரும்பாலான நீதிமன்ற, உத்தியோகத்தர்கள் சிங்களம் பேசுபவர்களாக இருப்பதால், நீதிமன்ற குறிப்புகளையும் தீர்ப்புகளை சிங்கள் மொழியிலும் எழுதுமாறு அந்த தமிழ் பேசும் நீதிபதி கேட்கப்படுகிறார்.

இது ஒரு திட்டமிடப்பட்ட முறையில் நடைபெறுகின்ற செயற்பாடு. இங்கு, நீதிக்குப் பொறுப்பான அமைச்சே நீதியற்ற முறையில் செயற்படுகிறது. இவற்றையெல்லாம் எப்போதாவது திருத்தியமைக்க முடியுமென்றால் அது தனிப்பட்ட ரீதியில், அலி சப்றி போன்றவர்களால் தான் முடியுமே தவிர அரச இயந்திரத்தின் மூலம் அரச அமைச்சு மூலம் ஒருபோதும் திருத்த முடியாது, ஏனெனில் இது திட்டமிடப்பட்ட ஒரு செயல்முறை.

அரச நீதி சேவை ஆணைக்குழு வடக்கு கிழக்குக் கூட, அனைத்து சுற்றறிக்கைகளையுமே சிங்கள மொழியிலேயே அனுப்புகிறது. இப்படியாக நீதித் துறையினது வெளிப்படையாகவே இரட்டை நிலைப்பாடு எடுத்து செயற்படுகின்றமை மிகத் தெளிவானது.

## மோட்டார் சைக்கிள் விபத்தில் ஆலயக் குருக்கள் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், டிசெம்பர் 12

மோட்டார் ஜைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த ஆலயக் குருக்கள், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ். ஆனைக்கோட்டையைச் சேர்ந்த இரத்தினசபாபதி ஜெகதீஸ்வரக் குருக்களே (வயது - 70) உயிரிழந்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை மதியம் ஆலயப் பூஜையை முடித்துக் கொண்டு தனது மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிய வேளை, எதிரே வந்த மற் றுமொரு மோட்டார் சைக்கிள் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த குருக்கள் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் ‘காலைக்கதிர்’ சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.